விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே



சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 மாசி 07 செவ்வாய்க்கிழமை (19.02.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 062

## பலாலியிலிருந்து நேரடியாக உலக நாடுகளுக்கு விமான சேவைகள்

### இலங்கையின் மூன்றாவது சர்வதேச விமான நிலையம் - அரசு அறிவிப்பு

(கொழும்பு)

பலாலி விமான நிலையத்தை 20பில்லியன் ரூபாய் செலவில் இலங்கையின் மூன்றாவது சர்வதேச விமான நிலையமாக அபிவிருத்தி செய்ய அரசு திட்டமிட்டுள்ளது. இதன் கட்டுமானப் பணிகள் இந்த ஆண்டு நடுப்பகுதியில் ஆரம்பிக்கப் படும் என அரசு தெரிவித்துள்ளது.

அத்துடன், பலாலி விமா்ன நிலையத்திலிருந்து இந்தியா, அவுஸ்ரேலியா, சீனா, ஜப்பான், மத்திய கிழக்கு மற்றும் ஐரோப்பிய நாடுகள் உள்ளிட்ட 7 ஆயிரத்து 200 கிலோ மீற்றர் சுற்றுவட்டத்துக்குள் 23☛

## மோ.சைக்கிள் மோதியதில்

### வயோதிப பெண் பலி

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளில் மோதுண்டு படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்ட வயோதிபப் பெண் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார். இச்சம்பவத்தில் முல்லைத்தீவு வீதி முதலாம் கட்டை பரந்தனைச் சேர்ந்த 62 வயது 23☛

## ரயிலுடன் மோதி படுகாயமடைந்தவர்

### சிகிச்சை பலனின்றி நேற்று மரணம்

(யாழ்ப்பாணம்)

ரயிலுடன் மோதி படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்ட இளைஞர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை இரவு 7.45 மணி 23☛

## சர்வதேச விசாரணை வேண்டும்

# இலங்கைக்கான அழுத்தத்தை ஐ.நா அதிகரிக்க வேண்டும்

### சுவிஸ் தூதரகத்தில் 17 நாட்டு தூதுவர்களுக்கு மகஜர் கையளிப்பு

**(கொழும்பு) இலங்கைக்கான அழுத்தத்தை ஐ.நா அதிகரிக்க வலியுறுத்தியும் சர்வதேச விசாரணையை கோரியும் வடக்கு, கிழக்கில் எட்டு மாவட்டங்களின் பிரதிநிதிகள் நேற்று கொழும்பில் அமைந்துள்ள சுவிஸ் தூதரகத்தில் 17 நாட்டு தூதுவராலயங்களின் பிரதிநிதிகளை சந்தித்து மகஜர் கையளித்துள்ளனர்.**

உள்நாட்டு யுத்தம் இடம்பெற்ற போது வடக்கு மற்றும் கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபை இலங்கைக்கான அழுத்தத்தை அதிகரிக்க வேண்டும் என இதில் கோரப்பட்டுள்ளது.

அத்தோடு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் கண்டறிய சர்வதேச விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் எனவும் அந்த மகஜரில் கோரப்பட்டுள்ளது. 23☛

## மின்சாரம் தாக்கியதில் ஒருவர் உயிரிழப்பு

### சுதுமலை அம்மன் கோவிலில் பரிதாபம்

(யாழ்ப்பாணம்)

கோயில் வேலையின் போது மின்சாரம் தாக்கியதில் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்றுக் காலை 8 மணியளவில் சுதுமலை 24☛

## தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு எதிராக உயர் நீதிமன்றில் மனு

(கொழும்பு)

தேர்தல்கள் ஆணைக்குழுவினால் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படாதுள்ளமைக்கு எதிராக உயர் நீதிமன்றில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

உண்மை ஆய்வு அமைப்பின் ஒருங்கிணைப்பாளரான சட்டத்தரணி ப்ரேம்நாத் சீ தொலவத்தவினால் இந்த மனு நேற்று உயர்நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய உள்ளிட்ட ஆணைக் 23☛

## யுத்தக் குற்றச்சாட்டுக்களை ஒருபோதும் ஏற்கமாட்டோம்

- வாசுதேவ நாணயக்கார



(கொழும்பு)

நாட்டில் யுத்தக்குற்றங்கள் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்களை 23☛

## எதிர்வரும் 25-ம் திகதி வடக்கில் பூரண ஹர்த்தாலுக்கு அழைப்பு

### உணர்வுபூர்வமாக பங்களிக்குமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடக்கு தழுவிய ரீதியில் எதிர்வரும் 25 ஆம் திகதி முழு அடைப்புப் போராட்டத்தை நடத்தவும், கிளிநொச்சியில் பாரியளவிலான கவனயீர்ப்புப் போராட்டத்தை நடத்துவதற்கும், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் திட்டமிட்டுள்ளனர்.

எதிர்வரும் 25 ஆம் திகதி வடபகுதியில் பூரண கதவடைப்புடன் கூடிய ஹர்த்தலை அனுஷ்டிப்பதுக்கு முழுமையான உணர்வுபூர்வமான பங்களிப்பினை வழங்குமாறு கிளிநொச்சி மாவட்டத்தின் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சங்கத்தினர் கோரியுள்ளனர்.

அத்துடன் அன்றைய 23☛

### இராணுவத்தைப் பாதுகாக்க

## ஜெனிவாவில் தீர்மானம் ஒன்று கொண்டு வருவோம்

### மகிந்த அணியினர் தெரிவிப்பு

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ தலைமையில் அமையவுள்ள அரசாங்கத்தில், தேசியம் மற்றும் இராணுவத்தினரின் சுயகௌரவத்தை பாதுகாக்கும் வகையிலான ஜெனிவாத் தீர்மானமொன்றை கொண்டுவருவோம் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் தலைவர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில், நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற செய்தி 24☛

### வடக்கில் 30 வருட கால யுத்தத்தால்

## சிறு கைத்தொழில் தாழ்ந்த மட்டத்திலே காணப்பட்டது

### வர்த்தக பிரதி அமைச்சர் புத்திக பத்திரன

(கொழும்பு)

வடமாகாணத்தில் இடம் பெற்ற 30 வருட கால யுத்தம் காரணமாக தமது தொழில் வளர்ச்சி மிகவும் பூச்சியத்தை விட தாழ்ந்த மட்டத்திலே காணப்பட்டது. இதனால் தங்களின் தொழில் வளர்ச்சியை அதிகரிப்பதற்காக நாம் இந்த முயற்சியை மேற்கொண்டிருக்கின்றோம் என கைத்தொழில் மற்றும் வர்த்தக பிரதி அமைச்சர் புத்திக பத்திரன தெரிவித்தார்.

மன்னார்-மற்றும் வவுனியா மாவட்டங்களில் உள்ள 23☛

## ஆலய வழிபாட்டில் ஈடுபட்டிருந்த முதியவர் மரணம்

(கரணவாய்)

ஆலயத்தில் வழிபாட்டில் ஈடுபட்டிருந்த வயோதிபர் ஒருவர் மயங்கி வீழ்த்து மரணமடைந்த சம்பவம் துன்னாலை மத்தி அல்லையம்பதி என்னும் இடத்தில் இடம்பெற்றது.

நேற்று திங்கட்கிழமை காலை அதே இடத்தை சேர்ந்த சுப்பிரமணியம் பரமலிங்கம் (வயது -78) என்ற வயோதிபர் தமது வீட்டிற்கு 23☛

### இராணுவம் போர்க்குற்றம் புரிந்தது

## இறுதி போர் தொடர்பில் சந்திரிகா வெளிப்படப் பேச்சு

(கொழும்பு)



இலங்கையின் இறுதிக்கட்டப் போரில் எவர் போர்க்குற்றம் இழைத்திருந்தாலும் அவர்கள் தண்டிக்கப்படத்தான் வேண்டும். அதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமார 23☛

## விற்பனைக்கு

முரசுமோட்டையில் 40 பனைகள் கொண்ட 5 ஏக்கர் வயலும், வளவும் விற்பனைக்கு உண்டு.
தரகர் தேவையில்லை.
விலை பேசி தீர்மானிக்கப்படும்.

**தொடர்புகளுக்கு : 024 312 7721**




## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
**021 221 7603**
**021 567 1532**


# 31ஆம் நாள் நினைவுகூரலும் நன்றி நவிலலும்

## அமரர் சங்கரப்பிள்ளை புஷ்பாகரன்

(அஞ்சலகர் முள்ளியான்)



20.01.2019 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் சங்கரப்பிள்ளை புஷ்பாகரன் அவர்களது அந்தியேட்டிக் கிரியைகள் 17.02.2019 அன்று ஞாயிற்றுக்கிழமை கீரிமலையில் நடைபெற்றது.

அன்னாரின் பிரிவுச் செய்தி கேட்டு நேரிலும் தொலைபேசியிலும் இரங்கலைத் தெரிவித்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதோடு. தொடர்ந்து 19.02.2019 செவ்வாய்க் கிழமை இன்று அன்னாரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் தங்களைக் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(C-5557)

**ஐயனார் கலட்டி வீதி, பருத்தித்துறை. தகவல் : குடும்பத்தினர்.**

உ
சிவமயம்

# அறநெறிக்காவலர் கந்தையா நீலகண்டன் (சட்டத்தரணி) ஞாபகார்த்த

# முதலாவது ஆண்டு நினைவுப் பேருரை



(அகில இலங்கை இந்து மாமன்ற முன்னாள் தலைவர்,
திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணிச்சபை முன்னாள் தலைவர்.
மனிதநேய அமைப்பின் முன்னாள் செயலாளர்)

**காலம் :** 20.02.2019 (புதன்கிழமை)
மாலை 4.00 மணி

**இடம் :** இந்துமாமன்ற பிராந்திய பணிமனை.
211/17, கோவில் வீதி, நல்லூர்.

### தலைமை

செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன்
(உப தலைவர், அகில இலங்கை இந்து மாமன்றம்)

### பிரார்த்தனை உரை

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
(முதல்வர் நல்லை ஆதீனம்)

ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள்
(ஹவாய் சைவ ஆதீனம், அமெரிக்கா)

### நினைவுப் பேருரை

ஓய்வுநிலை பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
(முன்னாள் துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்)

**விடயம்** போருக்குப்பின் இலங்கையில் சைவ சமயம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

(7580)

அகில இலங்கை இந்துமாமன்றம் - பிராந்திய பணிமனை, நல்லூர், சிவபூமி அறக்கட்டளை.


After A/L's Join PLATINUM PARTNER No.1 BTEC Centre in Sri Lanka

UTP University Transfer Program



20 வருடகால தொழிற்துறை சார்ந்த உயர்கல்வித்துறையில் நம்பகமும், சிறப்புமிக்கதுமான BCAS Campus உடன் இணைந்து UGC அங்கீகாரம் கொண்ட UK பட்டப்படிப்புகளை தொடருங்கள்...

Pearson BTEC

**BTEC HND in BUSINESS MANAGEMENT**
- Management
- Human Resource Management
- Marketing

UGC Recognized TVEC Approved




- அனுபவம் வாய்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் குழாம்.
- இலகு தவணைக் கட்டணம்.
- வசதியான நவீன கற்றல் முறை மற்றும் சூழல்.
- பிரசித்தி மற்றும் பெறுமதி வாய்ந்தது.

20 YEARS

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

MADHU 0777 692318
SANCHU 0777 102131
INTAKE NOW ON

BCAS Jaffna Campus,
#. 16, Point Pedro Road, Jaffna

BCAS Ranked "Platinum Partner" No.1 once again

Best Employer Brand Award 2017 | No.1 BTEC Centre in Sri Lanka 2016 | Best Academic & Industry Interface 2016 | Academic Impact Winner 2016 | No.1 Higher Education Provider 2014 | BTEC Gold Partner 2013 | Performance Excellence Award 2011 | Fastest Growing BTEC Centre 2010

(C-5555)

021 221 9910 | 011 259 7217 info@bcas.lk | www.bcas.lk


# மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் பரமலிங்கம்



அல்லையம்பதி துன்னாலை கரவெட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவரும் முன்னாள் மட்டக்களப்பு முருகன் ஸ்ரோஸ் உரிமையாளரும் தற்போதைய மந்திகை (CAS) கணக்காய்வு நிறுவன முகாமையாளரும் ஆகிய சுப்பிரமணியம் பரமலிங்கம் அவர்கள் 18.02.2019 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற முத்துக்குமாரு - மகேஸ்வரியின் அன்பு மருமகனும், பரமேஸ்வரி, அமரர் கனகரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சாந்தகுமாரி அவர்களின் அன்புக் கணவரும், ரஜனி, வதனி, சுதனி, மதனி, சுஜந்தன் ஆகியோரின் அன்புத்தந்தையும், ரவிச்சந்திரன், சதீஸ்குமார், மனோகர், சுதர்சினி ஆகியோரின் அன்பு மாமனாரும், பவித்திரா, ராகுலன், ராகவன், அர்ச்சுன், வனிஜா, சசிவர்னன், பிருத்திகன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.02.2019) செவ்வாய்க் கிழமை மாலை 3.00 மணிக்கு நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் மந்திகை கருகம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அல்லையம்பதி, துன்னாலை, கரவெட்டி.** (C-5554) **தகவல் : குடும்பத்தினர் மகன் - சுஜந்தன்**

# மின்மாற்றியில் மோதி பேருந்து விபத்து நால்வர் உயிரிழப்பு; எண்மர் படுகாயம்

## நேற்று அதிகாலை வேளை பயங்கரம்





(கொழும்பு)

வவுனியாவிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த பேருந்து ஒன்று விபத் துக்குள்ளானதில் 4 பேர் உயிரிழந்ததுடன், மேலும் பலர் படுகாயம் அடைந் துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மஹவெவ, சிலாபம் பகுதியில் பேருந்து மின் மாற்றி ஒன்றில் மோதியமையால் இந்த விபத்து நிகழ்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று அதிகாலை 4.30 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

தனியார் பேருந்தின் சாரதியால் வேகத்தை கட்டுப்படுத்த முடியாமையால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

8 பேர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-7)

# அரசியலமைப்பு சபை குறித்த விவாதம் வியாழக்கிழமை

## உதய கம்மன்பில தெரிவிப்பு

(கொழும்பு)

அரசியலமைப்பு சபை குறித்த விவாதம் நாளை மறுதினம் வியாழக்கிழமை இடம்பெறவுள்ளதாக சபாநாயகர் அறிவித்துள்ளார் என பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.



அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை முன்னிறுத்த தேசியவாத மற்றும் இடதுசாரி கட்சிகள் இணக்கம் வெளியிட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## 11 தமிழர்கள் கடத்தல் வழக்கில் மற்றுமொரு

# கடற்படைப் புலனாய்வு அதிகாரியை கைது செய்யும் முயற்சியில் சி.ஐ.டி.

(கொழும்பு)

இலங்கைக் கடற்படையின் முன்னாள் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொடவின் நெருங்கிய உதவியாளராக இருந்த கடற்படை அதிகாரி ஒருவரை, கைது செய்யும் முயற்சியில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் இறங்கியுள்ளனர்.

கொழும்பில் 11 தமிழர்களைக் கடத்தி கப்பம் கோரி, காணாமல் ஆக்கிய சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்திலேயே, குறித்த அதிகாரியை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நெருங்கியுள்ளனர்.

கடற்படைப் புலனாய்வுப் பிரிவில் இவர் பணியாற்றி வருகிறார். கடந்த 6 ஆம் திகதி விசாரணைக்காக அவரை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அழைத்திருந்தனர்.

எனினும், அவரை பாதுகாப்பு காரணங்களுக்காக எதிர்வரும் 25 ஆம் திகதி வரை குற்றப் புலனாய்வுப் பிரிவில் முன்னிலைப்படுத்த முடியாது என்று கடற்படையின் சார்பில் பிரதி சொலிசிற்றர் ஜெனரல் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு அறிவித்துள்ளார்.



சிரேஷ்ட கடற்படை அதிகாரியின் பாதுகாப்புடன், இம்மாதம் 26 ஆம் திகதி சந்தேக நபரான புலனாய்வு அதிகாரியை குற்றப் புலனாய்வுப் பிரிவிடம் முன்னிலைப்படுத்துமாறு, கடற்படையிடம் கேட்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, 11 பேர் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட வழக்கில் தான் கைது செய்யப்படுவதை தடுக்கக் கோரி, அட்மிரல் கரன்னகொட அடிப்படை உரிமைகள் மனுவைத் தாக்கல் செய்யத் தயாராகி வருகிறார் என சட்டதரணி ஒருவர் தெரிவித்துள்ளார்.

11 பேர் கடத்தி காணாமல் ஆக்கப்பட்ட சம்பவத்துடன் முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் கரன்னகொடவுக்கு தொடர்பு இருப்பதற்கான சாத்தியங்கள் இருப்பதான முக்கியமான சான்று அறிக்கையை கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருந்த போதும் அவரைக் கைது செய்வதற்கு இன்னமும் குற்றப் புலனாய்வுப் பிரிவு அனுமதி கோரவில்லை என்று சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

இந்தக் கொலைகள் தொடர்பாக தனக்கு முன்கூட்டியே தெரிந்திருக்கவில்லை என்று தம் மீதான குற்றச்சாட்டுக்களை அட்மிரல் கரன்னகொட கடந்த ஆண்டு கூறியிருந்தார்.

அவரது முன்னாள் கடற்படைச் செயலர் ரியர் அட்மிரல் ஷேமல் பெர்னாண்டோ உள்ளிட்ட பல சாட்சிகள் இந்தக் குற்றச்சாட்டு தொடர்பாக குற்றப்புலனாய்வுப் பிரிவில் சாட்சியம் அளித்த பின்னரே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

2018 செப்டெம்பர் 17ஆம் திகதி குற்றப் புலனாய்வுப் பிரிவினர் சமர்ப்பித்த அறிக்கையில், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் இலங்கை கடற்படையின் கிழக்குப் பிராந்திய தலைமையகத்திலுள்ள கன் சைட் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது தெரியும் என்று ரியர் அட்மிரல் ஷேமல் பெர்னாண்டோ, ஒப்புக் கொண்டுள்ளார் என்று கூறப்பட்டிருந்தது.

அவர்களை விடுவிக்குமாறு அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா, அட்மிரல் கரன்னகொடவை அணுகிய பின்னர், கடத்தப்பட்ட இளைஞர்களின் பெற்றோருடன் தொடர்பாளராக தான் இருந்ததையும் அவர் ஏற்றுக் கொண்டுள்ளார்.

எனினும், கடத்தல் மற்றும் கொலைகள் தொடர்பாக தான் உடனடியாக அறிந்திருக்கவில்லை என்று அட்மிரல் கரன்னகொட கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இந்தியா செல்ல முற்பட்டவர் விமான நிலையத்தில் மரணம்

(கொழும்பு)

இந்தியா நோக்கிப் பயணிப்பதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வருகை தந்த நபர் ஒருவர் திடீரென உயிரிழந்துள்ளார்.

நேற்று அதிகாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதுடன் 52 வயது இராமநாதபுரம் பகுதியைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்று அதிகாலை 2 மணியளவில் இந்தியா நோக்கிப் பயணிப் பதற்காக குறித்த நபர் வருகை தந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது திடீரென சுகவீனமுற்ற குறித்த நபர் அருகில் இருந்த கம்பம் ஒன்றை பிடித்து கீழே விழுந்து உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவம் தொடர்பில் இந்தியத் தூதரகத்திற்கு அறிவித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கட்டுநாயக்க விமான நிலையப் பொலிஸார் இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# வெளிப்படைத் தன்மையுடன் இலங்கை செயற்பட வேண்டும்

## அமெரிக்கா மீண்டும் வலியுறுத்தல்

(கொழும்பு)

இலங்கை ஏனைய நாடுகளுடன் வெளிப்படைத்தன்மையுடன் உறவுகளைப் பலப்படுத்திக்கொள்ள வேண்டுமென அமெரிக்கா மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய அந்நாட்டு இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மத்திய ஆசியப் பிராந்தியத்திற்கான பதில் முதன்மைச் செயலாளர் தோமஸ் வஜ்டா இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் கருத்து தெரிவித்த அவர், "அமெரிக்காவைப் போன்று, பிராந்தியத்திலும் உலகம் முழுவதிலும் எல்லா நாடுகளுடனும் இலங்கை பரஸ்பர நலன்களை அளிக்கக் கூடிய ஒத்துழைப்பைக் கட்டியெழுப்பும் என்று நாங்கள் முழுமையாக எதிர்பார்க்கின்றோம்.



இருப்பினும், அத்தகைய உறவுகள் அனைத்தும் வெளிப்படையானதாகவும் உண்மையானதாகவும் சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்புக்களுக்கும் நீண்டகாலம் பயனுள்ளதாகவும் இருக்க வேண்டும்.

பொருளாதார ஒத்துழைப்புக்களையும் முதலீடுகளையும் இருதரப்பு வணிகத்தையும் இந்தோனேசியா- பசுபிக்கில் விரிவுபடுத்துவதன் மூலம் குறிப்பாக இலங்கை மற்றும் அமெரிக்காவுக்கிடையில் புதிய வாய்ப்புக்கள் கிடைக்கும்.

மேலும் இந்தப் பிராந்தியத்தில் இலங்கை பாரிய செல்வாக்கை கொண்டுள்ளது. இந்த வாய்ப்புக்களிலிருந்து அது கணிசமான நலன்களைப் பெறவுள்ளது" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# பிளவுபடாத நாட்டுக்குள்ளேயே அதிகாரப் பகிர்வு வழங்கப்படும்

## ஐ.தே.க. திட்டவட்டம்

(கொழும்பு)

பிளவுபடாத நாட்டுக்குள்ளேயே அதிகாரப் பகிர்வு வழங்கப்படும் என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

கொழும்பு சேதவத்தையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் இதனைக் கூறியுள்ளார்.

"பிளவுபடாத நாட்டுக்குள்ளேயே அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படும். ஆனால் இதனை மையப்படுத்தி பலர் தேவையற்ற பல விடயங்களைக் கூறிவருகின்றனர்.

அவர்கள் அடுத்த ஜனாதிபதி தேர்தலை இலக்கு வைத்து பல கதைகளைக் கூறி வருகின்றனர்.

அவர்களுக்கு தேர்தலில் வெற்றி பெற முடியாது. அதனை அறிந்தே பொய்ப் பிரசாரங்களை மேற்கொள்கின்றனர்.

பௌத்தர்கள் மத்தியில் இனவாதத்தையும் குரோதத்தையும் பரப்பி அவர்கள் அதில் குளிர்காய்கின்றனர். குறிப்பாக சிங்களவர்களை



தமிழர்களுக்கு எதிராக தூண்டிவிடுகின்றனர்.

இதன்மூலம் அவர்கள் பௌத்த மக்களின் வாக்குகளை கொள்ளையடிக்க முற்படுகின்றனர்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# மந்தனா மீண்டும் 'நம்பர் 1'


ஸ்மிருதி மந்தனா

பெண்களுக்கான ஐ.சி.சி., ஒருநாள் போட்டி தரவரிசையில் இந்தியாவின் ஸ்மிருதி மந்தனா 'நம்பர் 1' இடத்தில் நீடிக்கிறார்.

சர்வதேச ஒருநாள் போட்டியில் சிறந்து விளங்கும் வீராங்கனைகளுக்கான தரவரிசை பட்டியலை சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.) டுபாயில் வெளியிட்டது.

இதில் துடுப்பாட்ட தரவரிசையில் இந்திய வீராங்கனை ஸ்மிருதி மந்தனா, 774 புள்ளிகளுடன் முதலிடத்தை தக்கவைத்துக் கொண்டார். அடுத்த இரண்டு இடங்களில் அவுஸ்திரேலியாவின் எலிஸ் பெர்ரி (719 புள்ளி), மேக் லானிங் (715) உள்ளனர்.

இந்திய ஒருநாள் அணித் தலைவி மிதாலி ராஜ், 709 புள்ளிகளுடன் 5வது இடத்தில் நீடிக்கிறார். மற்ற இந்திய வீராங்கனைகளான தீப்தி சர்மா (626 புள்ளி), ஹர்மன்பிரீத் கவுர் (608) முறையே 17, 19வது இடத்தில் உள்ளனர்.

பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசையில் இந்தியாவின் யூலான் கோஸ்வாமி, 685 புள்ளிகளுடன் 'நம்பர் 3' இடத்தில் தொடர்கிறார். முதலிரண்டு இடங்களில் பாகிஸ்தானின் சனா மிர் (718 புள்ளி), அவுஸ்திரேலியாவின் மேகன் (707) உள்ளனர். மற்ற இந்திய வீராங்கனைகளான தீப்தி சர்மா (635 புள்ளி), பூணம் யாதவ் (634) முறையே 8, 9வது இடங்களில் உள்ளனர்.

'சகலதுறை வீரர்களுக்கான' தரவரிசையில் இந்தியாவின் தீப்தி சர்மா, 397 புள்ளிகளுடன் முதன்முறையாக 3வது இடத்துக்கு முன்னேறினார். ஏற்கெனவே இந்தியா சார்பில் சுபாங்கி குல்கர்னி (ஜன., 1986), பூர்ணிமா (டிச., 2000), யூலான் கோஸ்வாமி (ஜூலை 2015) ஆகியோர் அதிகபட்சமாக 2ஆவது இடம் பிடித்திருந்தனர்.

# படம் அகற்றம்: பாக், கோபம்!


திரையிட்டு மறைக்கப்பட்டுள்ள இம்ரான் கானின் புகைப்படம்

'இந்திய கிரிக்கெட் மைதானங்களில் பாகிஸ்தான் வீரர்கள் படங்களை அகற்றியது வருந்தத்தக்கது. இதுகுறித்து ஐ.சி.சி.,யிடம் முறையிடுவோம்,' என பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

காஷ்மீரின் புல்வாமா பகுதியில் பயங்கரவாதிகள் நடத்திய தற்கொலைப்படை தாக்குதலில் 40 சி.ஆர்.பி.எப். வீரர்கள் மரணமடைந்தனர். இதனால் பாகிஸ்தானை உலக அரங்கில் இருந்து தனிமைப்படுத்தும் வேலைகளில் இந்தியா ஈடுபட்டுள்ளது.

தவிர மும்பை கிரிக்கெட் கழக 'ரெஸ்டாரண்ட்' பகுதியில் சுவற்றில் இருந்த பாகிஸ்தான் கிரிக்கெட் அணி முன்னாள் அணித் தலைவரும் தற்போதைய பிரதமர் இம்ரான் கானின் புகைப்படத்தை திரையிட்டு மறைத்தனர்.

இதேபோல பஞ்சாப் கிரிக்கெட் சங்கத்தின் மொகாலி மைதானத்தில் இருந்த பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்களின் படங்கள்ள அகற்றியது.

இதுகுறித்து பாகிஸ்தான் கிரிக்கெட் சபை மானேஜிங் இயங்குவர் வாசிம் கான் கூறுகையில், 'விளையாட்டு, அரசியல் இரண்டையும் எப்போதும் தனித்தனியாக பார்க்க வேண்டும். இரு நாடுகள், மக்களுக்கு இடையே முக்கிய பாலமாக திகழ்வது விளையாட்டுதான். இதில் கிரிக்கெட்டுக்கு அதிக பங்குள்ளது.

பிரதமர், முன்னாள் சாதனையாளர்கள் படங்களை வரலாற்று சிறப்பு வாய்ந்த மைதானங்களில் இருந்து அகற்றும் செயல் மிகவும் வருந்தத்தக்கது. இதுகுறித்து பிப். 28ல் டுபாயில் நடக்கவுள்ள கூட்டத்தில் முறையிடுவோம்," என்றார்.

# நான்காவது 'வேகம்' யாரு நெஹ்ரா சொல்வது யாது?

'உலக கிண்ணத் தொடரில் இந்திய அணியில் நான்காவது வேகப்பந்து வீச்சாளர் இடத்துக்கு உமேஷ் யாதவ் பொருத்தமாக இருப்பார்," என, ஆஷிஸ் நெஹ்றா தெரிவித்தார்.

இங்கிலாந்தில் வரும் மே 30ல் உலக கிண்ண கிரிக்கெட் தொடர் ஆரம்பமாகிறது. இதற்கான இந்திய அணி விரைவில் தேர்வு செய்யப்பட உள்ளது. இப்போதைய நிலையில் புவனேஷ்வர் குமார், பும்ரா, மொகமட் ஷமி என மூன்று வேகப்பந்து வீச்சாளர்கள் களமிறங்கும் அணியில் இடம்பெறுவது உறுதி. வேகப்பந்து 'சகலதுறை வீரர்' என்ற அடிப் படையில் நான்காவதாக பாண்ட்யா சேர்க்கப்படலாம்.

இங்கிலாந்தில் உள்ள ஆடுகளங்கள் 'வேகத்துக்கு' சாதகமானவை என்பதால் நான்காவது இடத்தில் யாரை தேர்வு செய்ய லாம் என முன்னாள் 'வேகம்' ஆஷிஸ் நெஹ்றா கூறியதாவது.

உமேஷ் யாதவ் அனுபவம் வாய்ந்தவர். இது உலக கிண்ணத் தொடருக்கு பெரிதும் கைகொடுக்கும். கடந்த 2015 தொடரில் பங்கேற்ற பெரும்பாலான பந்துவீச்சாளர்களுடன் மீண்டும் களமிறங்கும் பட்சத்தில் பும்ராவும் சேர்ந்தால் இன்னும் பலமாகும்.

கலீல் இப்போதுதான் வந்துள்ளார். முதல் தர போட்டிகளில் பங்கேற்ற போதிய அனுபவம் இவருக்கு கிடையாது. பந்துவீச்சின் வேகமும் தற்போது குறைந்துள்ளது. இளம் வீரர்களுக்கு இப்படி நடப்பது இயல்புதான். இதிலிருந்து இவர் பாடம் கற்றுக் கொண்டு சிறப்பாக மீண்டு வருவார் என நம்புகிறேன் இவ்வாறு ஆஷிஸ் நெஹ்றா கூறினார்.

## கிராம அபிவிருத்தி திணைக்களம் வடக்கு மாகாணம்

## பகிரங்க ஏல விற்பனை

வருடாந்த பொருட் கணக்கெடுப்பில் விற்பனைக்கு சிபார்சு செய்யப்பட்ட பாவிக்கப்பட்ட கணினிகள், பிறின்ரர்கள், போட்டோக் கொப்பி இயந்திரம், ரயர்கள் மற்றும் தளபாடங்கள் என்பன 27.02.2019ம் திகதி புதன்கிழமை காலை 10.00 மணியளவில் திணைக்கள முன்றலில் ஏலத்தில் விடப்படவுள்ளது. ஏலத்தில் எடுக்கப்படும் பொருட்களுக்குரிய பெறுமதி செலுத்தப்பட்டு பொருட்கள் உடனடியாக வளாகத்தைவிட்டு அகற்றப்பட வேண்டும்.

**திருமதி ந.இன்பராஜ்**
பணிப்பாளர்,
கிராம அபிவிருத்தி திணைக்களம்,
வடக்கு மாகாணம். (C-5553)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை இராமநாதன் நுண்கலைக்கழகம் பல்கலைக்கழக அனுமதி - 2018/2019

<u>உளச்சார்புப் பரீட்சை (Aptitude Test)</u>

## நுண்கலைமாணி - இசை, நடனம், சித்திரமும் வடிவமைப்பும்

மேற்படி நான்கு வருட பட்டப் படிப்புக் கற்கைநெறிகளுக்கு அனுமதி பெற விரும்பும் தகுதியான விண்ணப்பதாரிகளிடமிருந்து 14.03.2019ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

**<u>அனுமதிக்கான பொது நிபந்தனைகளும் தகைமைகளும்</u>**

**<u>அனுமதிக்கான தகைமைகள்</u>**

சங்கீதம், நடனம், சித்திரமும் வடிவமைப்பும் கற்கைநெறிகளில் யாதேனுமொன்றைத் தெரிவு செய்வதற்கு விரும்பும் விண்ணப்பதாரிகள் 2018 ஆண்டு நடைபெற்ற க.பொ.த (உ.த) பரீட்சையில் சித்தியடைந்து இருப்பதுடன் தெரிவு செய்ய விரும்பும் பட்ட பாடநெறிக்குரிய பாடத்தில் அதாவது கர்நாடக சங்கீதம் அல்லது நடனம் - பரதம் அல்லது சித்திரக்கலையில் ஆகக் குறைந்தது திறமைச்சித்தியும் (C), மற்றைய இரண்டு பாடங்களிலும் ஆகக் குறைந்தது சாதரண தரச் சித்தியும் (S) பெற்றிருத்தல் வேண்டும். (இலங்கை ப.மா.ஆணைக்குழு மாணவர் கைநூல் பக்கம்-36 பிரிவு-09)

**தகுதிகாண் பரீட்சை ஆற்றுகை / உளச்சார்பு பரீட்சை**

மேற்குறித்த கற்கைநெறி அனுமதிக்கான விண்ணப்பதாரிகள் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தால் நடத்தப்படும் ஆற்றுகைப் பரீட்சை./உளச்சார்பு பரீட்சைக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தோற்றுதல் வேண்டும்.

சங்கீதம், நடனம் - ஆற்றுகை பரீட்சை

சித்திரமும் வடிவமைப்பும் - செய்முறை மற்றும் உளச்சார்பு பரீட்சைகள்

**விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல்**

விண்ணப்பதாரிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தை A4 தாளில் தயாரித்தோ அல்லது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அனுமதிகள் கிளையில் பெற்றோ அல்லது <u>www.jfn.ac.lk</u> என்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணையதளத்தில் இருந்து பிரதி செய்தோ தகுதிகாண் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

மேற்படி தகுதிகாண் பரீட்சைக்கான விண்ணப்பத்துடன் ரூபா. 300 ஐ ஏதாவது ஒரு மக்கள் வங்கிக் கிளையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமக்கள் வங்கிக் கிளைக் கணக்கு இல. 162100160000880 இல் செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டுடன் பாடசாலை அதிபர் அல்லது சமாதான நீதவானால் உறுதிப்படுத்தப்பட்ட க.பொ.த (உ.த) பெறுபேற்றுப் பத்திரத்தினது போட்டோப் பிரதியும் அனுப்பப்படல் வேண்டும். பரீட்சைப் பெறுபேற்றில் அல்லது பெயரில் மாற்றங்கள் ஏதும் இருப்பின் அதற்குரிய சத்தியக்கடதாசி சமர்ப்பிக்கப்பட்டு உறுதிசெய்யப்பட வேண்டும்.

பிரவேச அனுமதித் தகைமையைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு ஆற்றுகை/ நேர்முகப்பரீட்சைக்குரிய அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்படும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் 14.03.2019 ஆம் திகதிக்கு முன்னதாக பிரதிப்பதிவாளர், அனுமதிகள் கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் கற்கை நெறியைக் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் அல்லது நேரில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

அனுமதிக்குரிய ஆகக்குறைந்த தகைமையை கொண்டிராததும், பணம் செலுத்திய பற்றுச்சீட்டு சமர்ப்பிக்கப்படாததும், பெறுபேற்று பத்திரங்களின் உறுதி செய்யப்பட்ட போட்டோ பிரதிகள் இணைக்கப்படாததும், விண்ணப்ப முடிவுத்திகதிக்குள் கிடைக்கப் பெறாததுமான விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும். மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் 021 222 6714.

**பதிவாளர்** (C-5556)

## இனப்படுகொலை குறித்து விசாரணை வேண்டும்

# மறப்போம், மன்னிப்போம் என்ற கருத்தை தமிழ் மக்கள் ஏற்கத் தயார் இல்லை

## சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**இனப்படுகொலைக்கான விசாரணைகள் இடம்பெற வேண்டும். தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். விசாரணைகளின் பின்னர் தமிழ் மக்களுக்கு உரிமை கிடைக்க வேண்டும். அதன்பின்னர் பொது மன்னிப்பு கொடுக்க தமிழ் மக்கள் முடிவெடுப்பார்கள். அதற்கு முன்னர் மறப்போம், மன்னிப்போம் என்ற கருத்தை தமிழ் மக்கள் ஏற்கத் தயார் இல்லை என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாணத்திலுள்ள, அவரது வீட்டில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கில் இருந்த ஐக்கிய நாடுகள் சபை சார்ந்த நிறுவனங்கள் வெளியே அனுப்பப்பட்டு மிக மோசமான யுத்தம் நடைபெற்றது. இந்த யுத்தத்தில் சுமார் 70 ஆயிரம் பேர் இறந்துள்ளதாக ஐ.நா அறிக்கைகள் குறிப்பிடுகின்றன. ஆரம்பத்தில் ஒருவர் கூட சாகவில்லை என இலங்கை அரசாங்கம் கூறியது. ஆனால் பல்வேறுபட்ட விசாரணைகளின் மூலம் 70 ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டிருக்கலாம். மேலதிக விசாரணைகள் செய்ய வேண்டுமென ஐ.நா நியமித்த 3 பேர் கொண்ட ஆணைக்குழுதெரிவித்தது.

உள்நாட்டு, வெளிநாட்டு நீதிபதிகளைக் கொண்ட விசாரணை ஆணைக்குழுவாக இருக்க வேண்டும் யுத்தக் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஆராயப்பட வேண்டும் என்ற விடயங்களை இலங்கை அரசாங்கமும் ஏற்றுக்கொண்டு இரு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இந்நிலையில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் உட்பட அனைவரும் ஆணைக்குழு நியமிப்பதில் இருந்து பின்வாங்கியுள்ளனர்.

பிரதமர் நாங்கள் "மறப்போம்" "மன்னிப்போம்" என்கிறார். முதலில் யுத்தக் குற்றங்கள் நடந்துள்ளனவா? நடக்கவில்லையா? என்பது ஆராயப்பட வேண்டும்.

காணாமல் போனோர் பற்றி ஆராயப்பட வேண்டும். எந்தவித விசாரணைகளும் இன்றி "மறப்போம்,மன்னிப்போம்" என்பது ஒட்டுமொத்தமாக மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ள தமிழ் இனத்திற்கு ஏற்புடையதாக அமையாது.

தமிழ் மக்கள் நீதியைக் கோரும் நேரத்தில் அந்த நீதியை முற்று முழுதாக மறுதலித்து மறப்போம், மன்னிப்போம் என்று கூறுவது தமிழ் மக்கள் நீங்கள் உங்களுக்கான நியாயத்தைக் கேட்க வேண்டாம். நீதியைக் கேட்க வேண்டாம் என்பதற்கு சமனாகும்.

விசாரணைகள் முடிந்ததன் பிற்பாடு சம்பந்தப்பட்டவர்களுக்கு மன்னிப்பு கொடுப்பதா? இல்லையா? என்பது பற்றி ஆலோசிக்க முடியும். குற்றம் இழைத்தவர்களுக்கு



"மரண தண்டனை விதிக்க வேண்டுமென்று தமிழ் மக்கள், கூறவில்லை". தமிழ் மக்களுக்கு நடந்தவற்றிற்கு ஒரு நீதி விசாரணை வேண்டும். இந்த விசாரணைக்குப் பிற்பாடு சம்பந்தப்பட்டவர்கள் குற்றவாளிகளாக இருந்தால் அவர்களுக்கு மன்னிப்பு கொடுப்பது தொடர்பில் தமிழ் மக்கள் ஆராய முடியும். ஆனால் எவற்றையும் செய்யாமல் நீங்கள் மறந்து விடுங்கள் என்று சொல்லுவது எந்த விதத்தில் நியாயமானது. கடந்த 4 வருடங்களாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக் குழுவிற்கு பொய் பேசி வந்துள்ளீர்களா? பிரதமர் சிங்கள மக்களுக்கான பிரதமரா? அல்லது பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்குமான பிரதமரா?

அபிவிருத்தி என்று பலதைச் செய்கின்றீர்கள். ஆனால் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு கடந்த 4 வருடங்களாக இதனைச் செய்துள்ளீர்கள். பிரதமர் சொல்வது போன்று மறப்போம், மன்னிப்போம் என்பதெல்லாம் ஒரு ஒழுங்கு முறையான விசாரணைகளின் பின்னர் பார்த்துக் கொள்ள முடியும்.

முதலில் விசாரணைகள் இடம்பெற வேண்டும். தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். விசாரணைகளின் பின்னர் தமிழ் மக்களுக்கு உரிமை கிடைக்க வேண்டும். அதன் பின்னர் பொது மன்னிப்பு கொடுக்க தமிழ் மக்கள் தயாராக இருப்பார்கள். எனவே தமிழ் மக்களுக்கான நீதி விசாரணைகள் எவற்றையும் செய்யாது மறப்போம், மன்னிப்போம் என்று கூறுவது தமிழ்மக்களை நடுத்தெருவில் விடும் நடவடிக்கை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-101)

## பொலிஸாரை தாக்க முற்பட்ட குற்றச்சாட்டில் ஒருவர் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர்ப்பகுதியில் கடந்த சனிக்கிழமை இரவு பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்து பொலிஸாரை தாக்க முற்பட்ட குற்றச்சாட்டில் ஒருவர் சாவகச்சேரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளுக்கான ஆவணங்கள் இன்றி பயணித்ததாகவும் இதன் போது பொலிஸாரின் சைகையை மீறிச் சென்ற போது துரத்திப் பிடித்த பொலிஸாரை தாக்க முற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்ட நபர் பொலிஸ் பாதுகாப்பில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-30)


## மரண அறிவித்தல்



### கந்தையா பத்மநாதன்

(பத்மா ஸ்ரோர்ஸ் உரிமையாளர் - தன்னீரூற்று, முள்ளியவளை)

யாழ். கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட கந்தையா பத்மநாதன் அவர்கள் கடந்த (16.02.2019) சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா பொன்னுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான குலசேகரம்பிள்ளை சிவபாக்கியம் தம்பதிகளின் பாசமிகு மருமகனும், சிவசோதி அவர்களின் பாசமிகு கணவரும், ஐங்கரன்(ராஜன்- இத்தாலி), பத்மஜோதி(சுசி- சுவிஸ்), வர்ஷினி(வாணி), கஜாகரன்(கஜன்- பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நிலாந்தினி(இத்தாலி), நந்தகுமார் (நந்தன்- சுவிஸ்), பிரணவன் (Kevilten Electrical Product Pvt Ltd) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான பூபாலசிங்கம், இரத்தினம்மா, பூபதி, இராஜரட்ணம், பஞ்சலிங்கம் மற்றும் லீலாராணி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், தர்மகுலரட்ணம், யோகேஸ்வரன், ஜெகசோதி, இராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், நயனிகா(சுவிஸ்), நந்தனா(சுவிஸ்), சிவப்பிரகா, நித்திலா, பிரனிதன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.02.2019) புதன் கிழமை மு.ப 10:00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோண்டாவில் கிழக்கு கட்டையாலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

'ஜோதியகம்'
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

தகவல்: குடும்பத்தினர்
தொ.பே: 0773604486


## இராசி பலன்

**மீனம்:** தேக நலனில் இருந்த பாதிப்புக்கள் அகலும், கொடுக்கல்- வாங்கல்களை ஒழுங்கு செய்து கொள்ள முற்படுவீர்கள், உறவு-பகை பாராமல் ஒற்றுமையாக இருப்பீர்கள்.

**மேடம்:** தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் மேலோங்கும், பிள்ளைகள் குடும்பப் பொறுப்புணர்ந்து நடந்து கொள்வர், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**இடபம்:** தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும், வழிபாடு காரிய வெற்றி தரும்.

**மிதுனம்:** சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், இழுபறியாக இருந்த காரியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும்.

**கும்பம்:** மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், எடுத்த காரியத்தில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

| | | | |
|---|---|---|---|
| | செவ் | | ராகு |
| சூரி புத | இராசி பலன் | | சந் |
| | கிரகநிலை | | |
| சனி, கேது, சுக் | குரு | | |

கிரகநிலை
சந்திராஷ்டமம்
திருவோணம்
பகல் 10.32 மணிக்கு
சிங்-சந்

19.02.2019
மாசி 07, செவ்வாய்க்கிழமை
சூரிய உதயம் காலை 6.27 மணிக்கு
பூரணை முன்னிரவு 10.03 மணிவரை
ஆயிலியம் முற்பகல் 11.01 மணிவரை
சுபநேரம் 11.02-12.32 மணிவரை
இராகுகாலம் 3.32-5.02 மணிவரை
பூரணை விரதம், மாசிமகம்

வளவன்

**கடகம்:** நன்மைகள் நடைபெறும் நாள், குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**மகரம்:** சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், பயணத்தின் போது பொருட்களில் கவனம் தேவை, கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள்.

**சிம்மம்:** திட்டமிட்ட காரியங்களில் திசைதிருப்பங்கள் ஏற்படலாம், விருப்பங்கள் நிறைவேற அம்பிகையை வழிபட வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**தனுசு:** அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், வழிபாடு ஆனந்தம் தரும், உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், பயணங்களால் பலனுண்டு.

**விருச்சிகம்:** தொழில் வளர்ச்சி கூடும் நாள், தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், ஆரோக்கியமான நாள்.

**துலாம்:** அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், வழிபாட்டில் ஆர்வம் கூடும், எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவ முன்வரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கன்னி:** அலைச்சல்கள் அதிகரித்தாலும் ஆதாயமும் பெறுவீர்கள், மனதில் தேவையற்ற சஞ்சலங்களைத் தவிர்ப்பது நல்லது, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.



யாழ். இந்துக் கல்லூரியின் மைந்தனும் ஊடகவியலாளருமான பு. சத்தியமூர்த்தியின் 10 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு " நினைவுகளுடன் பேசுதல்" நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் யாழ். இந்துக்கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது. யாழ். ஊடக அமையம் மற்றும் எழுகலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் கவிஞர் கை. சரவணன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சத்தியமூர்த்தியின் நினைவுகளை அவரது கல்லூரி நண்பர்களான (91 உயர்தரம்) வட்டு. சுப்பிரமணிய வித்தியாலய அதிபர் கோகிலவாசன், கவிஞர் வேலணையூர் சுரேஸ் ஆகியோர் பகிர்ந்தனர். அதனைத் தொடர்ந்து யாழ்.ஊடக அமையம் இணைப்பாளர் இ.தயாபரன், ஊடகவியலாளர்களான மதி, இளங்கீரன் ஆகியோர் உரையாற்றினர். சத்தியமூர்த்தியின் கல்லூரி நண்பரும் எழுத்தாளரும் யாழ். இந்துவின் பழையமாணவர் சங்க தலைவருமான தினேஸ்குமார் நூலினை வெளியிட்டு வைக்க சத்தியமூர்த்தியின் சகோதரி பெற்றுக்கொண்டார். (படங்கள்: ஐ. சிவசாந்தன்)

# இலக்கிய விழாவிற்கான விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வரணி நதியோர நாண ல்கள் இலக்கிய மன்றத்தினர் உலகளாவிய ரீதியில் உள்ள தமிழ் எழுத்தாளர் களுக்கு மதிப்பளிக்கும் இலக்கிய விழாவிற்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளனர்.

சிறுகதை, கவிதை இலக்கிய நூலாய்வும் தகைமைசார் விருதும் வழங்கப்படவுள்ளது. இதற்கு 2010 ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் 2018 டிசெம்பர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் வெளியிடப்பட்ட இலக்கிய,நூல் அல்லது நூல்களை சமர்ப்பிக்கலாம்.

போட்டியில் கலந்து கொள்ள விரும்புவோர் நூலின் மூன்று பிரதிகளை அனுப்பி வைக்கப்பட வேண்டும். எழுத்தாளரால் வெளியிடப்பட்ட எத்தனை இலக்கிய நூல்களையும் போட்டிக்கு அனுப்பலாம். ஒவ்வொரு நூலிலும் மூன்று நூல்கள் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்துடன் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

எழுத்தாளர்கள் சார்பாக பதிப்பகங்களும் இலக்கிய நூல்களை ஆய்வுக்காக அனுப்பலாம். விருது எழுத்தாளர்களுக்கே வழங்கப்படும்.போட்டிக்கு சமர்ப்பிக்கப்படும் நூல்கள் குறித்த காலப்பகுதியில் எழுத்தாள,ரின் சொந்தப் படைப்பான முதல் பதிப்பு நூலாக இருக்க வேண்டும். விண்ணப்பங்களை மார்ச் 31 ஆம் திகதி க்கு முன்னர் வ.ஜசிந்தன், தலைவர், நதியோர நாணல்கள் இயக்கிய மன்றம்,நாவற்காடு, வரணி என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். முடிவுகள் அனைத்தும் இலக்கிய பெருவிழாவிற்கு முன்னர் வெளியிடப்படும். (5-10)

# அதிபர் வெற்றிடத்திற்கான விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வலயத்தில் வெற்றிடம் ஏற்பட்டுள்ள யா/ கற்கோவளம் மெ.மி.த.க. பாடசாலையின் (வகை- II) அதிபர் பதவி வெற்றிடத்திற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழ்வரும் தகைமையுடைய அதிபர்கள் குறித்த பாடசாலைக்கான அதிபர் பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

1.இலங்கை அதிபர் சேவையில் தரம் 2,3 தரமுடையவர்களாக இருத்தல் வேண்டும்

2.இலங்கை அதிபர் சேவையில் அதிபராக கடமையாற்றாதவர்களும் இப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியும். (இவர்களுக்கு பிரிவு 4 பொருத்தமாகாது)

3.வடமராட்சி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் நிரந்தரமாக சேவையாற்றுபவர்களாக இருத்தல் வேண்டும்

4. விண்ணப்பதாரி தற்போது கடமையாற்றும் பாடசாலை-யில் ஆகக் குறைந்தது மூன்று வருடங்கள் தொடர்ச்சியான சேவையினை ஆற்றியிருத்தல் வேண்டும்.

5.விண்ணப்பதாரி ஆகக் குறைந்தது மூன்று வருடங்களுக்கு கடமையாற்றக் கூடிய வயதெல்லையை உடையவராக இருத்தல் வேண்டும்.

6.இலங்கை அதிபர் சேவை தரம் 2 ஐச் சேர்ந்தவர்களது பொருத்தமான விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறாத பட்சத்தில் மாத்திரம் தரம் 3 ஐச் சேர்ந்தவர்களது விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு ஏற் றுக் கொள்ளப்படும்.

7.விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி 01.03.2019ஆகும்.

8.விண்ணப்பதாரிகள் நேர்முகத் தேர்வுக்கு தோற்றுதல் வேண்டும். விண்ணப்பப் படிவங்களை வலயக் கல்வி அலுவலகத்தின் கல்வி நிர்வாகப் பிரிவில் பெற்றுக் கொள்ள முடியும் என வடமராட்சி வல யக் கல் விப் பணிப்பாளர் ஏ. பார்த்தீபன் அறிவித்துள்ளார். (5)

# நாச்சியம்மையார் தினமும் பரிசளிப்பு விழாவும் இன்று

யாழ்ப்பாண்ம் சைவ பரிபாலன சபையின் புண்ணிய நாச்சியம்மையார் தினமும் பரிசளிப்பு விழாவும் இன்று 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் (60, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்) சைவ பரிபாலன சபைத் தலைவர் இ. வசந்தசேனன் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி. உமாநிதி புவனராஜா, சிறப்பு விருந்தினராக யாழ்.பல் கலைக்கழக இந்து நாகரிகத்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி. திருமதி.விக்னேஷ்வரி பவநேசன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

# பாவனையாளர் சட்டங்களை மீறிய வர்த்தகர்களுக்கு தண்டம்

(யாழ்ப்பாணம்)

பாவனையாளர் சட்டதிட்டங்களை மீறிய 15 வர்த்தகர்களுக்கு எதிராக கடந்த 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மல்லாகம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட தாக வடக்கு மாகாண பாவனையாளர் அலுவல் கள் அதிகார சபையின் பணிப்பாளர் முகமட் சாவிக் தெரிவித்தார்.

அதிகார சபையின் சட்ட திட்டங்களைப் பின்பற்றாத அச்செழு, தெல்லிப்பழை , புத்தூர் ஆகிய பிரதேசங் களைச் சேர்ந்த வர்த்தகர் களே இவ்வாறு நீதி மன்றில் நிறுத்தப்பட்டு அவர்களிடமிருந்து 40 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டதாகத் தெரிவித்தார். (5-10)

# வீதிகள் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

கிராம எழுச்சித்திட்டத்தின் கீழ் வேலணைப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் 47 வீதிகள் புனரமைக்கப் படவுள்ளதாக வேலணைப் பிரதேச சபைத் தவிசாளர் ந. கருணாகரகுருமூர்த்தி தெரிவித்தார்.

9 கோடியே 40 இலட்சம் ரூபா செலவில் மேற்கொள்ளப்படும் திட்டத்தில் சபைக்குட்பட்ட மண்டைதீவு, அல்லைப்பிட்டி, சரவணை, வேலணை, நயினா தீவு, புங்குடுதீவு, மண்கும்பான் ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கியதாக இத் திட்டம் மேற் கொள்ளப்படுமென அவர் மேலும் தெரிவித்தார். (5-10)

# விளையாட்டு களஞ்சிய அறை தீக்கிரை



(யாழ்ப்பாணம்)

யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரியின் விளையாட்டு உபகரணங்களை களஞ்சியப்படுத்தும் அறைக்கு, நேற்றுக் காலை 9 மணியளவில் இனம் தெரியாத நபர்களினால் தீ வைக்கப்பட்டது.

குறித்த சம்பவத்தில் அறையில் இருந்த விளையாட்டு உபகரணங்கள் யாவும் முற்றாக எரிந்துள்ளதோடு குறித்த கட்டடத்தில் வெடிப்புக்கள் ஏற்பட்டுள்ளதாகவும் பாடசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இச் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (5-10)




# போதைக்கு அடிமையான மாணவர்களின் நிலை குறித்து வைத்திய அத்தியட்சகர் கவலை

(யாழ்ப்பாணம்)

பாடசாலை மாணவர்கள் போதைப்பொருளுக்கு அடிமையாகி சுயநினைவற்ற நிலையில் வைத்தியசாலைக்கு வருவது கவலையளிக்கின்றது என சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் திருமதி ம.தயாளினி தெரிவித்துள்ளார். அண்மையில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார். மேலும் அவர் இது தொடர்பாக கருத்து தெரிவிக்கையில் .

13வயதிற்கும் 19வயதிற்கும் இடைப்பட்ட பருவத்தில் சரியான வழி நடத்தல் தான் அவசியம். குடும்பத்தில் ஏற்படும் பிரச்சினைகள் காரணமாக ஒரு பிள்ளையின் கல்வி அடைவு மட்டும் பாதிக்கப்பட்டால் அதற்கு காரணம் அந்தப் பிள்ளை அல்ல. அவ்வாறன பிள்ளைகளை ஆசிரியர் தண்டிக்கக் கூடாது. தற்போது சமுதாயத்தில் எத்தனையோ சீரழிவுகள் இடம்பெறுகின்றன. பிள்ளைகள் படிப்பு ஒன்றை மாத்திரமே நோக்காகக் கொண்டு செயற்பட வேண்டும். நாடடின் வருங்கால தூண்கள் மாணவர்கள். யாராவது உங்களை தவறாக வழிநடத்தினால் அவர்களை இனங்கண்டு விலகுவதுடன், அவர்களை மற்றவர்களுக்கும் இனங்காட்டுங்கள் என மேலும் அவர் தெரிவித்திருந்தார். (5-30)

# தேர்த்திருவிழாவில் திருமுறையரங்கு

மாதகல் நுணைசை கூடல் விளாத்தி ஸ்ரீ சாந்த நாயகி அம்பிகா சமேத ஸ்ரீ சந்திர மௌலீஸ்வர சுவாமி தேவஸ்தான மாசிமகா மஹோற்சவம் கடந்த திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. இன்று 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் தேர்த்திருவிழா நடைபெறும். சுவாமி தேரில் ஆரோகணித்த வேளையிலேயே முத ன்மை மண்டபத் தில் கலாபூஷணம் க. லோகேஸ்வரனின் திருமுறையரங்கு பக்க வாத்திய சகிதம் இடம்பெறும். (இ)



திருநெல்வேலி சிறுவர் பூங்கா முன்பள்ளி குழந்தைகள் காப்பக வளாகத்தில் பணிப்பாளர் திருமதி. த. கர்ணி தலைமையில் சிறார்களுக்கான சர்வதேச ஆங்கிலப் பயிற்சிப்பட்டறை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடை பெற்றது. அதனை நிபுணத்துவ [illegible]லோசகர் கலாநிதி பா. தனபாலன் தொடக்கி வைப்பதையும் அமெரிக்க நாட்டு வளவாளர் எஸ். ஸ்டீவன் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட ஆங்கிலத்துறை விரிவுரையாளரும் பயிற்சிகளை வழங்கினார். (படங்கள்- புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)

## "முறைசாரா பொருளாதாரத்துறையில் பணிபுரிகின்ற பெண்களுக்கு ஊக்கமளிப்பதற்கான விருது வழங்கல்"

(கொழும்பு)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சர்வதேச மகளிர் தினத்தையொட்டி முறைசாரா பொருளாதாரத்துறையில் பல சவால்களுக்கு முகம்கொடுத்து துணிச்சலுடன் பணிபுரிகின்ற பெண்களை ஊக்கமளிப்பதற்காக விருது வழங்கல் நிகழ்வொன்றை ஏற்பாடு செய்யவுள்ளது.

முறைசாரா பொருளாதாரத்தினூடாக தமது வாழ்க்கையை முன்னேற்ற சில பெண்கள் முயற்சித்துள்ளதுடன் சிலர் முயற்சித்தும் வருகின்றனர்.

இவர்கள் பிற பெண்களுக்கு தைரியம் அளிப்பதுடன் அவர்களுக்கு முன்னுதாரணமாகவும் திகழ்கின்றனர்.

இவ்வாறு பொருளாதார அபிவிருத்திக்கு பங்களித்து சிறந்த சேவை செய்து வருகின்ற பெண்கள் அல்லது பெண்கள் அமைப்புக்கள் இவ்விருதுக்காக தங்களுடைய பெயர்முன்மொழிவை எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு முன்னர் ஆணைக்குழுவிற்கு கிடைக்கக்கூடியவாறு கீழ்க்காணும் முகவரிக்கோ அல்லது மின்னஞ்சலுக்கோ அனுப்பி வைக்கவும்.

உங்கள் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "முறைசார பொருளாதாரத் துறையில் பணிபுரிகின்ற பெண்களை ஊக்கமளிப்பதற்கான விருது வழங்கல்" என குறிப்பிட்டு அனுப்பவும்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, இல.14, ஆர்.ஏ.த.மெல்மாவத்தை, கொழும்பு-04, மின்னஞ்சல்: inform alsectorwards 2019 @gmail.com. மேலதிக விபரங்களுக்கு 11 250 5569 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தவிசாளர் அறிவித்துள்ளார். (இ)

## மதுபோதையில் சாரத்தியம்; இருவர் மறியலில்

(யாழ்ப்பாணம்)

சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாமல் மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டின்கீழ்கைது செய்யப்பட்ட இருவரைநாளைபுதன்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

யாழ்.பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இவர்கள் மீது மதுபோதையில் வாகனம் செலுத்தியமை, சாரதி அனுமதிப்பத்திரம் இன்மை ஆகிய இரு குற்றச்சாட்டுக்களின் கீழ் பொலிஸாரால் நேற்று வழக்குத் தாக்கல் செய்யப்பட்டபோதே நீதிமன்றம் குறித்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது. (இ-10)

## ரஞ்சனின் கருத்து தொடர்பில் உடன் விசாரணை வேண்டும்

(கொழும்பு)

கொக்கெய்ன் போதைப்பொருள் பயன்படுத்தும் அமைச்சர்கள் அமைச்சரவையில் இருப்பதாக இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க பொறுப்புடன் கூறுவாராயின் அது தொடர்பில் உடனடியாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என சட்டத்தரணி பிரேமநாத் தொலவத்த தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் பொலிஸ் தலைமையகத்தில் நேற்று முறைப்பாடொன்றை முன்வைப்பதற்காக சென்றவேளை ஊடகங்களிடம் கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)


### மணமகள் தேவை

1978ஆம்ஆண்டு அத்தநட்சத்திரம் செவ்வாய் இல்லாத கிரக பாவம் 30 பட்டதாரி, அரச உத்தியோகம்.

தொடர்பு: T.P 077 215 6882

(C-5519)

# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 4<br>உயரம்: 165cm<br>தகைமை/தொழில்:O/L, சொந்த தொழில்<br>எதிர்பார்ப்பு: உள்நாடு,வெளிநாடு<br>தொ.இ: B/9332 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம் திருவோணம் 3<br>கி.பா: 13 1/2<br>உயரம்: 154cm<br>தகைமை/தொழில்:BBA பட்டதாரி முகாமைத்துவ உதவியாளர்<br>எதிர்பார்ப்பு:பட்டதாரி,அரசதொழில்<br>தொ.இ: G/9355 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 2<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்:B.Sc IT, System Engineer<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி,மேல் தகைமை உள்நாடு,வெளிநாடு<br>தொ.இ: B/9333 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்பூரம் 1<br>கி.பா: 22 1/4செவ் 7 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: College of Education அரச ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு:அரச, தனியார் தொழில், சைவபோசனம்<br>தொ.இ: G/9360 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:ACCA, LLB, Lawyer<br>எதிர்பார்ப்பு A/L,பட்டதாரி உள்நாடு,வெளிநாடு<br>தொ.இ: B/9334 | பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 40செவ் 7 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: 10ம்தரம்<br>எதிர்பார்ப்பு:அரச,சுயதொழில்<br>தொ.இ: G/9363 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 2<br>கி.பா: 37 1/2 செவ் 2 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:A/L ,Dip.in Account முகாமைத்துவஉதவியாளர்<br>எதிர்பார்ப்பு:அரச தொழில்<br>தொ.இ: B/9335 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 2<br>கி.பா: 26 செவ் 2 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:BAபட்டதாரி<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு<br>தொ.இ: G/9367 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# உலகத் தமிழர்களின் புனித பூமி திருவண்ணாமலை

# கிரிவலம் 19.02.2019

## அன்னை புண்ணிய நாச்சியார் நினைவு தினம்

19.02.2019

புண்ணிய நாச்சியார் அறக்கொடையின் நினைவாக தில்லை நடராசர் கோவிலுக்கு தரிசனத்திற்காகச் செல்லும் யாத்திரிகர்களின் வசதி கருதி சிதம்பரம் 23 மாலை கட்டித் தெருவில் சைவபரிபாலன சபையில் பரிபாலிக்கப் படுகிறது. அச்சபை மேலும் அவர் பெயரால் சமயப் பணியை மேற்கொண்டு வருகிறது.

மகான்களின் வழியில் சைவசமயத்தை வளர்ப்பதற்கு சமயப் பிரசாரகர்கள் முன்வர வேண்டும்.




செயலாளர்
சைவப்பிரகாசப் பேரவை,
யாழ்ப்பாணம்.

(C-5546)

077 378 3316

# மகா பாவங்களையும் போக்கும் மகாமகம்!

பாற்கடலில்பள்ளிகொண்டுள்ளபரமன் ஸ்ரீமத்நாராயணனின் நாபிக் கமலத்திலிருந்து தோன்றினார் சிருஷ்டிக் கடவுளான பிரம்மதேவர். அனைத்து ஜீவராசிகளையும் சிருஷ்டி செய்யும் படி அவருக்கு உத்தரவிட்டான் அப்பரம்பொருள்.

சிருஷ்டி செய்துவிட்டால் மட்டும் போதுமா? படைக்கப்பட்ட ஜீவராசிகளுக்கு உயிரூட்ட வேண்டுமே. அதற்கு என்ன செய்வது? அதற்கும் பெருமாளையே சரணடைந்தார் பிரம்மன். அந்த பெருமாளும் மனமுவந்து ஒரு குடம் நிறைய அமுதத்தை அளித்தார்.

பிரம்மதேவரும் அந்த அமுதம் நிரம்பிய குடத்தை மகாமேரு பர்வதத்தில் எச்சரிக்கையாக வைத்து அந்த அமுதத்தின் சக்தியைக் கொண்டு தான் படைத்த அனைத்து ஜீவராசிகளுக்கும் உயிர் சக்தியை ஊட்டிவந்தார்.

ஒரு சமயம்பிரளய காலம் வந்தது. அப்போது உலகங்கள் அனைத்தும் அந்த பிரளய நீரில் மூழ்கின. அப்போது இந்த அமுதக்குடம் மட்டும் அந்த வெள்ளத் தில் அடித்து செல்லப்பட்டு மிதந்து கொண்டே வந்து ஓரிடத்தில் தங்கிநின்றது. அந்தக்குடம்நின்ற இடமே இன்று கும்பகோணம் எனப் பிரசித்தி பெற்றுள்ள திருக்குடந்தை எனும் புனித ஊராகும். மீண்டும் தனது சிருஷ்டி தொழிலுக்கு அமுதம் வேண்டி இருந்தால் பிரம்மதேவர் சிவபெருமானைச் சரணடைந்து மறுபடியும் அமுதம்கிடைப்பதற்குஅருள் புரியும்படி வேண் டினார்.

சிவபெருமானும்ஒருவேடனாகத் தோன்றி தனது வில்



லிலிருந்துஓர் அம்பைஎய்து அக்குடத்தை உடைத்தார். அதிலிருந்து அமுதம் பெருகிய இடமே இன்று "மகாமக" குளமாக உள்ளது. ஆதலால் தான் இக்குளத்தின் தீர்த்தம் அமுதத்திற்குச் சமமான பெருமை பெற்றது.

உடைந்த அக்குடத்தின் ஓடுகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து சிவலிங்கமாக மாறியது. அமுத கும்பமே சிவலிங்கமாக மாறியதால் அந்த இறைவனுக்கு கும்பேஸ்வரர் என்ற திருநாமம் ஏற்பட்டது.

அமுதகுடத்தின்வாய்சிதறி விழுந்த இடமே குடவாயில் என்ற சிற்றூராகும். அதுவே இன்றுமருவி குடவாசல் என அழைக்கப்படுகின்றது. இக்குடத்தின் வாயும் மற்றொரு சிவலிங்கமாக மாறியது. இச்சிவலிங்கத்தையும் குடவாயிலில் தரிசித்து ஆன்மீக இன்பம் பெறலாம்.

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை மாசி மாதத்தில் நவக்கிரகங்களில் அளவற்ற சுபபலம் பெற்ற குரு பகவான் சிம்ம ராசியைக் கடக்கும் போது மக நட்சத்திர த்தினமன்று மகத்தான புண்ணிய நதிகளாககங்கை, யமுனை, சர ஸ்வதி, காவிரி, சரயு, கோதாவரி, நர்மதை, சிந்து, வேகமதி ஆகிய ஒன்பது நதிகளும் இந்த மகா குளத்தில் கூடுகின்றனர்.


பரம பவித்திரமான இந்த நவ கன்னியரும் எழுந்தருளுவதற்கு வழிவகுக்க ஒன்பது கிணறுகளும் அத்திருக்குளத்தினுள் உள்ளன. மகாமக தினத்தன்று இத்திருக்குளத்தில் புனித நீராடும் பேறு பெறும் மக்கள் மகத்தான இந்த ஒன்பது புண்ணிய நதிகளிலும் ஒரே சமயத்தில் நீராடும் புண்ணிய பலனைப் பெறுகின்றனர். மகாமகக்குளக்கரையில் இந்த ஒன்பது நதி கன்னியருக்கும் தனித்தனியே திருச் சந்நிதிகள் உள்ளன. அங்கு நீராடி நவகன்னிகைகளையும் தரிசித்தால் பல பிறவிகளில் செய்த பாவங்களும் அடியோடு நசிந்து போகும்.

மாசி மகத்தின் பெருமை அளவற்றது. அன்னை அகிலாண்டநாயகியின் அருமை குழந்தை முருகனுக்கும் உகந்த புனிதநாள் "நூல் திசையோர் பரவு திருக்குட மூக்கு" என்பது சேக்கிழார் வாக்கு.

இப்பூலோகத்தில் இயற்கையாக ஏற்பட்ட நீர் நிலைகள் சமுத்திரங்களில் மாசி மகத்தன்று நீராடி சிவ வழிபாடு இயற்றி வீடுபேறு எய்திடலாம்.

# விடுதலைப் புலிகளின் ஆயுதக் களஞ்சியத்தைத் தேடி செம்பியன்பற்றில் நேற்று பொலிஸார் அகழ்வுப்பணி!





(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலகத் திற்குட் பட்ட செம்பியன் பற்று தெற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதக் களஞ்சியம் இருப்பதாக நேற்று பொலி ஸாரால் அகழ்வுப் பணிகள்மேற்கொள்ளப்பட்டன.

குறித்த பகுதியில் ஆயுதக் களஞ்சியம் இருப்பதாக பளைப் பொலிஸா ருக்குக் கிடைத்த இரகசியத் தகவ லையடுத்து நீதிமன்ற அனுமதி யுடன் பொலிஸ் விசேட அதிரடிப் படையுடன் இணைந்து கனரக வாகனங்களின் உதவியுடன் இவ் அகழ்வு மேற கொள்ளப்பட்டது.

இவ் அகழ்வுப் பணிகளை பார்வையிடவென பிரதேச செயலக அதிகாரிகள், புவிச் சரிதவியல் திணைக்களத்தினர், வன ஜீவராசித் திணைக்கள அதிகாரிகள் எனப் பலரும் அழைக்கப்பட்டனர்.

இவ் அகழ்வு தொடர்பில் மருதங் கேணிப் பிரதேச செயலாளரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது நீதிமன்ற அறிவுறுத்தலின் பிரகாரம் இவ் அகழ்வுப் பணி இடம்பெறுவதாகவும் நேற்று மதியம் வரை எவ்விதமான பொருட்களும் மீட்கப் படவில்லை எனவும் தொடர்ந்து அகழ்வு இடம்பெறுவதாகவும் தெரிவித்தார். (இ-10-89)

# உலகில் சக்தி வாய்ந்த கடவுச்சீட்டு சிங்கப்பூரை பின்தள்ளியது ஜப்பான்

## 90 ஆவது இடத்தில் இலங்கை

(கொழும்பு)

உலகில் சக்தி வாய்ந்த கடவுச் சீட்டுப் பட்டியலில் கடந்த வருடம் முதல் இடத்தில் இருந்த சிங்கப்பூரைப் பின்தள்ளி ஜப்பான் இம்முறை முதலிடத்தைப் பிடித்துள்ளது.

இந்த கடவுச் சீட்டைப் பயன்படுத்தி 190 நாடுகளுக்கு விசா இல்லாமல் சென்று வரலாம். இரண்டாம் இடத்தில் சிங்கப்பூர், தென்கொரியா நாட்டு கடவுச் சீட்டுகள் காணப்படுகின்றன. இவற்றைப் பயன்படுத்தி 189 நாடுகளுக்குச் சென்றுவருவதோடு மூன்றாம் இடத்தில் ஜேர்மனி மற்றும் பிரான்ஸ் கடவுச் சீட்டுக்கள் காணப்படுகின்றன.

இந்தப் பட்டியலில் இலங்கை 95 ஆவது இடத் தைப் பிடிப்பதோடு இலங் கைக் கடவுச் சீட் டைப் பயன்படுத்தி 43 நாடுகளுக்கு விசா இல்லாமல் சென்று வரலாம் என்பது குறிப்பிடத் தக்கது. (இ-10)

# செயற்பட்டு மகிழ்வோம்

கோப்பாய் தெற்கு றோ.க.த.பாடசாலையின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு விழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலை அருகிலுள்ள ஆலய முன்றலில் அதிபர் திருமதி.கு.அசோக்குமார் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் கலந்து கொள்வார். (இ-10-136)

# தனிச்சிங்கள சட்டத்திற்கெதிராக தனித்து வழக்காடிய கோடீஸ்வரனின் மறைவிற்கு த.தே.கூ. அனுதாபம்

1956ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட உத்தியோக பூர்வ மொழிச் சட்டமும் அதன் கீழ் 1961 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட திறைசேரி சுற்றுநிருபமும் சோல்பரி அரசியல் யாப்பின் 29 (2) ஆம்பிரிவிற்கு முரணானது என்று பிரிவு கவுன்சில் வரைக்கும் சென்று வழக்குத்தாக்கல் செய்த செல்லையா கோடீஸ்வரனின் மறைவு குறித்து எமது அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம். நீண்ட காலம் சுகவீன முற்றிருந்த கோடீஸ்வரன் கடந்த 15 ஆம் திகதி கொழும்பில் காலமானார்.

கோடீஸ்வரன் வழக்கு இலங்கை சட்ட வரலாற்றிலே தனி இடம்பெற்றது. அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் தலைவராக இருந்த கோடீஸ்வரன் சிங்கள



மொழியில் தேர்ச்சி பெற மறுத்ததன் காரணமாக சம்பள அதிகரிப்பு அவருக்கு மறுக்கப்பட்டது. இதனைக் காரணமாக வைத்து கோடீஸ்வரன் யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் அரசுக்கெதிராக தாக்கல் செய்த வழக்கானது பிரித்தானியாவின் பிரிவு கவுன்சில் வரைக்கும் சென்றது. அரச ஊழியர் அரசுக்கு எதிராக வழக்குத் தொடர முடியாதென்ற அரசின் ஆட்சேபனையை மாவட்ட நீதிமன்றத்தில் கோடீஸ்வரன் முறியடித்தார். ஆனாலும் இலங்கையின் உச்ச நீதிமன்றம் அவருக்கெதிராக தீர்ப்பளித்ததன் காரணமாக பிரிவு கவுன்சிலுக்கு சென்று அங்கு வெற்றிபெற்றார்.

1972 ஆம் ஆண்டு சோல்பரி அரசியல் யாப்பிற்கு பதிலீடாக முதலாவது குடியரசு அரசியல் யாப்பு இயற்றப்பட்டதன் காரணமாக அவருடைய வழக்கின் இறுதித் தீர்ப்பை பெற முடியவில்லை.

இலங்கை வாழ்தமிழ் மக்களை பாதிப்புக்குள்ளாக்கிய தனிச் சிங்களச் சட்டத்தை எதிர்த்துப் போராடிய கோடீஸ்வரனிற்கு எமது மரியாதை கலந்த அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளார். (இ-7)

# கற்றல் உபகரணம் வழங்கல்



(யாழ்ப்பாணம்)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளையால் தையிட்டி கணேசா வித்தியாலயம் மற்றும் வறுத்தலை விளான் அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலைகளைச் சேர்ந்த 65 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை கடந்த 15 ஆம் திகதி யாழ். மாவட்டக் கிளையின் தலைவர் கு.பாலகிருஷ்ணன் வழங்கினார். (இ-10-134)

# கூட்டம்

(சாவகச்சேரி)

மட்டுவில் பன்றித் தலைச்சி அம்மன் ஆலய பங்குனித் திங்கள் உற்சவத்தை முன்னிட்டு அதற்கான ஆயத்தக் கூட்டம் நாளை மறுதினம் 21 ஆம் திகதி முற்பகல் 10 மணியளவில் ஆலய மண்டபத்தில் நடைபெறும் என தென்மராட்சி பிரதேச செயலகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளதாக மட்டுவில் வடக்கு இந்து இளைஞர் மன்றத் தலைவர் தெரிவித்தார். (இ-5-29)

அல்லிராஜா நிறுவனத்துடன் தொடர்ந்து தொடர்பு

# மத்திய வங்கிக்கெதிராக வீரவன்ச போர்க்கொடி



(கொழும்பு)

**முன்னுக்கு பின் முரணான நிலைப்பாட்டை இலங்கை மத்திய வங்கி கொண்டுள்ளதெனத் தெரிவித்துள்ள தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச எம்.பி., இதனூடாக எந்த மோசடியை மறைப்பதற்கு, மத்திய வங்கி முயற்சிக்கின்றதெனவும் வினவினார்.**

பிரபல வர்த்தகரான சுபாஸ்கரன் அல்லிராஜாவுக்கு சொந்தமான சர்ச்சைக்குரிய நிறுவனங்களுடன் இலங்கை மத்திய வங்கி தொடர்ந்து வியாபார செயற்பாடுகளை முன்னெடுக்கின்றதென குற்றஞ்சாட்டிய அவர், மேற்படி விவகாரம் தொடர்பில், மத்திய வங்கி ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமிக்கு கடிதமொன்றையும் நேற்று முன்தினம் அனுப்பி வைத்துள்ளார்.

மத்திய வங்கியால் 2018.02.01 ஆம் திகதி வெளியிடப்பட்ட அறிக்கையொன்றில், ஈ.டி.ஐ எனப்படும் இலங்கை நிதி நிறுவனத்தின் செயற்பாடுகள் மத்திய வங்கி அதிகாரிகளால் மேற்பார்வை செய்யப்படுமெனக் குறிப்பிடப்பட்டிருந்தாலும், 2019.02.11 ஆம் திகதி மத்திய வங்கி விடுத்துள்ள அறிக்கையில், ஈ.டி.ஐ நிறுவனத்தின் நிர்வாகத்தினால் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு மத்திய வங்கி பொறுப்பேற்காதென அறிவிக்கப்பட்டுள்ளதெனவும் குற்றம்சாட்டியுள்ளார்.

அதேபோல், ஈ.டி.ஐ நிறுவனத்தின் தலைவருக்கு, மத்திய வங்கி 2018.02.27 அன்று அனுப்பியுள்ள கடிதத்தில் 75 மில்லியன் அமெரிக்க டொலருக்கு குறித்த நிறுவனத்தை விற்பனை செய்ய மத்திய வங்கி இணங்கியுள்ளதென தெரிவித்த அவர், கூட்டு நிறுவனமொன்றை இவ்வாறு விற்பனை செய்யும் போது பங்குகள் அடிப்படையில் நியாயமான தீர்வொன்று கிடைக்காதெனவும் குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு, சுபாஸ்கரன் அல்லிராஜாவின் நிறுவனத்துக்கு மேற்படி நிதித்தொகையில் 54 மில்லியன் டொலர்களை இரண்டு தவணைகளாக செலுத்த மத்திய வங்கி இணங்கியுள்ளதாகவும் எஞ்சிய 16 மில்லியன் அமெரிக்க டொலர்களை அந்த நிறுவனத்தைக் கொண்டு இலாபத்தை ஈட்டிக்கொள்வதற்கான வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளதெனவும் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், மத்திய வங்கி 2019.02.11 அன்று விடுத்துள்ள அறிக்கையில் எஞ்சிய தொகையான 16 மில்லியன் டொலர்களைச் செலுத்த மத்திய வங்கி இணங்கியுள்ளதாகவும், அதனால் மேற்படி கூட்டு நிறுவனங்களில் ஒரு நிறுவனத்தின் மூலதன வைப்புத்தொகையான 12 மில்லியன் ரூபாவை மத்திய வங்கி மறைந்து வைத்துள்ளதால் தமது வாடிக்கையாளர்களை மத்திய வங்கி ஏமாற்றுகின்றதெனவும் சாடியுள்ளார்.

மேற்படி, வர்த்தம் இலங்கையின் நிதிச் சட்டத்துக்கு முரணானது எனவும், இந்த வர்த்தக நடவடிக்கை மத்திய வங்கி மீதான நம்பிக்கையை முழுமையாக சீர்குலைக்கும் வகையில் அமைந்துள்ளதெனவும் தீவிரவாதச் செயற்பாடுகளுக்காக நிதி மோசடி செய்த குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ள சு.பாஸ்கரன் அல்லிராஜாவின் நிறுவனத்துக்கு இலங்கை நிறுவனம் ஒன்றை விற்பனை செய்வது பொருத்தமற்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

## குறை'களை' பதிகம் 20

### முன்னாள் போராளிகளின் வாழ்வு விடியுமா...?

குறை'களை' பதிகம் - இதில்
குறைகளைக் கேட்பவர் அதிகம் - நம்
முன்னாள் போராளிகளின் வாழ்வு விடிய வேண்டும்
குறை'களை' பதிகம் துணை புரிய வேண்டும்

வீட்டுத்திட்டம் வந்தால் புறக்கணிப்பு
அரசாங்க வேலை வந்தால் புறக்கணிப்பு
கேட்பதற்கு யாரும் இல்லை - நம்
வாழ்வு விடியும் என்று எண்ணம் இல்லை

மேடைப் பேச்சுக்களில் மட்டும் - நாம்
பேசப்படுகின்றோம் - சில அரசியல்வாதிகளின்
நலன்கருதி நாம் பேசப்படுகின்றோம்
இக் குறைகளைக் களைபவர் யார்?

மக்களுக்காய் நாம் கல்வி இழந்தோம்
சொந்த பந்தம் இழந்தோம் - நாம்
நிர்க்கதியாய் நிற்கையில் - இக்
குறை'களை' பதிகம் வழி வகுக்குமா?

கிரு.செந்தூரன்,
பருத்தித்துறை,
முன்னாள் போராளி.

**அன்பு வாசகர்களே!**

இப்பகுதியில் வெளிவரும் குறை 'களை' பதிகத்திற்கு நீங்களும் உங்கள் பகுதிகளில் உள்ள குறைகளை பதிகமாக எழுதி ஆசிரியர், குறை 'களை' பதிகம், வலம்புரி, இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். (ஆ-ர்)

# பல்வேறுபட்ட கோரிக்கைகளை முன்வைத்து நேற்று முகாமைத்துவ உதவியாளர் சங்கத்தினர் போராட்டம்





(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் பல்வேறுப்பட்ட கோரிக்கைகளை முன்வைத்து அனைத்து முகாமைத்துவ உதவியாளர் தொழிற் சங்கத்தினரால் கவனயீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டம் நேற்று திங்கட்கிழமை மட்டக்களப்பு காந்தி பூங்கா முன்பாக முன்னெடுக்கப்பட்டது.

முகாமைத்துவ உதவியாளர்கள், உத்தியோஸ்தர்கள் என 10க்கு மேற்பட்ட தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் முகமாக இந்த கவனயீர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

கோரிக்கைகள் அடங்கிய பதாகைகளை கையில் ஏந்தியவாறு இதன்போது ஆர்ப்பாட்டக்காரர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அரசினால் தொடர்ச்சியாக கண்டுகொள்ளாமல் விடப்படும் தொழில் உரிமைகளான தரம் 1,2,3 முகாமைத்துவ உதவியாளர்களுக்கு எம்.என்.4 சம்பளத் திட்டத்தின் அடிப்படையில் சம்பளம் வழங்கப்பட வேண்டும்,

பரீட்சை முறையிலான பதவி உயர்வுகள், முகாமைத்துவ உதவியாளர் சேவையைச் சேர்ந்தவர்களின் கடமைப் பொறுப்புக்களை முகாமைத்துவச் சேவையை சேர்ந்தவர்களுக்கு மாத்திரம் வழங்குதல்.

முகாமைத்துவ உதவியாளர் சேவை என்பதை முகாமைத்துவ உத்தியோகத்தர் சேவை என பெயர் மாற்றம் செய்தல் உள்ளிட்ட பல கோரிக்கைகள் இதன்போது ஆர்ப்பாட்டக்காரர்களால் முன்வைக்கப்பட்டன. (7)

# நாடாளுமன்ற மோதல் அறிக்கை நாளை சபையில் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் ஏற்பட்ட மோதல் தொடர்பாக தயாரிக்கப்பட்ட அறிக்கை சபையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அதன்படி நாளை புதன்கிழமை குறித்த அறிக்கை சபையில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக பிரதி சபாநாயகர் ஆனந்த குமாரசிறி தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக சபாநாயகர் கருஜெயசூரியவுடன் தான் கலந்துரையாடியுள்ளதாக பிரதி சபாநாயகர் கூறியுள்ளார்.

அத்தோடு நாடாளுமன்றில் ஏற்பட்ட மோதல் தொடர்பாக குற்றப் புலனாய்வு திணைக்களம் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில், கடந்த நவம்பர் மாதம் 15, 16 ஆம் திகதிகளில் ஏற்பட்ட மோதல் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுப்பதற்கு பிரதி சபாநாயகர் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (7)

# ஆலங்குடா கடற்கரையில் ஆணின் சடலம் மீட்பு

(கற்பிட்டி)

கற்பிட்டி ஆலங்குடா கடற்கரைப் பகுதியில் இருந்து இனந்தெரியாத ஆணொருவரின் சடலமொன்று நேற்றுக்காலை மீட்கப்பட்டுள்ளதாக நுரைச்சோலை பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுக்காலை குறித்த கடற்கரை பிரதேசத்தில் ஆண் ஒருவரின் சடலமொன்று கரையொதுங்கியுள்ளதாக நுரைச்சோலை பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து, அங்கு சென்ற பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

நீல நிறத்திலான டெனிம் காற்சட்டையும், அதே நிறத்திலான சேர்ட்டும் அணிந்திருந்த நிலையில் மீட்கப்பட்ட குறித்த நபர், 40 வயது மதிக்கத்தக்கவர் எனவும் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்த எந்த தடயப் பொருட்களும் இருக்கவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

எனினும், குறித்த நபருடைய முகப்பகுதி பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன், இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு முன்னர் உயிரிழந்திருக்கலாம் என தாம் சந்தேகிப்பதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

அத்துடன், சம்பவ இடத்திற்கு விஜயம் செய்த புத்தளம் மாவட்ட பதில் நீதவான், நீதவான் பரிசோதனையை நடத்திய பின்னர் சடலத்தை புத்தளம் தள வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். (7)

# இராகு-கேது பெயர்ச்சி - 2019

## 13.02.2019 – 31.08.2020

இராகு-கேது பெயர்ச்சி வந்து விட்டது. பெப்ரவரி 13 ஆம் திகதி பெயர்ச்சியாகும் இந்த கிரகங்களால் உங்கள் வாழ்வில் ஏற்பட்ட பிரச்சினைகள் தீரும். இதுவரை உங்கள் இராசிக்கு 12 ஆம் இடம் எனப்படும் விரய ஸ்தானத்தில் சஞ்சரித்து வந்த இராகு பகவான், இப்பொழுது இலாப ஸ்தானத் திற்குச் செல்கிறார். 6 இல் சஞ்சரித்து வந்த கேது பகவான், புத்திர ஸ்தானம் மற்றும் பூர்வ புண்ணிய ஸ்தானம் என்று அழைக்கப்படும் 5 ஆம் இடத் திற்கு வரப்போகிறார். மேலும் இராகுவின் பார்வை உங்கள் இராசியில் பதிகிறது. எனவே அள்ளிக் கொடுக்கும் இராகு, தொழில் வளத்தைப் பெருக்கி தொகை வரவை அதிகப்படுத்துவார்.

'5 ஆம் இடத்தில் கேது வருகின்றாரே அது பிள்ளைகள் வழியில் பெருமைகளைச் சேர்க்குமா?' என்று நீங்கள் குழம்ப வேண்டாம். கேது வரும் இடம், குரு வீடாகும். எனவே சுப கிரகத்தின் வீட்டில் ஞானகாரகன் கேது சஞ்சரிப்பதால் பிள்ளைகளின் கல்வி முன்னேற்றம் மிகச்சிறப்பாக இருக்கும். பட்ட மேற்படிப்பு படிக்கும் யோகமும் மாநில அளவில் தேர்வில் முதல் மதிப் பெண் பெற்று விருது வாங்கும் யோகமும் கூட திசாபுத்தி பலம் பெற்றவர்களுக்கு அமையும்.

உங்கள் இராசிக்கு 11 ஆம் இடத்தில் அடியெடுத்து வைக்கும் இராகு, புனர்பூசம் நட்சத்திரக் காலில் குரு சாரத்திலும் பிறகு திருவாதிரை நட்சத்திரக் காலில் சுய சாரத்திலும் மிருகசீரிடம் நட்சத்திரக் காலில் செவ்வாய் சாரத்திலுமாக சுமார் 1 1/2 ஆண்டு காலங்கள் சஞ்சரிப்பார். அதுபோல கேது பகவான் உத்தராடம் நட்சத்திரக் காலில் சூரிய சாரத்திலும் பூராடம் நட்சத்திரக் காலில் சுக்கிர சாரத்திலும் மூலம் நட்சத்திரக் காலில் சுய சாரத்திலுமாக சஞ்சரிக்கப் போகிறார்.

இந்த நட்சத்திரப் பாதசார அடிப்படையிலும் குருப்பெயர்ச்சி மற்றும் குருவின் அதிசார காலம், சனியின் வக்கிர இயக்க காலத்திற்கு ஏற்பவும் சுய ஜாதகத்தில் திசாபுத்தி படியும் உங்களுக்கு உரிய பலன்கள் நடைபெறும்.

**வருமானத்தை பெருக்கும் இலாப இராகு!**

**பெருமை சேர்க்கும் பஞ்சம கேது!**

11 ஆம் இடமான இலாப ஸ்தானத் திற்கு வரும் இராகு, உங்களின் சோகத்தை மாற்றிச் சுகத்தைக் கொடுப்பார். முறையாக நாகநாதர் வழிபாட்டை மேற்கொள்ளும் பொழுது, முன்னேற்றத்தின் முதல்படிக்குச் செல்ல இயலும். வியாபாரத்தில் இதுவரை ஏற்பட்ட சரிவை, சரிகட்டுவீர்கள். தொழிலை விரிவுபடுத்தும் முயற்சிக்கு வங்கிகளின் கடன் உதவி கிடைக்கலாம். வாடகை இடத்தில் நடைபெறும் தொழில் நிலையத்தை, சொந்த இடத்திற்கு மாற்றுவது பற்றிச் சிந்திப்பீர்கள். முன்னோர் வழி சொத்துக்களில் முறையாக பங்கீடு கிடைக்கும். படித்து முடித்தவர்களுக்கு வேலைவாய்ப்பும் வேலையில் இருப்பவர்கள் சுய தொழில் செய்யும் வாய்ப்பும் உருவாகலாம். சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்தில் உள்ளவர்களின் உதவி கிடைக்கும்.

பஞ்சம ஸ்தானத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது, பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்திற்காக செல விடுவீர்கள். பூர்வீக சொத்து பற்றிய பிரச்சினை நல்ல முடிவிற்கு வரும். கோவில் திருப்பணிகளை மீண்டும் தொடரும் வாய்ப்பு உருவாகும். ஞான மார்க்கத்தில் ஆர்வம் காட்டுவீர்கள். பூர்வீக வீட்டை அழகுபடுத்துவீர்கள். வாகனங்கள் வாங்குவதில் ஆர்வம் கூடும். ஒரு சிலருக்கு படித்த படிப்புக்கும் தொழிலுக்கும் சம்பந்தம் இல்லாத வேலை அமையும். அடிப்படை வசதிகளைப் பெருக்கிக் கொள்ள முன்வருவீர்கள். புதிய தொழில் தொடங்கும் திட்டங்கள் நிறைவேறும். முட்டுக்கட்டைகள் அகலும். வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்குவீர்கள். வேதனைகள் சாதனையாக மாறும் நேரம் இது.

**குரு சாரத்தில் ராகு சஞ்சாரம்**

## பதினொன்றில் இராகு பணவரவைத் தரும்

**ஜோதிடக் கலாமணி**
**சிவல்புரி சிங்காரம்**

**(13.2.2019 முதல்19.8.2019 வரை)**

புனர்பூசம் நட்சத்திரக் காலில் குரு சாரத்தில் இராகு சஞ்சரிக்கும் பொழுது, நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வந்து சேரும். குடும்பத்தில் சுபச் செலவுகள் அதிகரிக்கும். ஆற்றல்மிக்கவர்கள் உங்களுக்குப்பின்னணியாக இருந்து உதவுவார்கள். பிள்ளைகளின் கல்யாணக் கனவுகளை நனவாக்குவீர்கள். குடும்பத்தில் ஏற்பட்ட வாக்கு வாதங்கள் அகலும். வாழ்க்கைத் துணை வழியிலும் பிள்ளைகள் வழியிலும் உதிரி வருமானங்கள் பெருகும். கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டுவீர்கள். இழப்புகளை நினைத்து மனம் வாடிய நீங்கள், இப்பொழுது உழைப்பால் உயரப் போகிறீர்கள். ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் செயற்படுவீர்கள்.

**சுய சாரத்தில் இராகு சஞ்சாரம்**

**(20.8.2019 முதல்27.4.2020 வரை)**

திருவாதிரை நட்சத்திரக் காலில் சுயசாரத்தில் இராகு சஞ்சரிக்கும் பொழுது எதிர்பார்த்த வருமானம் வந்து சேரும். கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள். குலதெய்வப் பிரார்த்தனைகள் நிறைவேறும். பிறருக்கு பொறுப்புச் சொல்லி வாங்கிக் கொடுத்த தொகை திரும்பி வரும். குடும்ப உறுப்பினர்கள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். வெளிநாடு சென்றும் வேலை கிடைக்காதவர்களுக்கு, இப்பொழுது வேலை கிடைக்கும். உத்தியோகத்தில் உங்கள் திறமையைப் பார்த்து, மேலதிகாரிகள் பாராட்டுவார்கள். இளைய சகோதரத்தோடு இருந்த பிணக்கு மாறி இணக்கம் ஏற்படும்.

**செவ்வாய்சாரத்தில்இராகுசஞ்சாரம்**

**(28.4.2020 முதல்31.8.2020 வரை)**

மிருகசீரிடம் நட்சத்திரக் காலில் செவ்வாய் சாரத்தில் இராகு சஞ்சரிக்கும் பொழுது, மிகுந்த நற்பலன்கள் உங்களுக்கு கிடைக்கும். குடும்பத்தில் அமைதி நிலவும். திருமணம், குழந்தை பாக்கியம், வேலைவாய்ப்பு, பணவரவு, வெளிநாட்டு யோ[illegible] போன்றவற்றில் எந்த முயற்சி [illegible]திருந்தாலும் அது கைகூடும். சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டு. அசையா சொத்துக்கள் வாங்கி, அதில் வீடுகட்டி குடியேறும் வாய்ப்பு சிலருக்கு உண்டு. நவீன காலத்திற்கேற்ற பொருட்களை வாங்குவதில் கவனம் செலுத்துவீர்கள். ஆட்சி கட்டிலில் இருப்பவர்களின் அன்புக்கு பாத்திரமாகி உயரப் போகிறீர்கள்.

**சூரிய சாரத்தில் கேது சஞ்சாரம்**

**(13.2.2019 முதல்16.4.2019 வரை)**

உத்தராடம் நட்சத்திரக் காலில் சூரிய சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது மனக் கலக்கம் அதிகரிக்கும். குடும்பத்தில் மற்றவர்களின் ஒத்துழைப்பு கிடைக்காமல் போகலாம். வீண் அலைச்சல்களும் விரோதங்களும் ஏற்படும். அமைதி இன்மைக்கு வடிகாலாக ஆலயத்தை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள். அரசுப் பணிக்காக விண்ணப்பித்தவர்களுக்கு, தாமதங்கள் உருவாகும். கொஞ்சம் பொறுத்திருக்கத்தான் வேண்டும். பயணங்களை திடீர், திடீரென மாற்றியமைப்பீர்கள்.

**சுக்கிர சாரத்தில் கேது சஞ்சாரம்**

**(17.4.2019 முதல் 23.12.2019 வரை)**

பூராடம் நட்சத்திரக் காலில் சுக்கிர சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது, பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும். பூமியோகம் முதல் பொருளாதாரத்தில் உயர்ந்த நிலை வரையான யோகம் உண்டு. வாடகை வீட்டில் வசித்தவர்கள், இப்பொழுது சொந்த வீட்டிற்கு குடியேறுவார்கள். சொந்த வீட்டில் இருப்பவர்கள் மேலும் இடம் வாங்கி, வணிக ரீதியிலான கட்டடங்களைக் கட்டுவார்கள். உத்தியோகத்தில் உள்ளவர்கள், சுயதொழில் தொடங்க முன்வருவர். ஒரு சிலர் வாகனங்களை மாற்றுவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**சுய சாரத்தில் கேது சஞ்சாரம்**

**(24.12.2019 முதல்31.8.2020 வரை)**

மூலம் நட்சத்திரக் காலில் சுயசாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது,




இதுவரை இருந்து வந்த தடை கற்கள் அனைத்தும் படிக் கற்களாக மாறும். தகுதி அடிப்படையில் வேலைவாய்ப்பு கிடைக்கும். வெளியூர் அல்லது வெளி மாநிலம் செல்லும் யோகம் ஒருசிலருக்கு வாய்க்கும். குடும்ப உறவு திருப்தி தரும். மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர். ஆடம்பரச் செலவுகளால் கையிருப்புக் கரைந்தாலும் புதியயுக்திகளைக் கையாண்டு பொருளாதாரத்தை பெருக்குவீர்கள்.

**வழிபாடு!**

இலாபஸ்தான இராகுவால் வருமானம் திருப்தியாக அமையவும் பஞ்சம கேதுவால் பிள்ளைகள் வழியில் நல்ல



தகவல் கிடைக்கவும் சர்ப்ப சாந்திப் பரிகாரங்களை அனுகூல நாளில் செய்து கொள்ளுங்கள். சூரிய வழிபாட்டையும் செய்யலாம்.

**கவனம் தேவைப்படும் காலம்**

இராகு-கேது பெயர்ச்சி வந்து விட்டது. இந்தப் பெயர்ச்சியின் காரணமாக மகரத்தில் இருந்த கேது தனுசு இராசிக்கு இடம்பெயர்கிறார். அங்கு ஏற்கனவே இருக்கும் சனியுடன் இணைந்து சஞ்சரிக்கப் போகிறார். அப்படி சஞ்சரிக்கும் போது, 8.5.2019 முதல் 3.9.2019 வரையான காலத்தில் சனி வக்கிரம் அடைகிறார். ஆகையால் இந்த காலத்தில் கொஞ்சம் விழிப்புணர்வோடு இருப்பது அவசியம். உங்களின் விருப்பங்கள் நிறைவேற கொஞ்சம் விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டியதிருக்கும். அருளாளர்களின் ஆலோசனைகள் அவ்வப்போது கைகொடுக்கும். கொடுக்கல்-வாங்கல்களில் ஏமாற்றங்களைச் சந்திக்க நேரிடும். கொடுத்த பணம் திரும்ப வரவில்லையே என்று கவலைப்படுவீர்கள். பிள்ளைகள் வழியிலும் பிற வழிகளிலும் பிரச்சினைகள் உருவாகும். பிறருக்கு பணப் பொறுப்புகள் சொல்வதன் மூலம், சண்டை சச்சரவுகள் வரலாம். பெயர்ச்சிக்கு முன்னதாகவே முறையான சர்ப்ப பரிகாரங்களைச் செய்து கொள்ளுங்கள்.

**பெண்களுக்கான பலன்கள்**

இந்த இராகு- கேதுப் பெயர்ச்சி, உங்களுக்கு நன்மைகளையே வழங்கப்போகிறது. பொருளாதார நிலையை உயர்த்திக் கொடுக்கும். புதிய பாதை புலப்படும். பிள்ளைகளால் ஏற்பட்ட மனச்சஞ்சலம் அகலும். கணவன்-மனைவி ஒற்றுமை பலப்படும். தாய் வழி ஆதரவும் உண்டு. உடன்பிறப்புகள் உங்கள் பணிக்கு உறுதுணை புரிவர். கடன் சுமை குறையும். அசையா சொத்துக்கள் உங்கள் பெயரிலேயே வாங்குவதற்கு, குடும்ப உறுப்பினர்கள் சம்மதிப்பர். ஆரோக்கியத்தில் அடிக்கடி பாதிப்புகள் ஏற்பட்டு அகலும். சிறு தொல்லைகள் வந்தாலும் கவனித்து விடுங்கள். பணிநீக்கம் செய்யப்பட்டவர்கள் மீண்டும் பணியில் சேர வாய்ப்பு வரும். சகோதர வழியில் ஒத்துழைப்பு பலப்படும். மறைமுக எதிரிகள் விலகுவர். அரசியல் மற்றும் பொதுநல ஈடுபாட்டில் இருப்பவர்களுக்கு மதிப்பும் மரியாதையும் உயரும். புதிய பதவிகளும் கிடைக்கும். குலதெய்வ வழிபாடும், தசாபுத்திக்கேற்ற தெய்வ வழிபாடும் குடும்ப முன்னேற்றத்திற்கு வித்திடும். (தொடரும்)

# சமையல் எரிவாயு சிலிண்டர் வெடித்ததில் படுகாயமடைந்த மாணவி உயிரிழப்பு

(குருமன்காடு)

வவுனியா- மடுக்கந்தை, மயிலங்குளம் பகுதியிலுள்ள வீட்டில் சமையல் எரிவாயு சிலிண்டர் வெடித்ததில் படுகாயமடைந்த மாணவி பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

குறித்த அனர்த்தம் நேற்று முன்தினம் மதியம் இடம்பெற்றுள்ள நிலையில் பாதிக்கப்பட்ட 16 வயது பாடசாலை மாணவி நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளதாக தெரியவருகிறது.

வீட்டில் யாரும் இல்லாத சமயத்தில் குறித்த மாணவி சமைப்பதற்காக சமையலறைக்குச் சென்று அடுப்பினை உபயோகித்துள்ளார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் எரிவாயு சிலிண்டர் வெடித்துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வருகிறது.

சம்பவத்தின் பின் பாதிக்கப்பட்ட மாணவி உடனடியாக அயலவர்களால் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையிலேயே உயிரிழந்துள்ளார். (7)



வவுனியா இறம்பைக்குளம் ஸ்ரீகருமாரி நாகபூஷணியம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் சப்பரத் திருவிழா நேற்று முன்தினம் இடம்பெற்றது.

# இரு மோட்டார் சைக்கிள்கள் மோதல்; ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு!



முல்லைத்தீவு கொக்கிளாய் வீதியில் செம்மலைப் பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதிக் கொண்ட விபத்தின் போது இருவர் படுகாயமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையிலேயே ஒருவர் சிகிச்சை பலனளிக்காது உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. செம்மலைப் பகுதியினை சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான செ.பாஸ்கரன் என்ற குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்

முல்லைத்தீவு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (7-281)

# யுத்தகால வரலாற்றைப் பேசி நாட்டில் மீண்டும் பிரச்சினைகளை ஏற்படுத்துவது சிறந்ததல்ல

## திலங்க சுமதிபால கூறுகிறார்

(கொழும்பு)



யுத்தகால வரலாற்றைப் பேசி மீண்டும் மீண்டும் நாட்டில் பிரச்சினைகளை ஏற்படுத்துவது சிறந்ததல்ல. யாரால் தவறிழைக்கப்பட்டது என்பதைத் தேடிக் கொண்டிருக்காமல் எங்கு தவறு ஏற்பட்டது என்பதைக் கண்டறிந்து அவற்றுக்கான தீர்வை வழங்குவதற்கு அரசாங்கம் முயற்சிக்க வேண்டும் என முன்னாள் பிரதி சபாநாயகர் பாராளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபால தெரிவித்துள்ளார்.

யுத்தத்தின் போது இடம்பெற்ற இரு தரப்பு தவறுகளையும் மறந்து மன்னித்து முன்னோக்கி செல்ல வேண்டும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த வாரம் கிளிநொச்சியில் ஆற்றிய உரையில் தெரிவித்திருந்தார்.

பிரதமரின் இந்த கருத்து தொடர்பாக தமிழ் தேசிய கூட்டமைப்பு மற்றும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் வேறுபட்ட கருத்துக்களை முன்வைத்துள்ள நிலையில் இது குறித்து வினவிய போதே திலங்க மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# சிறுபோக நெற்செய்கைக்கு வழங்கும் நீரின் அளவு குறித்து தெளிவுபடுத்தவும்

## விவசாயிகள் கோரிக்கை

சிறுபோக நெற்செய்கைக்கு வழங்கும் நீரின் அளவு தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களம் விவசாயிகளைத் தெளிவுபடுத்த வேண்டுமென கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் பெரும் போக நெல் அறுவடை முடிவுற்றதும் இரணைமடு நீர்ப்பாசனத்தை நம்பியே சிறுபோக நெற்செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

சுமார் 15 ஆயிரம் ஏக்கர் சிறுபோக நெற்செய்கையில் ஈடுபடவுள்ள நிலையில் தற்போது இடம்பெற்றுள்ள அறுவடையின் பின் வயல் நிலங்கள் ஓரளவு ஈரலிப்பாகக் காணப்படுகின்றன.

இச்சூழ்நிலையில்வயலை உழுது பண்படுத்துவதற்கு நீர்ப்பாசனத் திணைக்களம் சிறுபோக நெற்செய்கைக்கு வழங்கும் நீரின் அளவையும் வயல் பரப்பையும் விவசாயிகளுக்கு விரைவில் அறிவிக்கவேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-10)

# மாணவர்கள் விண்ணப்பிக்கவும்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் 2019 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள பாடசாலை மாணவர்களையும் இரண்டாம் தடவை பாடசாலையூடாக தோற்றவுள்ள மாணவர்களையும் எதிர்வரும் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்பாக பாடசாலையில் விண்ணப்பிக்குமாறு பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார். (7-10-271)

# உணவகம் உடைத்து திருடிய குற்றச்சாட்டில் ஒருவர் கைது

(புதுக்குடியிருப்பு)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு அருகாமையில் உள்ள உணவகம் ஒன்றில் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பாக பத்து இலட்சம் ரூபாய் பணம் மற்றும் மூன்று இலட்சம் ரூபாய்பெறுமதியான தொலைபேசி மீள்நிரப்பு அட்டைகளைத் திருடிய குற்றச்சாட்டில் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேக நபரை புதுக்குடியிருப்புப் பகுதியில் வைத்து நேற்றுத் திங்கட்கிழமை மதியம் கைது செய்துள்ளதாக சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் உணவகத்தின் மேல் கூரைத் தகட்டைக் கழற்றி, உள்ளே போடப்பட்டிருந்த பாதுகாப்பு சீற்றினை உடைத்து பின்னர் பாதுகாப்பு கமராக்களின் இயக்கத்தினைத் துண்டித்து பத்து இலட்சம் ரூபாய் பணம்மற்றும் மீள்நிரப்பு அட்டைகளைக் கொள்ளை யிட்டு தப்பிச் சென்றமை குறிப்பிடத்தக்கது. கைது நடவடிக்கையை சாவகச்சேரி பொலிஸ் நிலைய உப பொலிஸ் பரிசோதகர் இ.சேந்தன் தலைமையிலான குழுவினர் முன்னெடுத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-30)

# மாற்றுத்திறனாளியின் பயணம் வவுனியாவில் நிறைவடைந்தது

இன நல்லுறவை வலியுறுத்தி யாழில் இருந்து மாற்றுத் திறனாளியால் ஆரம்பிக்கப்பட்ட பயணம் 15 ஆவது நாளில் வவுனியாவில் முடிவடைந்தது!

நாட்டிலுள்ள சமூகங்களுக்கிடையே நல்லுறவையும் சமாதானத்தையும் ஏற்படுத்த வேண்டுமென வலியுறுத்தியும் மாற்றுத் திறனாளிகளின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டுமெனக் கோரியும் நாடு பூராகவும் செல்லும் வகையில் யாழில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட பயணம் கடந்த 16 ஆம் திகதி வவுனியாவில் முடிவடைந்தது.

மாற்றுத்திறனாளியான மக்கீன் முகமட் அலி என்பவர் கடந்த முதலாம் திகதி சக்கர நாற்காலியில் இந்தப் பயணத்தை யாழில் ஆரம்பித்திருந்தார். யாழிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பயணம் கொழும்பு, காலி, மாத்தறை என நாட்டின் பல பாகங்களுக்கும் சென்று 15 நாட்களுடன் வவுனியாவில் முடிவடைந்தது.

தமிழ் மாற்றுத்திறனாளிகள் அமைப்பின் ஏற்பாட்டில் நாடு பூராகவும் செல்லும் வகையில் ஆரம்பிக்கப்பட்ட இப் பயணமானது 1400 கிலோ மீற்றர் தூரம் சென்று வந்த நிலையிலையே முடிவிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இதன்போது தனக்கு ஆதரவை வழங்கிய தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களுக்கும் அத்தோடு ஊடகங்களுக்கும் இதனை ஏற்பாடு செய்த அமைப்பிற்கும் அவர் நன்றிகளைத் தெரிவித்துள்ளார்.

மேலும் தனது கோரிக்கைகள் தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்திப்பதற்காக தான் காத்துக் கொண்டிருப்பதாகவும்தெரிவித்தார்.(7-250)

# ஊற்றுப்புலம் பாடசாலை மாணவர்களுக்கு உதவிகள்





கிளிநொச்சி ஊற்றுப் புலம் அ.த.க.பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு புத்தகப் பைகள் மற்றும் தரம்-5 மாணவர்களுக்கான பயிற்சிப் புத்தகங்கள் வாங்குவதற்கான பண உதவி என்பன வழங்கப்பட்டுள்ளன.

புங்குடுதீவைச் சேர்ந்த சமூக சேவையாளரான வைரவநாதன் ஜெகனின் நிதிப் பங்களிப்பின் மூலம் புங்குடுதீவைச் சேர்ந்த ஜெகதீஸ் காந்தி ஆசிரியரின் ஒழுங்கமைப்பில் கிளிநொச்சி ஊற்றுப்புலம் அ.த.க. பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களின் கற்றலை ஊக்குவிக்கும் நோக்குடன் புத்தகப்பைகள், தரம்-5 மாண வர்களுக்கான பயிற்சிப் புத்தகங்கள் வாங்குவதற்கான பணம் என்பன பாடசாலையில் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டுள்ளன. (7)

# ‘இராவணன் திராவிடன்’ நூல் வெளியீடு





வவுனியாவைச் சேர்ந்த இரா. சுப்பிரமணியம் எழுதிய ‘இராவணன் திராவிடன்’ நூல் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வவுனியா பிரதேச செயலகத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது. முன்னாள் நகர சபைத் தலைவர் எஸ்.என். ஜி.நாதன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வடக்கு-கிழக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் பிரதம விருந்தினராக கலந்துகொண்டார். (7)




# ஸ்டெர்லைட் ஆலையைத் திறக்கத் தடை பசுமை தீர்ப்பாயத்தின் உத்தரவு ரத்து

## உச்ச நீதிமன்றம் உத்தரவு



(தூத்துக்குடி)

தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் உத்தரவை ரத்து செய்தும் தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலையைத் திறக்கத் தடை விதித்தும் உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தூத்துக்குடியில் கடந்த ஆண்டு மே 22ஆம் திகதி நடந்த ஸ்டெர்லைட் எதிர்ப்பு போராட்டத்தின்போது வன்முறை வெடித்தது. பொலிஸ் துப்பாக்கிச் சூட்டில் 13 பேர் உயிரிழந்தனர். இதைத்தொடர்ந்து தமிழக அரசு உத்தரவுப்படி மே 28ஆம் திகதி ஆலை மூடி சீல் வைக்கப்பட்டது.

அரசின் நடவடிக்கையை எதிர்த்தும், ஆலையை மூட தமிழக அரசு பிறப்பித்த அரசாணையை ரத்து செய்யக் கோரியும் தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தில் வேதாந்தா குழுமம் வழக்கு தொடர்ந்தது.

இதை விசாரித்த பசுமை தீர்ப்பாயம், ஆலையைத் திறக்க கடந்த டிசெம்பர் மாதம் 15ஆம் திகதி உத்தரவிட்டது.

பசுமைத் தீர்ப்பாயத்தின் உத்தரவை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு மேன்முறையீட்டு மனு தாக்கல் செய்தது. மதிமுக பொதுச்செயலாளர் வைகோவும் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார்.

தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் உத்தரவை உடனே அமுல்படுத்த தமிழக அரசுக்கு உத்தரவிடக் கோரி வேதாந்தா குழுமம் சார்பிலும் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுக்களை நீதிபதிகள் ஆர்.பாலி நாரிமன், நவீன் சின்ஹா ஆகியோர் அடங்கிய அமர்வு விசாரித்தது. ஸ்டெர்லைட் ஆலை தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் ஏற்கனவே நிலுவையில் உள்ள வழக்குகளும் இந்த மனுக்களோடு சேர்த்து விசாரிக்கப்பட்டன.

இந்த வழக்கில் சட்டத்தரணிகள் வாதம் கடந்த 7ஆம் திகதியுடன் முடிவடைந்ததையடுத்து தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டது. இந்நிலையில் இவ்வழக்கில் உச்ச நீதிமன்றம் தீர்ப்பை வழங்கி யது.

தீர்ப்பில் உச்ச நீதிமன்ற நீதிபதிகள், ஓய்வுபெற்ற நீதிபதி தருண் அகர்வால் தலைமையிலான குழு அளித்த அறிக்கையின்படி ஆலையைத் திறக்க அனுமதி வழங்கிய தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் உத்தரவை ரத்து செய்து உத்தரவிட்டனர்.


அத்துடன், "ஆலையை மூட உத்தரவிட்ட தமிழக அரசின் அரசாணையை ரத்து செய்ய பசுமைத் தீர்ப்பாயத்துக்கு அதிகாரம் இல்லை என்று தெரிவித்தனர்.

மேலும், "இதுதொடர்பாக தமிழக அரசும் வேதாந்தா நிறுவனமும் சென்னை உயர் நீதிமன்றத்தை அணுகித் தீர்வு பெற்றுக்கொள்ளலாம்" என்றும் உச்ச நீதிமன்றத்தின் உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, ஸ்டெர்லைட் ஆலையைமூடுமாறுசென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (4-7)

# புல்வாமா தாக்குதலுக்கு ஐக்கிய அரபு அமீரகத்தின் இந்திய சமூகத்தினர் எதிர்ப்பு

## அஞ்சலி நிகழ்வில் நவ்தீப் சூரி தெரிவிப்பு



(புல்வாமா)

புல்வாமாவில் இந்திய இராணுவ வீரர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு ஐக்கிய அரபு அமீரகத்திலுள்ள இந்திய சமூகத்தினர் தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து ஊடகங்களில், "ஐக்கிய அரபு அமீரகத்தில் வசிக்கும் இந்திய சமூகத்தினர் காஷ்மீரில் உள்ள புல்வாமா மாவட்டத்தில் நடந்த தீவிரவாதத் தாக்குதலில் உயிரிழந்த இந்திய ராணுவ வீரர்களுக்கு அபுதாபியில் உள்ள வெளியுறவுத் தூதரகத்துக்கு முன் மெழுகுவர்த்தி ஏந்தி அஞ்சலி செலுத்தினர்" என்று செய்தி வெளியானது.

இந்த அஞ்சலி நிகழ்வில் பங்கேற்ற வெளியுறவுத் தூதரக அதிகாரி நவ்தீப் சூரி கூறும்போது, "நமது பிரதமர் நம்மிடையே பேசினார். தேசத்தின் ரத்தம் கொதிக்கிறது. தீவிரவாதிகளும் அவர்களது தலைவர்களும் பெரும் தவறைச் செய்து விட்டனர். இதற்கான பரிசை அவர்கள் பெற்றே தீருவார்கள்.

ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள இந்திய சமூகத்தினர் இந்தியாவுக்கு முழு ஆதரவு அளிப்போம். வட்ஸ் அப் போன்ற சமூக வலைதளங்களில் இந்தியர்களே இந்தியர்களுக்கு எதிரானவர்கள் என்று வதந்தி பரப்பப்படுகிறது. இதில் நாம் கவனமாக இருக்க வேண்டும்.

நமது ராணுவ வீரர்கள் மீது நடத்தப்பட்ட இந்தத் தீவிரவாதத் தாக்குதலுக்கு இந்திய சமூகத்தினர் கோபமும், வருத்தமும் கொண்டுள்ளனர் என தெரிவித்துள்ளார்.

ஜம்மு-காஷ்மீர் மாநிலம், புல்வாமா மாவட்டத்தில் அவந்திபோரா நெடுஞ்சாலையில் கடந்த வியாழக்கிழமை சி.ஆர்.பி.எப். வீரர்கள் சென்ற பேருந்து மீது ஜெய்ஷ் இ முகமது தீவிரவாதி தற்கொலைப் படைத் தாக்குதல் நடத்தினார். இதில், 40 வீரர்கள் கொல்லப்பட்டனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-7)

# பாகிஸ்தான்-சவுதிக்கிடையில் 20 பில்லியன் பெறுமதியான ஒப்பந்தம் கைச்சாத்து



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானுக்கு விஜயம் செய்துள்ள சவுதி அரேபிய முடிக்குரிய இளவரசர் முகமது பின் சல்மான் 20 பில்லியன் பெறுமதியான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளார்.

தெற்காசியா மற்றும் சீனாவிற்கான பயணத்தின் ஓர் அங்கமாக, சவுதி அரேபியாவின் முடிக்குரிய இளவரசர் முகமது பின் சல்மான் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பாகிஸ்தானுக்கு விஜயம் செய்துள்ளார்.

அவரது விஜயத்தை முன்னிட்டு பாகிஸ்தானில், பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானை சவுதி இளவரசர் நேற்றிரவு சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து பேசியுள்ளார்.

இதன் போதே இளவரசர் முகமது பின் சல்மான் 20 பில்லியன் பெறுமதியான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளார்.

புல்வாமா தாக்குதல் நடத்தப்பட்டமைக்கு பாகிஸ்தானே முக்கிய காரணம் என இந்தியா குற்றம் சுமத்தியுள்ளது.

இதனால் இரு நாடுகளுக்கும் இடையில் பதற்றமான சூழல் ஏற்பட்டுள்ள நிலையில் சவுதி இளவரசரின் பாகிஸ்தான் விஜயம் அமைந்துள்ளது.

ஆனால், பாகிஸ்தான் இந்த சம்பவத்திற்கும் தமக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என அறிவித்துள்ளது.

இந்த நிலையில், முகமது பின் சல்மானின் பாகிஸ்தான் விஜயம் அபாயகரமானது என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-7)

# பயங்கரவாதத்

# 30 இராணுவ



(டெஹ்ரான்)

**இந்தியாவைத் தொடர்ந்து ஈரானில் பாகிஸ்தான் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 30 இராணுவ வீரர்கள் பலியாகினர்.**

இந்த தாக்குதலுக்கு ஜெய்ஸ் அல்-அடில் என்ற பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.

இந்தியாவின் எல்லை மாநிலமான காஷ்மீரில் புல்வாமா மாவட்டத்தில் பயங்கரவாதிகள் நடத்திய தற்கொலை தாக்குதலில் 40 சிஆர்பிஎஃப் வீரர்கள் வீர மரணம் அடை ந்தனர்.

இந்த தாக்கு தலுக்கு பாகிஸ்தான் ஆதரவு பெற்ற ஜெய்ஸ் இ-முகமது என்ற பயங்கரவாத அமைப்பினர் பொறுப்பெற்றனர்.

இந்த நிலையில், ஈரானிலும் பாகிஸ்தான் தீவிரவாதிகள் தற்கொலை படைத் தாக்குதல் நடத்தியுள்ளனர். பாகிஸ்தானின் பலுசிஸ்தான் எல்லையில் ஈரானின் சிஸ்டான் பகுதி உள்ளது. அங்கு எல்லை பாதுகாப்பு பணியில் ஈரான் ராணுவம் ஈடுபட்டிருந்தது.

அப்போது அங்கு புகுந்த பயங்கரவாதிகள் இராணுவ வீரர்கள் மீது அதிரடி தாக்குதல் நடத்தினர். அதில் 30 இராணுவ வீரர்கள் பலியாகினர்.

இந்த தாக்குதலுக்கு ஜெய்ஸ் அல்-அடில் என்ற பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.

இந்த அமைப்பும், இந்திய இராணுவ

# மதுபான விடுதியில் 5 பேர் பரிதாபமா

(மெக்சிக்கோ சிட்டி)

மெக்சிக்கோவில் மதுபான விடுதியில் நிகழ்ந்த துப்பாக்கிச்சூட்டில் 5 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிர் இழந்தனர்.

மெக்சிக்கோவின் குவிண்டானா ரூ மாகாணத்தில் கரீபியன் கடலையொட்டி உள்ள கான்கன் நகர் புகழ்பெற்ற சுற்றுலா தலமாக விளங்குகிறது.

இங்கு அண்மைக்காலமாக வன்முறை சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

இந்த நிலையில், அங்குள்ள மதுபான விடுதி ஒன்றில் நேற்று முன்தினம் இரவு ஏராளமான மக்கள் திரண்டிருந்தனர். அவர்கள் மது, ஆடல், பாடல் என மகிழ்ச்சியில் திளைத்

# புல்வாமாவில் மீண்டும் நான்கு இராணுவ வீர




(புல்வாமா )

ஜம்மு- காஷ்மீரின் புல்வாமா மாவட்டத்தில் நேற்று திங்கட்கிழமை காலை நடந்த துப்பாக்கிச்சூட்டில் 4 இராணுவ வீரர்கள் உயிரிழந்துள்ளனர்.

புல்வாமா மாவட்டத்தின் பிங்லன் பகுதியில் பயங்கரவாதிகள் பதுங்கியிருப்பதாக தகவல் கிடைத்தது. இதையடுத்து நேற்றுக் காலை அங்கு விரை

# ...தத் தாக்குதல் ...வ வீரர்கள் பலி



வீரர்கள் மீது தாக்குதல் நடத்திய ஜெய்ஸ்-இ- முகமது பயங்கரவாத அமைப்பும் பாகிஸ்தான் இராணுவத்தின் ஆதரவு பெற்றவை.

எனவே, இந்த தாக்குதலுக்கு பாகிஸ்தானே காரணம் என ஈரான் குற்றம் சாட்டியுள்ளது. இதுகுறித்து ஈரான் இராணுவ தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் முகமது அலி ஜாப்ரி பேட்டி அளித்தார்.

இந்த தாக்குதலில் பாகிஸ்தான் ஆதரவு பெற்ற பயங்கரவாதிகள் ஈடுபட்டுள்ளனர்.

இது பாகிஸ்தான் அரசுக்கு நன்றாக தெரியும். இதற்கு பாகிஸ்தான் கடுமையான விளைவுகளை சந்திக்க நேரிடும் என்றார்.

மேலும் அவர் தெரிவிக்கும் போது,இந்த தாக்குதலில் சவுதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்டுக்கு தொடர்பு இருந்தால் அவர்களுக்கும் தக்க பதிலடி கொடுப்போம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (4-7)

# ...தனிப்பட்ட விருப்பங்களை ஒதுக்கி விட்டு பிரெக்ஸிட் நடவடிக்கையை ஆதரிக்க வேண்டும்

## இங்கிலாந்து பிரதமர் வலியுறுத்து

(லண்டன்)

இங்கிலாந்து பிரதமர் தெரசா மே தனது சொந்த கட்சி எம்.பி.க்களுக்கு எழுதிய உருக்கமான கடிதத்தில், தனிப்பட்ட விருப்பங்களை ஒதுக்கி வைத்துவிட்டு பிரெக்ஸிட் நடவடிக்கையை ஆதரிக்க வேண்டுமென வலியுறுத்தி உள்ளார்.



ஐரோப்பிய கூட்டமைப்பில் இருந்து விலக முடிவு செய்த இங்கிலாந்து அரசு, இது தொடர்பாக 2016ஆம் ஆண்டு பொது வாக்கெடுப்பு நடத்தியது. பெரும்பான்மை மக்கள் அரசின் முடிவுக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

அதன்படி ஐரோப்பிய கூட்டமைப்பில் இருந்து இங்கிலாந்து முறைப்படி விலகுவதற்கான 'பிரெக்ஸிட்' நடவடிக்கையை பிரதமர் தெரசா மே முன்னெடுத்தார்.

ஆனால் அனைத்து தரப்பினரின் ஆதரவுடன் 'பிரெக்ஸிட்' நடவடிக்கையை அவர் வெற்றிகரமாக செய்து முடிப்பாரா என்பது கேள்விக் குறியாகவே உள்ளது.

ஏனென்றால் பிரெக்ஸிட்டுக்காக ஐரோப்பிய கூட்டமைப்புடன் தெரசா மே ஏற்படுத்திய ஒப்பந்தத்தை நிராகரித்த இங்கிலாந்து நாடாளுமன்றம், ஒப்பந்தம் இல்லாமல் வெளியேறும் முடிவையும் புறக்கணித்தது.

இதனால் ஐரோப்பிய கூட்டமைப்புடன் புதிய ஒப்பந்தத்தை ஏற்படுத்தியாக வேண்டிய நிலையில் தெரசா மே உள்ளார்.

ஆனால் ஐரோப்பிய கூட்டமைப்போ, பிரெக்ஸிட்டுக்காக ஏற்கனவே போடப்பட்ட ஒப்பந்தமே இறுதியானது என்றும், இனி பேச்சுவார்த்தைக்கு இடம் இல்லை என்றும் தெரிவித்து இது தெரசா மேவுக்கு மேலும் தலைவலியாக அமைந்துள்ளது.

இதற்கிடையில், ஐரோப்பிய கூட்டமைப்பில் இருந்து வெளியேறுவதில் மக்கள் விருப்பம் எப்படி இருக்கிறது என்பதை அறிய ஒரு கருத்துக்கணிப்பு நடத்தப்பட்டது.

அதில் 'திடீர்' திருப்பமாக 53 சதவீதம் பேர் ஐரோப்பிய கூட்டமைப்பில் இருந்து வெளியேறுவதை இங்கிலாந்து தாமதப்படுத்த வேண்டும் என வலியுறுத்தினர்.

இந்த நிலையில், 'பிரெக்ஸிட்' பேச்சுவார்த்தைக்காக பெல்ஜியம் தலைநகர் பிரசல்ஸ் சென்றுள்ள தெரசா மே, அங்கிருந்தபடி தனது கன்சர்வேட்டிவ் கட்சி எம்.பி.க்களுக்கு உருக்கமான கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

அதில், எம்.பிக்கள் தங்களின் தனிப்பட்ட விருப்பங்களை ஒதுக்கிவைத்து விட்டு பிரெக்ஸிட்டுக்கு ஆதரவு அளிக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

அந்த கடிதத்தில் தெரசா மே தெரிவித்ததாவது,

'பிரெக்ஸிட்' விவகாரத்தில் எம்.பி.க்களின் நிலைப்பாட்டை நான் குறைத்து மதிப்பிடவில்லை. நமது நாட்டிற்கு எது சிறந்ததோ அதை செய்யவேண்டும் என்பதே நம் அனைவரின் நோக்கமாக உள்ளது. அதை செய்ய நமக்கு தனிப்பட்ட முறையில் உடன்பாடு இல்லை என்றாலும், அதை நாம் செய்து தான் ஆக வேண்டும்.

நாடாளுமன்றத்தின்மூலம் 'பிரெக்ஸிட்' நடவடிக்கையை நிறைவேற்ற தவறினால் எந்த காரணத்துக்காக மக்கள் நம்மை அவர்களின் பிரதிநிதிகளாக நாடாளுமன்றத்துக்கு அனுப்பினார்களோ அது தோல்வியில் முடியும்.

மக்களின் பிரகாசமான எதிர்காலம் கேள்விக் குறியாகும். எனவே எம்.பிக்கள் தங்களின் தனிப்பட்ட விருப்பங்களை ஒதுக்கிவைத்து விட்டு பிரெக்ஸிட்டை ஆதரிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.(4-7)

# ...ில் துப்பாக்கிச்சூடு ...மாக உயிரிழப்பு

திருந்தனர்.

அப்போது அங்கு வந்த மர்ம நபர்கள் சிலர் திடீரென அங்கிருந்த அனைவரையும் துப்பாக்கியால் சரமாரியாக சுட்டனர்.

இதனால் அங்கு பெரும் பதற்றமும், பீதியும் தொற்றிக்கொண்டது. மக்கள் அனைவரும் அலறிஅடித்துக் கொண்டு நாலாபுறமும் சிதறி ஓடினர்.

எனினும் இந்த கோர சம்பவத்தில் 5 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிர் இழந்தனர். மேலும் பலர் படுகாயம் அடைந்தனர்.

தகவல் அறிந்து பொலிஸார் வருவதற்குள் துப்பாக்கிச்சூடு நடத்திய மர்மநபர்கள் காரில் ஏறி தப்பிச் சென்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-7)

# ஐ.நாவுக்கான அமெரிக்க தூதுவர் ஹீத்தர் நாவேர்ட் பதவி விலகினார்

(வோஷிங்டன்)

ஐ.நாவின் அமெரிக்க தூதுவருக்கான பரிந்துரையில் இருந்து தான் விலகுவதாக ஹீத்தர் நாவேர்ட் தெரிவித்துள்ளார்.

ஐ.நாவுக்கான அமெரிக்க தூதுவராக இருந்த இந்திய வம்சாவளியை சேர்ந்த நிக்கி ஹாலே கடந்த ஆண்டு தனது பதவியில் இருந்து விலகினார்.

அதனை தொடர்ந்து அந்த பதவிக்கு உள்துறை அமைச்சகத்தின் செய்தி தொடர்பாளரும், முன்னாள் ஊடகவியலாளருமான ஹீத்தர் நாவேர்ட்டை ஜனாதிபதி ட்ரம்ப் பரிந்துரை செய்தார்.

எனினும், ஹீத்தர் நாவேர்ட்டுக்கு தூதரக பணியில் போதிய அனுபவம் இல்லை என கூறி ஜனநாயக கட்சியினர் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இந்த நிலையில், ஐ.நா.வின் அமெரிக்க தூதுவருக்கான பரிந்துரையில் இருந்து தான் விலகுவதாக ஹீத்தர் நாவேர்ட் அறிவித்தார்.

தனது குடும்ப நலனுக்காக இந்த முடிவை எடுத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.



இதையடுத்து, ஐ.நாவின் அமெரிக்க தூதருக்கான புதிய வேட்பாளரை ட்ரம்ப் விரைவில் பரிந்துரை செய்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (4-7)

# ...டும் துப்பாக்கிச்சூடு ...வீரர்கள் உயிரிழப்பு

ந்த பாதுகாப்பு படையினர் பயங்கரவாதிகளை சுற்றி வளைத்து தாக்குதல் நடத்தினர். பதிலுக்கு பயங்கரவாதிகளும் தாக்குதல் நடத்தினர்.

இந்த சண்டையில் இராணுவ மேஜர் உள்ளிட்ட 4 வீரர்கள் உயிரிழந்தனர். ஒருவர் காயமடைந்துள்ளார். இதனால் அப்பகுதியில் பதற்றமான சூழல் நிலவுகின்றது.

ஜம்மு-காஷ்மீர் மாநிலம் புல்வாமாவில் கடந்த 14ஆம் திகதி பயங்கரவாத அமைப்பு நடத்திய தற்கொலைத் தாக்குதலில் 40 துணை இராணுவ வீரர்கள் உயிரிழந்தனர்.

இந்த தாக்குதலுக்கு இந்திய இராணுவம் தக்க பதிலடி கொடுக்க வேண்டும் என பல்வேறு தரப்பினரும் தெரிவித்து வருகின்றனர்.

இவ்வாறான நிலையில் நேற்று மற்றுமொரு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதனால் அப்பகுதியில் பதற்ற சூழல் அதிகரித்துள்ளது.

எல்லை தாண்டிய பயங்கரவாத தாக்குதலை முறியடிக்க இராணுவம் பதிலடி கொடுக்கும் என அரசும் தெரிவித்துள்ளது.

இதையடுத்து ஜம்மு- காஷ்மீரில் உள்ள பயங்கரவாதிகளை தேடும்பணியில் தொடர்ந்தும் இராணுவம் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (4-7)

# பிராந்தியங்களுக்குள் மோதலை உருவாக்க அமெரிக்கா எப்போதும் முயற்சி செய்கின்றது

## ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சர் சுட்டிக்காட்டு

(டெஹ்ரான்)

பிராந்தியங்களுக்குள் மோதலை உருவாக்க அமெரிக்கா முயற்சி செய்கின்றது என்றும் இந்நிலையில் இஸ்ரேல் போரொன்றினை எதிர்பார்த்துள்ளதாகவும், ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சர் குற்றம் சாட்டியுள்ளார்.

முனிச் பாதுகாப்பு மாநாட்டில் கலந்துகொண்டு நேற்று



முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கருத்து தெரிவித்த போதே அமைச்சர் மொஹமட் ஜவாத் ஜரீஃப் இவ்வாறு தெரிவித்தார்.

அத்தோடு சிரியாவில் குண்டுவீச்சு தாக்குதலை நடத்தி சர்வதேச சட்டத்தை மீறிய இஸ்ரேல் மீது குற்றம் சாட்டி, அப்பிராந்தியத்தில் இருந்து இஸ்ரேலை வெளியேற்ற அமெரிக்காவும் மேற்கத்தேய நாடுகளும் அழுத்தம் கொடுக்கவில்லை என்றும் அவர் விமர்சித்தார்.

மேலும் இதன் மூலம் வரும் ஆபத்து (போர்) பெரியது என்றும் சர்வதேச சட்டத்தினை, மிகத் தீவிரமாக மீறுவதாலும் தொடர்ந்தும் பாராமுகமாக இருப்பதாலும் ஆபத்து இன்னும் அதிகமாகும் என தெரிவித்துள்ளார்.(4-7)

# இலங்கையில் அலுக்கோசு பதவிக்கு விண்ணப்பித்த அமெரிக்கப் பிரஜை!

(கொழும்பு)

இலங்கையில் தூக்குத் தண்டனை நிறைவேற்றும் அலுக்கோசு பதவிக்கான விண்ணப்பத்தை சிறைச்சாலை திணைக்களம் கோரியுள்ளது.

இந்நிலையில் இந்தப் பதவிக்காக அமெரிக்க நாட்டவர் ஒருவர் விண்ணப்பித்துள்ளதாக சிறைச்சாலையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.இலங்கையில் ஒரு வரையும் தனக்கு தெரியாதென வும் இந்த தொழிலுக்கு தான் அதிக விருப்பத்துடன் உள்ளதாகவும்குறித்த அமெரிக்க நாட்டவர் தெரிவித்துள்ளார்.

இந்த பணி தனக்கு கிடைக்கும் என தான் நம்புவதாக குறித்த அமெரிக்க நாட்டவர், சிறைச்சாலை திணைக்கள மின்னஞ்சலுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இந்தப் பதவிக்காக இலங்கையர் ஒருவரை தெரிவு செய்வதற்கு பதிலாக தன்னை தெரிவு செய்வது மிகவும் பொருத்தமானது என குறித்த நபர் தனது விண்ணப்பத்தில் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

# விண்ணப்பங்கள் கிடைக்கவில்லை

(கொழும்பு)

அலுக்கோசு பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டு, விளம்பரம் செய்யப்பட்டிருந்த போதிலும், இது வரையிலும் ஒரு விண்ணப்பமேனும் கிடைக்கவில்லை யென சிறைச்சாலைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

விண்ணப்பங்கள் கடந்த 11 ஆம் திகதி முதல் கோரப்பட்டிருந்தன. எதிர்வரும் 25 ஆம் திகதி விண்ணப்பங்களை ஏற்கும் இறுதித் திகதியாகுமென அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்ததெனத் தெரிவித்த சிறைச்சாலைகள் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் துஷார உபுல்தெனிய, இதுவரை எவ்விதமான விண்ணப்பங்களும் கிடைக்கவில்லை எனத் தெரிவித்தார்.


அலுக்கோசு பதவிக்காக விண்ணப்பங்களை அனுப்புபவர் ஆணாகவும் 18-45 வயதுக்கிடைப்பட்டவராகவும் இருக்க வேண்டுமென அறிவுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது. அத்துடன், கல்விப் பொதுத்தராதர சாதாரணத் தரப் பரீட்சையில் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

போதைப்பொருள் வர்த்தகர்களுக்கு மரண தண்டனையை நிறைவேற்றுவது தொடர்பில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றார். இந்நிலையிலேயே அலுக்கோசு பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டன.

இதேவேளை, மரண தண்டனையை இலங்கையில் மீண்டும் அமுல்படுத்துவதற்கு எடுக்கப்படும் முயற்சிகளுக்கு, கத்தோலிக்க ஆயர் பேரவை கடுமையான எதிர்ப்பை தெரிவித்து அறிக்கையொன்றையும் வெளியிட்டிருந்தது.

இந்நிலையில், மரண தண்டனையை, இலங்கையில் மீண்டும் அமுல்படுத்துவது தொடர்பிலான கலந்துரையாடல்கள் தொடர்பில் தாமும் அவதானத்தைச் செலுத்தியிருந்ததாகத் தெரிவித்துள்ள ஐரோப்பிய ஒன்றியம், மரண தண்டனையை அமுல்படுத்தினால், ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகையை இழக்க வேண்டிய நிலைமை யேற்படுமென எச்சரிக்கை செய்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

# தொழிலாளர்களுக்கான சம்பளத்தை உயர்த்தி தமிழ் முற்போக்கு கூட்டணி சாதனை- திகா



(கொழும்பு)

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு தொழிற்சங்க ரீதியில் செய்து கொள்ளப்பட்ட கூட்டு ஒப்பந்தம் ஊடாக 20 ரூபாய் பெற்று கொடுக்கப்பட்டு தொழிலாளர்களை ஏமாற்றியுள்ள நிலையில் மக்கள் வழங்கிய அரசியல் பலத்தால் வரலாற்றில் முதல் முறையாக வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் நாள் ஒன்றுக்கு 50 ரூபாய் வீதம் சம்பளத்தை உயர்த்தி தமிழ் முற்போக்கு கூட்டணி சாதனை படைத்துள்ளது என மலைநாட்டு புதிய கிராமங்கள் மற்றும் உட்கட்டமைப்பு அமைச்சர் பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

அரசாங்கம் வரவு-செலவுத் திட்டத்தின் மூலமாக வழங்கப்பட உள்ள ஐம்பது ரூபாய் சம்பள அதிகரிப்பு தொடர்பான விளக்கமளிக்கும் கூட்டம் நேற்று முன்தினம் ஹற்றன் டி.கே.டபிள்யூ மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

வாடா, போடா என்று பேசுவதை தவிர்க்க கட்டுப்படுத்தினாலும் என்னால் முடியவில்லை.

தொழிலாளர்களுக்கு வழங்கப்படவுள்ள நிலுவைப் பணத்தை த.மு.கூட்டணி நிறுத்திவிட்டது என்று இப்போது சொல்கின்றார்களாம். இப்படியானவர்களுக்கு எப்படி பதில் சொல்வது.

க்டந்த காலத்தில் இடைக்கால கொடுப்பனவு என 3000 ரூபாவை பெற்று கொடுத்தோம். அப்போதும் இதனால் நிலுவைக்கு தடையேற்பட்டதாக தெரிவித்தனர்.

இம்முறை ஆயிரம் ரூபாய் பெற்றுத் தருவதாக சொல்லி அதற்கும் குறைவான சம்பளத்திற்கு கைச்சாத்திட்ட இரண்டு களவாணிகள் மக்களை ஏமாற்றியுள்ளனர்.

அத்துடன் பிரதமர் காரியாலயத்தில் கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்திட்டதால் ஐ.தே.க. ஏமாற்றிவிட்டது என மக்கள் குறை கூறுவதை ஏற்க முடியாத நிலையில் அரசுக்கு ஆதரவான த.மு.கூட்டணியின் ஆறு பேரும் அரசு தலையிட்டு 140 ரூபாய் சம்பளவுயர்வை பெற்றுத்தர வேண்டுமென கோரிக்கை விடுத்தோம். இல்லையேல் அரசை விட்டு விலகுவதாக அழுத்தம் கொடுத்தோம்.

இதன் பயனாக நாள் ஒன்றுக்கு 50 ரூபாய் வரவு-செலவு ஊடாக வழங்க அரசாங்கம் முன்வந்துள்ளது.

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள வரலாற்றில் முதன் முறையாக வரவு-செலவுத் திட்டத்தில் சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டுள்ளது. அரசியல் பலத்தை மக்கள் வழங்கியதால் இவ்விடயத்தில் த.மு.கூட்டணி சாதனை படைத்துள்ளது.

அத்துடன் கடந்த மூன்று வருடங்களாக அரசியல் பலத்தினால் பல சாதனைகளையும் படைத்துள்ளோம்.

அத்துடன் சம்பள உயர்வுக்கென அரசு 1300 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது. 18 வயதில் அரசியலுக்கு வந்த நான் செய்துள்ள வேலைத்திட்டத்தில் 50 வருடம் அரசியல் செய்தவர்கள் செய்த ஒன்றை கூறட்டும் பார்க்கலாம் என்றார்.

வைத்தியர்களை தாக்குவது, பொலிஸ் அதிகாரிகளின் குதிரையில் அமர்வது தான் இவர்கள் செய்ததாகவும் எனத் தெரிவித்த அவர் எதிர்வரும் 24 ஆம் திகதி பொகவந்தலாவையில் இந்திய வீடமைப்பு திறப்பு விழா நடைபெறவுள்ளது.

சம்பளத்தை வரவு-செலவுத் திட்டம் ஊடாக உயர்த்திய பிரதமர் இதில் கலந்து கொள்ளவுள்ளார். அத்துடன் நமக்கு திருப்பி செலுத்தாத கடன் மூலம் வீடமைப்பை உருவாக்கி வரும் இந்திய அரசு சார்பில் அதன் உயர்ஸ்தானிகரும் வருகின்றார்.

இவர்களுக்கு நன்றி செலுத்தும் வகையில் இந்த நிகழ்வுக்கு அனைவரும் அணிதிரண்டு வரவேண்டும் என வேண்டுகோள் விடுப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். அத்துடன் எதிர்காலத்தில் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு விடயத்தில் ஏமாறாமல் இருக்க அவர்களின் வருமானத்தை உறுதி செய்துகொள்ள சிறு தோட்ட உரிமையாளர்களை போலி பெருந்தோட்டங்களைப் பிரித்து கொடுக்க அரசியல் ரீதியாக அழுத்தம் கொடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

அதேவேளையில் அரசியல் ரீதியாக பலம் தந்த மக்கள் தொழிற்சங்க ரீதியாக பலத்தை வழங்கினால் கம்பனிகளுடன் பேரம் பேசி சம்பள உயர்வைப் பெற்றுத் தருவோம் எனவும் நம்பிக்கை வெளியிட்டார். (இ-7)

## இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# இரக்கத்திலும் ஓர் இடைஞ்சல்

இரக்கம் காட்டு ஆனால் ஏமாந்து போகாதே!

மௌனகுரு சுவாமிகள் சொன்னது இது. இந்தக் காலத்திற்கு மிகவும் அவசியமான ஒரு பொன்மொழி.ஏமாற்றுகின்றவர்கள் நிறையப்பேர் இருக்கின்றார் கள்! அப்படி இருக்கின்றபோது ஒரு நல்ல காரியம் செய்தால் கூட மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டியிருக்கின்றது!

ஒரு வசதியான ஆள் 10 ஆயிரம் ரூபாவை எடுத்துக்கொண்டு போய்க்கொண்டு இருந்தார். பணம் தொலைந்து போய்விடும் என்பதற்காக அதை பத்திரமாக ஒரு பையில் வைத்துமூடி, அதை எடுத்துக் கொண்டு புறப்பட்டார். ஆனால் பாருங்கள்... அந்தப் பணத்துடன் சேர்த்து பையையும் தொலைத்துவிட்டார். மிகவும் சுத்தம்! இரண்டும் போய்விட்டது!

அதற்குப் பிறகு போன–வந்த இடத்தையெல்லாம் தேடிப் பார்த்தார். ஒன்றும் கிடைத்தபாடில்லை.

சரி... மேற்கொண்டு என்ன செய்யலாம் என்று யோசித்தார்...

நேராக ஒரு பத்திரிகை அலுவலகத்திற்குப் போனார். ஒரு விளம்பரம் கொடுத்தார். இதுமாதிரி...ஒரு கைப்பை பணத்தோடு காணாமல் போய்விட்டது. அது யார் கண்களிலாவது தென்பட்டால் தயவு செய்து கொண்டுவந்து கொடுத்து விடுங் கள். அப்படி அதை கண்டு எடுத்தவர்கள் கொண்டு வந்து கொடுத்தால் ஆயிரம் ரூபாய் பரிசு கொடுக்கப்படும்! அப்படி என்று பத்திரிகையிலே விளம்பரம் கொடுத்து விட்டார்.

ஒரு சாதாரண தொழிலாளி கையிலே அந்தப் பணப்பை கிடைத்துவிட்டது. அந்த ஆள் பத்திரிகையிலே விளம்பரத்தையும் பார்த்தார்.

அவர் மிகவும் நேர்மையானவர். இன்னொருவர் பணம் எமக்கு என்னத்திற்கு என்று நினைப்பவர்.

அந்தப் பத்திரிகை விளம்பரத்திலே இருந்த விலாசத்தைப் பார்த்தார். பணப்பையை எடுத்துக் கொண்டு நேராக அங்கே போனார், கொடுத்தார். எண்ணிப் பார்த்துக் கொள்ளுங்கள் என்றார். எவ்வளவு பொறுப்போடு இந்த ஆள் பணப்பையை கொண்டு போய் கொடுத்திருக்கின்றார்.

ஆனால் அந்த ஆளுக்கு பணப்பை கிடைத்துவிட்டது என்றதும் புத்தி மாறிப் போச்சு!

"என்னத்திற்கு இந்த ஆளுக்கு அநாவசியமாக 1000 ரூபாய் கொடுக்க வேண்டும் என்று யோசித்தார்.

பத்திரிகையில் கொடுக்கின்றதா? விளம்பரப்படுத்திவிட்டு இப்பொழுது நேரிலே இல்லை என்று எப்படி சொல்வது?

அதனாலே எப்படி ஏமாற்றலாம் என்று யோசித்தார்.

ஒரு ஐடியா செய்தார். உடனே பணத்தை கண்டுபிடித்து கொண்டுவந்து கொடுத்த அந்த ஆளை கோபமாக பார்த்தார்.

ஏய்... இந்த பையிலே 10 ஆயிரம் ரூபாய் பணமும் ஒரு இரத்தினக் கல்லும் வைத்திருந்தேன். அந்தக் கல்லை காணவில்லை. நீதான் திருடியிருக்கின்றாய் என்றார்.

இது ஏதுடா வம்பாய் போய்விட்டது என்று நினைக்க ஆரம்பித்து விட்டார் அவர். பணத்தைத் தவிர வேறு எதுவும் அந்தப் பையிலே இல்லை என்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தார்.

அவர் கேட்கிற மாதிரி இல்லை. எப்படிக் கேட்பார்? 1000 ரூபாய் பரிசை இல்லை என்று ஆக்குவதற்காக அல்லவா இந்த நாடகம் ஆடுகின்றார்! நாடகம் இதோடு முடியவில்லை! பொலிஸ் ஸ்டேசன் வரைக்கும் போய்விட்டது!

அந்த ஆள் அங்கே போய் மாட்டிவிட்டார். அதற்குப்பிறகு இந்த வழக்கு நீதிமன்றத்துக்குப் போய் விட்டது! நீதிபதி வழக்கை விசாரித்தார்.

இந்த ஆள் பொய் சொல்கின்றார் என்பதை நன்றாகப் புரிந்து கொண்டார். ஆனால் அந்த ஆள் என்ன சொன்னார் தெரியுமா?

ஐயா... நான் மிகவும் கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்தவன், நான் என் வாழ்நாளிலே பொய்யே சொன்னதில்லை! சத்தியமாக இந்தப் பையிலே இரத்தினக் கல் வைத்திருந்தேன் என்று ஒரேயடியாகச் சாதித்தார். இதுக்கு தகுந்த மாதிரி சில பொய்ச் சாட்சிகளையும் தயார் செய்துவிட்டார்.

இரக்கப்பட்டு பணத்தை எடுத்துக் கொண்டுவந்து கொடுத்தவருடைய நிலைமை மிகவும் பரிதாபமாக இருந்தது.

நீதிபதி மிகவும் பொறுமையாக எல்லாவற்றையும் கேட்டுவிட்டு அந்த ஏமாற்றுப் பேர்வழியைப் பார்த்து சொன்னார்,

ஐயா! பெரியவரே! உங்களை பார்த்தவுடனேயே நீங்கள் பொய்யே சொல்ல மாட்டீர்கள் என்பது எனக்குப் புரிந்து போய்விட்டது! அது மட்டுமல்ல இவ்வளவு சாட்சி வேறு இருக்கின்றது.

அதனால் காணாமல் போன உங்களது பை இந்தப் பையா இருக்காது. இதுவா இருந்தால் நீங்க சொல்வது மாதிரி இரத்தினக் கல்லு இதிலே இருந்திருக்குமே! அதனாலே இது உங்கள் பையாக இருக்காது. பை இன்னும் கிடைக்கவில்லை என்று மறுபடியும் பத்திரிகையிலே விளம்பரம் கொடுங்கள்! என்றார். அவ்வளவுதான். அந்த ஆள் பதறிப் போய் உண்மையை ஒத்துக்கொண்டார்.

பரிசுத் தொகையையும் வாங்கி இவருக்குக் கொடுத்துவிட்டு பொய் சொன்னதற்காக அந்த ஆளுக்கு அபராதமும் போட்டு விட்டாராம் நீதிபதி. டால்ஸ்டாய் எழுதிய இந்தக் கதையை நண்பர் ஒருத்தர் சொன்னார். அடுத்தவர்களுக்கு நல்லது செய்தால் கூட அதிலேயும் எவ்வளவு இடைஞ்சல் இருக்குப் பார்த்தீர்களா?

நான் கூட சில சமயம் உதவி செய்யிறதாக நினைத்துவிட்டு உபத்திரவத்திலே மாட்டிக் கொள்வது உண்டு. அலுவலகத்தில் நோட்டீஸ் போர்டிலே ஒரு இன்லேண்ட் லெட்டர். விலாசத்தைப்பார்த்தேன். எனக்கு வேண்டிய சிநேகிதர் பேர் இருந்தது... சரி எடுத்துக்கொண்டு போய் அவரிடம் கொடுப்போமே என்று நினைத்துவிட்டு அவசரமாக கொண்டு போய்க் கொடுத்தேன். வாங்கிப் பிரித்துப் பார்த்துவிட்டு என்னை கடுமையாக முறைத்துப் பார்த்தார். கடித்துக் குதறாத குறை! இதுக்கு என்னய்யா இப்ப அவசரம். இதை போய் பெரிசா எடுத்துக் கொடுக்க வந்துவிட்டாய்! அப்படி என்று பாய்ந்து விழுந்தார். என்னங்க விடயம் என்று விசாரித்தேன்.

தாய் வீட்டுக்குப் போயிருந்த அவருடைய மனைவி திரும்பி வருவதாக தபால் போட்டிருக்காங்களாம்!

# பயங்கரவாதிகள், இராணுவம் மோதல்; பத்துப்பேர் பரிதாபமாக உயிரிழப்பு



(லாகோஸ்)

நைஜீரியாவில் பயங்கரவாத அமைப்பினருக்கும் இராணுவத்திற்குமிடையே ஏற்பட்ட சண்டையில் 10 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் சில ஆண்டுகளாக நைஜீரிய அரசினை எதிர்த்து போகோஹறாம் பயங்கரவாதிகள் வன்முறை செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த அமைப்பின் தற்கொலை படையினர் நடத்திய தாக்குதல்களில் 20 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர். 2 மில்லியன் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

இந்நிலையில் நைஜீரியாவின் பனி யாட் வடகிழக்குப் பகுதியில் உள்ள இராணுவ தளத்தின் மீது போகோஹறாம் பயங்கரவாத அமைப்பினர் நேற்று முன்தினம் அதிரடியாக தாக்குதல் நடத்தினர். 4 துப்பாக்கி டிரக்குகள், ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்களுடன் வந்து தாக்கினர். இந்தத் தாக்குதலுக்கு இராணுவத்தினர் பதில் தாக்குதல் நடத்தினர்.

இருதரப்பிற்கும் இடையே ஏற்பட்ட மோதலில் 5 பயங்கரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். இராணுவம் தரப்பில் 4 வீரர்கள் உயிரிழந்துள்ளனர்.


மேலும் 5 பேர் படுகாயம் அடைந்துள்ளனர். படுகாயமடைந்த வீரர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதனையடுத்து பயங்கரவாதிகளிடம் இருந்த ஆயுதங்கள், மோட்டார் சைக்கிள் ஆகியவை இராணுவத்தினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

முன்னதாக, கடந்த 15 ஆம் திகதி மைதுகுரியில் உள்ள மசூதியின் அருகில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில், இந்த அமைப்பைச் சேர்ந்த 3 தற்கொலைப் படையினர் உட்பட 11 பேர் பலியாகினர்.

போகோஹறாம் அமைப்பு ஆபிரிக்காவின் வடக்கு மற்றும் மத்திய பகுதியில் ஆதிக்கம் செலுத்தி வருகிறது. இந்த அமைப்பு 2009 ஆம் ஆண்டு நைஜீரியாவின் அரசினை எதிர்த்து உருவானது என்பது குறிப்பிடத்தக்கது. (4-7)

# கஞ்சாவுடன் இருவர் கைது



(கொழும்பு)

தெற்கு கடற்படை கட்டளை தலைமையகத்திற்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலினடிப்படையில் கடற்படையினர் மற்றும் திக்வெல்ல பொலிஸார் இணைந்து முன்னெடுத்த சுற்றிவளைப்பில் 120 கிராம் கஞ்சாவுடன் சந்தேகநபர்கள் இருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ள சந்தேநபர்கள் இருவரும் கோட்டிகொட மற்றும் திக்வெல்ல ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர்கள் இருவரும் மேலதிக விசாரணைகளுக்காக திக்வெல்ல பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

நாட்டில் மேற்கொள்ளப்படும் இவ்வாறான போதைப் பொருளுடன் தொடர்புடைய நடவடிக்கைகள் தொடர்பாக கடற்படை மற்றும் பொலிஸார் இணைந்து பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாக கடற்படை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (7)

# பூங்காவில் சிகரெட் புகைத்த இருவர் அதிகாரிகளால் கைது

(ஹோர்டன்)

ஹோர்டன் சமவெளி தேசிய பூங்காவினுள் சிகரெட் புகைத்த இரண்டு நபர்களுக்கு நுவரெலியா நீதவான் டீ.பி.ஆர்.ஜயசேகர 70 ஆயிரம் ரூப்பாய் அபராதம் விதித்துள்ளார்.

குறித்த இருவரும் பூங்காவினுள் சிகரெட் புகைத்துக்கொண்டிருந்த போது பூங்கா அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது இவ்வாறு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்தேகநபர்கள் இருவரும் மாத்தளை மற்றும் உகுவெல பிரதேசங்களை சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. (7)

# உலக நாடுகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தி முன்னோக்கிச் செல்வதே எமது நோக்கம்

## மங்கள தெரிவிப்பு

அரசாங்கத்தின் கொள்கைக்கு இணங்க உலக நாடுகளுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு முன்னோக்கிச் செல்வதே எமது அரசாங்கத்தின் நோக்கமாகும் என நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

தென்னிலங்கைக்கான கொன்சியூலர் அலுவலகம் கடந்த வெள்ளிக்கிழமை மாத்தறையில் திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேற்படி அலுவலகத்தை வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன திறந்து வைத்தார்.

இந்த கொன்சியூலர் அலுவலகத்திற்கு நவீன டிஜிற்றல் சேவை அளிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் இளைஞர்-யுவதிகள் எதிர்காலத்தில் சேவையை பெற்றுக் கொள்ள கொழும்புக்கு செல்ல வேண்டியதில்லை எனவும் அமைச்சர் இதன்போது தெரிவித்தார். இவ்வைபவத்தில் தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர் மங்கள சமரவீர; காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் கொழும்பிலுள்ள கொன்சியூலர் அலுவலகத்திற்கு சென்று பல சிரமங்களுக்கு மத்தியில் சேவைகளைப் பெற்று வந்தனர். இன்றுடன் அச்சிரமம் முடிவடைகின்றது என மேலும் தெரிவித்தார். (7)

# நிதியியல் ரீதியில் தோல்வி ஒத்துழைப்பு வழங்குமாறு மத்திய வங்கி கோரிக்கை

(கொழும்பு)

நிதியியல் ரீதியாகத் தோல்விகண்டுள்ள த பினான்ஸ் கம்பனி பிஎல்சீ நிறுவனத்தை மீளக்கட்டியெழுப்பும் நோக்கில் புதிய வைப்புக்களை ஏற்பதில்லையென்றும் கடன்கள் மற்றும் முற்பணங்கள் பகிர்ந்தளிக்கப்படுவதைக் கட்டுப்படுத்தவும் மத்திய வங்கி தீர்மானித்துள்ளது.

கடந்த 8 ஆம் திகதி கூடிய மத்திய வங்கியின் நாணயச் சபை இது தொடர்பான தீர்மானத்தை எடுத்துள்ளது. த பினான்ஸ் கம்பனி பிஎல்சியின் பலவீனமான நிதியியல் செயற்பாட்டைக் கருத்திற்கொண்டு, கம்பனியின் வைப்பாளர்களால் ஏனைய ஆர்வலர்களின் நலன்களைப் பாதுகாக்கும் நோக்குடன் இவ்வாறான முடிவு எடுக்கப்பட்டிருப்பதாக மத்திய வங்கி அறிவித்துள்ளது.

மீள்கட்டமைப்புச் செயன்முறையை வசதிப்படுத்தும் பொருட்டு வங்கித்தொழில் மற்றும் நிதியியல் நிபுணர்கள் குழுமொன்று இலங்கை மத்திய வங்கியால் நியமிக்கப்பட்டுள்ளது. கம்பனி, வாய்ப்புமிக்க முதலீட்டாளர்களின் முன்மொழிவுகள் மற்றும் பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து முன்னெடுத்து, அதனை நிறைவு செய்ய முடியும். ஏற்புடைய சட்டங்களுக்கும் ஒழுங்கு விதிகளுக்கும் அமைவாக இலங்கை மத்திய வங்கி த பினான்ஸ் கம்பனி பிஎல்சியை பொருத்தமான முதலீட்டாளர்களுடன் முன்னெடுப்பதற்கு வசதியளிக்கும் என்றும்-மத்திய வங்கி அறிவித்துள்ளது. அதேவேளை, கம்பனியின் அனைத்துக் கடன் பெறுநர்களும் தமது நிலுவைகளைச் செலுத்த வேண்டும் என ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

வைப்பாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக இலங்கை மத்திய வங்கியானது மேலதிக நடவடிக்கைகளை எடுத்துவருவதுடன் கம்பனியின் தொழிற்பாடுகளை மிகவும் அவதானமாக கண்காணிப்பதாகவும் அறிவித்துள்ளது.

மீள்கட்டமைப்புச் செயன்முறையுடன், காசுப் பாய்ச்சலால் மேம்படுத்தவும் வாய்ப்பான முதலீட்டாளர்களூடாக கம்பனியின் மீளெழுச்சியை வசதிப்படுத்துவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

வைப்புக்காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்டத்தினால் வைப்பாளர் ஒருவருக்கு 6 இலட்சம் ரூபாவைக் கொண்ட உயர்ந்தபட்ச தொகையால் அனைத்து வைப்பாளர்களின் நலன்கள் பாதுகாக்கப்படுமென்ற விடயத்தில் கவனம் செலுத்தப்படுகிறது. இது, 93 சதவீதமான வைப்பாளர்களின் தொகையை முழுமையாக உள்ளடக்குவதால் இது தொடர்பில் வைப்பாளர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என மத்திய வங்கி கோரிக்கை விடுத்துள்ளது. (இ-7)

# தமிழ் மக்களின் மனங்களை வெல்ல முடியவில்லை-டளஸ்

(கொழும்பு)

யுத்தத்தை வெற்றிகொள்ள முடிந்த எங்களால் தமிழ் மக்களுடைய மனதை வெல்ல முடியாது போனமை கவலைக்குரிய விடயம். ஆனால் இம்முறை தேர்தலில் அந்த தவறை புரிந்து கொண்டு அதனை நிவர்த்திக்க முயற்சி செய்வோம் என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் டளஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

வார இறுதி தமிழ் பத்திரிகை ஒன்றுக்கு அவர் வழங்கிய விசேட செவ்வியிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

இங்கு அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்.

தேசிய அரசாங்கத்திற்கான யோசனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. நிச்சயமாக இந்த யோசனையை தோல்வியடையச் செய்வோம்.

இது பாரிய காட்டிக்கொடுப்பு. ஆகவே இதனை தோல்வியடையச் செய்ய வேண்டும். இதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிராக வாக்களிக்க வேண்டும் என்பதை நாங்கள் கோரிக்கையாக முன்வைக்கின்றோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்ப்பு என்று கூறினாலும் வாக்கெடுப்பின் போது நாடாளுமன்றத்திற்கு சமுகமளிக்க வேண்டாமென அழுத்தம் கொடுப்பதாக தெரிய வருகின்றது என தெரிவித்துள்ளார். (7)

# டிப்பர் - மோ.சைக்கிள் விபத்து ஆசிரிய ஆலோசகர் உயிரிழப்பு

(மகியங்கனை)

மணல் ஏற்றிச் சென்ற டிப்பர் வாகனமொன்றும் எதிரில் வந்த மோட்டார் சைக்கிளொன்றும் நேருக்கு நேராக மோதி விபத்துக்குள்ளாகியதில் மோட்டார் சைக்கிளில் சென்ற ஆசிரியர் ஆலோசகர் ஸ்தலத்திலேயே பலியானதுடன், அவரது மனைவி கடுங்காயங்களுடன் மகியங்கனை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவரின் நிலையும் கவலைக்கிடமாக இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இவ் விபத்து மகியங்கனை - பதியத்தலாவை வீதியில் 98 வது மைல் கல்லருகே நேற்று இடம்பெற்றுள்ளது. மகியங்கனை கல்வி வலய ஆசிரியர் ஆலோசகரான 54 வயது நிரம்பியவரே விபத்தில் ஸ்தலத்தில் பலியானவராவார்.

இவ்விபத்து இடம்பெற்ற இடத்திற்கு ஸ்தல விசாரணைகளை மேற்கொள்ள சென்ற மகியங்கனை நீதவான் நீதிமன்ற நீதிபதி ஸ்தல விசாரணைகளை மேற்கொண்டதுடன், விபத்துக்குள்ளான டிப்பர் வாகன சாரதியை ஐந்து இலட்ச ரூபா சரீரப் பிணையிலும் 5 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பிணையிலும் செல்ல அனுமதித்தார். விபத்துக் குறித்து மகி யங்கனைப் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

# துப்பாக்கிகளுடன் இருவர் கைது

அகலவத்தை - பிம்புர பிரதேசத்தின் இரு பகுதிகளில் 4 துப்பாக்கிகளை தம்வசம் வைத்திருந்த, 36 மற்றும் 22 வயதுகளை உடைய இருவர் நேற்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது அவர்களிடமிருந்து வெளிநாடுகளில் தயாரிக்கப்பட்ட வேறுசில வெடிப்பொருட்களும் மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (7)

# ஸ்ரீல.சு.கட்சி -பொதுஜன பெரமுனவின் கலந்துரையாடல் பிற்போடப்பட்டுள்ளது

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆகிய கட்சிகளுக்கிடையில் நேற்று இடம்பெறவிருந்த கலந்துரையாடல் பிற்போடப்பட்டுள்ளது.

இரு கட்சிகளும் இணைந்து உருவாக்கப்படவுள்ள புதிய கூட்டமைப்புத் தொடர்பிலேயே இந்தக் கலந்துரையாடல் இடம்பெறவிருந்தது.

எனினும் இந்தக் கலந்துரையாடல் இம் மாதம் 22 ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

குறித்த கூட்டமைப்பை உருவாக்குவது தொடர்பான அடிப்படைக் காரணங்கள் குறித்து கலந்துரையாட நியமிக்கப்பட்ட குழு விடுத்த கோரிக்கைக்கமைய கூட்டமைப்பை உருவாக்குவது தொடர்பான பிரதான கலந்துரையாடல் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (7)

# நாடாளுமன்ற ஏரியில் பெண்ணின் சடலம் மீட்பு

நாடாளுமன்றத்தைச் சுற்றியுள்ள தியவன்னா ஓயாவில் பெண் ஒருவரின் உடலம் மிதந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சுமார் ஐம்பது வயது மதிக்கத்தக்க பெண்ணொருவரின் சடலமே நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளது.


நாடாளுமன்ற வளாகத்தின் சுற்றுவட்டாரத்தில் இந்தச்சடலம் மீட்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான விசாரணைகளை வெலிக்கடை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். எவ்வாறாயினும் மீட்கப்பட்ட பெண்ணின் சடலம் யாருடையது என்பது தொடர்பில் அடையாளம் காணப்படவில்லை என்று கூறப்பட்டுள்ளது. (7)

# போர்த்துக்கீசர் - ஒல்லாந்தர் காலத்தில் யாழ்ப்பாணப் பட்டினம் - ஒரு பார்வை

07

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.





நெடுந்தீவுக் கோட்டை (மீகாமன் கோட்டை) இன் எச்சங்கள்


மேலும் போர்த்துக்கீசருக்குப் பின்னர் நெடுந்தீவைக் கைப்பற்றி கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த தளமாக மாற்றிய ஒல்லாந்தர் தமது நிர்வாக வசதிக்காக மாற்றிமையத் திருக்கலாம் என்றும் கருதலாம். உதாரணமாக, யாழ்ப்பாணக் கோட்டை, ஊர்காவற்றுறைக் கோட்டை, முதலியவற்றைக் கட்டியவர்கள் போர்த்துக்கீசரே! எனினும், பின்னர் அவற்றை ஒல்லாந்துக் கலைமரபிற்கு ஏற்றதாக மாற்றியமைத்தமையால் தான் ஒல்லாந்தர்களது கோட்டையென அழைக்கப்பட்டது.

அவ்வாறே இக்கோட்டையும் பிற்காலத்தில் ஒல்லாந்தர்கள் தமது அமைப்புக்கேற்ப மாற்றியிருக்கலாமென வரலாற்றாய்வாளர்கள் கருதுகின்றனர். ஒரு சில தகவல்களின்படி நெடுந்தீவில் இரண்டு கோட்டைகள் இருந்ததற்கான எச்சங்கள் காணப்படுவதாக கூறப்படுகிறது. அதில் ஒன்று ஒல்லாந்தராலும் மற்றையது போர்த்துக்கீசராலும் கட்டப்பட்டதாகக் கூறப்படுகிறது.

நெடுந்தீவு போர்த்துக்கீசரால் **"Island of the Cows"** எனவும் ஒல்லாந்தரால் **Delft Island** எனவும் பெயரிடப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கதாகும். நெடுந்தீவு தலைத்தீவு, பசுத்தீவு, பால்தீவு, அபிசேகத் தீவு, தயிர் தீவு முதலான பெயர்களால் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல் அழைக்கப்பட்டு வந்துள்ளது. யாழ்.குடாநாட்டில் இருந்து நெடுந்தொலைவில் இருப்பதனால் இத்தீவு நெடுந்தீவு என்று பெயர் பெற்றது என்பர்.

### காலனித்துவ காலத்தில் அஞ்சல் தொடர்பாடல்களுக்குப் பயன்படுத்தப்பட்ட புறாக்களின் கோபுரம்

புறாக்களின் கோபுரத்தில் ஒரு குறிப்பிட்ட துறையையும் புறாவையும் ஒரு குறிப்பிட்ட துளைக்கு நியமிக்கப்பட்டதாக கூறப்படுகிறது. ஒரு அலுவலர் ஒதுக்கப்பட்ட துளைக்குள் தனது புறாவைக் கண்டதும் அவ்வருக்கு செய்தி வந்துள்ளதாக அவர் அறிவார். அதன்படி அலுவலர் தனது செய்தியைப் பெற்றுக் கொள்வார்.



புறாக்களின் கோபுரம்

### ஊர்காவற்றுறைக் கோட்டை


பாக்குநீரிணைப் பகுதியில் இருந்து யாழ்ப்பாணத்தை அண்டிய நீரேரிக்குள் நுழையும் ஒடுங்கிய கடற் பகுதிக்கு அருகில் இது அமைந்திருந்தது. பாதுகாப்பு முக்கியத்துவம் காரணமாக, கடற்கோட்டைக்கு (அம்மன்னீல் கோட்டைக்கு) நேர் எதிராக ஊர்காவற்றுறைப் பக்கம் உருண்டைக்கோட்டை (அல்லது **FORT EYRIE**) என்றழைக்கப்படும் இக் கோட்டையை போர்த்துக்கீசர் 1629இல் கட்டியதாகவும் பின்னர் 1651லிருந்து கைவிடப்பட்ட நிலையில் இருந்ததாகவும் கூறப்படுகிறது. பின்னர் யாழ்ப்பாணம் ஒல்லாந்தரால் கைப்பற்றப்பட்ட போது இக் கோட்டை ஒல்லாந்தர் வசமானது. அத் தருணம் இக் கோட்டை பழுதடைந்து திருத்தக் கூடிய நிலையில் இல்லாமல் இருந்துள்ளது. 2004 ஆம் ஆண்டின் நிலவரப்படி இக்கோட்டையின் எச்சங்கள் மட்டுமே உள்ளது.



ஊர்காவற்றுறைக் கோட்டையின் எச்சங்கள்

### காங்கேசன்துறைக் கோட்டை

ஒல்லாந்தர் காலத்தில் கட்டப்பட்ட காங்கேசன்துறைக் கோட்டை தற்போது முற்றாகவே அழிந்துவிட்டது. இக் கோட்டை கட்டத் தொடங்கி இடையில் கைவிடப்பட்டது என்ற கருத்தும் உண்டு. இதனால் இதன் அமைப்புத் தொடர்பான வரைபடங்களோ வேறு தகவல்களோ இல்லை.



பூநகரிக் கோட்டையின் வடிவமைப்பு

### பூநகரிக் கோட்டை

யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றிய போர்த்துக்கீசர் தமது ஆட்சியின் கடைசிக் காலத்தை அண்டி இக் கோட்டையை அவர்கள் நிறுவினர். மன்னாரில் இருந்து யாழ்ப்பாணம் செல்லும் பாதையிலுள்ள நீரேரிக்குத் தெற்கே முடிவடையும் இடத்தில் இக்கோட்டை அமைந்திருந்தது. சட்டவிரோதமாக வன்னிக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையே நடைபெற்று வந்த கடத்தலைத் தடுப்பதற்கும், குற்றவாளிகள் வன்னிக்குத் தப்பிச் செல்வதைக் கட்டுப்படுத்துவதுமே இக் கோட்டையின் முக்கியமான பணியாக இருந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

(தொடரும்...)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300– கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்



174

இருந்தபோதிலும் இந்த மிஷன்கள் யாவற்றினதும் கொள்கைகள், நடவடிக்கைகள் என்பவற்றை ஆராய்கையில் கிறிஸ்துவையிட்டுச் சொல்வதற்கு ஒரு மார்க்கமாகவே கல்வியைப் பயன்படுத்த எண்ணினர் என்பது தெரிய வருகின்றது.

திருச்சபை மிஷனரிச் சங்கத்தைச் சேர்ந்த வண.நைற் இலண்டனில் உள்ள திருச்சபை மிஷனரிச் சங்கத்தின் செயலாளருக்கு எழுதிய கடிதத்தில் பின்வருமாறு தெரிவிக்கின்றார்.

சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்கான வாய்ப்புக்கள் மெல்ல உருவாகின்றன. உண்மையில் நாம் நிறுவும் பாடசாலைகள் எல்லாவற்றிலும் இதையே எமது பிரதான குறிக்கோளாக நாம் கொள்ள விரும்புகின்றோம். பிள்ளைகளின் ஊடாக அடிக்கடி நாம் அவர்களது பெற்றோரைச் சந்திக்கின்றோம். அதன் வழி சிறிது சிறிதாக அவர்களுக்கு எமது நற்செய்தியைச் சொல்லும் வாய்ப்புக்கள் கிட்டுகின்றன.

அத்துடன் மக்கள் மத்தியில் எம்மைப் பற்றிய தப்பான அபிப்பிராயங்களைக் களைவதற்கும் இப் பாடசாலைகள் மெதுவாக ஆனால் நிச்சயமாக உதவுகின்றன.

உள்ளூர் மக்கள் அதுவும் குறிப்பாக மிஷனரிப் பாடசாலைகளில் கற்றவர்கள் கல்வியின் மூலமாக மத மாற்றத்தை ஏற்படுத்துவதே மிஷனரிமாரின் உண்மையான குறிக்கோள் என்பதை உணர அதிக காலம் எடுக்கவில்லை.

1843 இல் அரசாங்கம் பல ஆரம்பப் பாடசாலைகளை மிஷனரிமாரின் ஆலோசனையின் பேரில் மூடியது. 1833 கோல்புறூக் ஆணைக்குழுவின் சீர்திருத்தத்தின்படி இப் பாடசாலைகளை நடத்துவதற்கான செலவைக் குறைப்பதற்கு என்ற போர்வையிலேயே இது செய்யப்பட்டது.

என்ன நடக்கி ன்றது என்பது சிலருக்குத் தெரியவே செய்தது. அப்படித் தெளிவாக உணர்ந்தவர்களில் தானும் ஒருவன் என நாவலர் பின்வருமாறு உறுதி செய்கின்றார்.

சிலகாலத்திற்கு முன்னே அரசாங்கத்தினர் இத்தேசத்தில் சில ஆங்கிலப் பாடசாலைகளை ஸ்தாபித்து சில வருடம் நடத்தினார்கள். அவைகளில் கிறிஸ்தவ சமயப் புத்தகம் ஒன்றும் படிப்பிக்கப்படவில்லை.

அங்கே சைவப் பிள்ளைகள் எல்லோரும் விபூதி தரித்துக் கொண்டே படித்து வந்தனர். அதைக் கண்ட பாதிரிமார் அரசாங்கப் பாடசாலைகள் நிலை பெற்றால் தங்கள் கருத்து வாய்க்காது என்று எண்ணி சில துரைமாரை தங்கள் வசப்படுத்தி அரசாங்கத்தினருக்கு நியாயம் காட்டி எழுதுவித்து அப் பாடசாலைகளை எடுப்பித்துவிட்டு அவைகளுக்கு அரசாங்கத்தினர் செலவழிக்கும் பணத்தை தங்கள் பாடசாலைகளுக்கு ஆக்குவித்துக் கொண்ட அநீதியாக தங்கள் கருத்தையே நிறைவேற்றிக் கொண்டு வருகின்றார்கள்.

அதன் பின்னர் அரசாங்க ஆரம்பத் தமிழ்ப் பாடசாலைகள் மிஷனரி நிர்வாகத்தின் கீழ் வந்தன. இதன் விளைவாக இப் பாடசாலையில் முன்பு படித்த சைவமாணவர் மிஷனரிப் பாடசாலைகளுக்கு இயல்பாகவே மாற்றப்பட்டனர்.

மிஷனரிமார் செய்தது போன்று நாமும் ஏன் சைவப் பாடசாலைகளை நிறுவி சைவசமயத்தைப் பரப்பக் கூடாது? என்று நாவலர் தன்னையே கேட்டுக் கொண்டார்.

இந்த எண்ணமே சைவ உயர் மட்டத்தினரை சைவப்பாடசாலைகளை நிறுவத் தூண்டியது. இவர்களுடைய ஆரம்ப முயற்சிகள் பெரும்பாலும் வெற்றியளிக்காமையால் நாவலரை சைவத் தமிழ்ப் பாடசாலைகளுக்கான ஒரு திட்டத்தை வகுக்கத் தூண்டின.

முக்கியமான இடங்களில் பாடசாலைகளை நிறுவி தமிழ்க் கல்வியையும் சைவத்தையும் முன்னெடுப்பதற்கு சைவசமயப் பிரசாரத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்த வேண்டும் என்பது அவருடைய குறிக்கோளாக இருந்தது.

நாவலர் யாழ்ப்பாணத்தில் மாத்திரமன்று ஏனைய தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள முக்கிய இடங்களிலும் தனது கவனத்தைச் செலுத்தினார். அவருடைய திட்டம் ஆர்ப்பாட்டம் இன்றி, அவரது இல்லத்திலேயே ஒரு சில ஆர்வமுள்ள மாணவர்களைக் கொண்டு முதற் பாடசாலையாக ஆரம்பித்தது.

நான் எனக்கு ஒழிவுள்ள காலத்தை கைமாறு வேண்டாது உலகத்தாருக்கு பயன்படக் கழிதல் வேண்டுமென்றின்று 1846 தை முதலாக சில பிள்ளைகளுக்கு இராத்திரியிலும் காலையிலும் தமிழ்க் கல்வி கற்பித்து வருகின்றேன்.

சைவத்தைப் பரப்புவதிலும் தமிழ்க் கல்வியை மேம்படுத்துவதிலும் நாவலர் தன்னை அர்ப்பணித்திருந்தார். நாவலர் 1848 ஆவணியில் சைவப்பிரகாச வித்தியாசாலை என்னும் வேத ஆகமப் பாடசாலையை தோற்றுவித்தார். அதே ஆண்டு செப்டெம்பரில் வெஸ்லியன் பாடசாலையை விட்டு வெளியேறிச் சைவத்தமிழ் இலக்கியத்துடன் எழுத்து வாசினை எண் கணிதம், சமஸ்கிருதம் தமிழ் ஒழுக்கநெறி என்னும் பாடங்களை மேற்கத்தேயப் பாணியில் ஒரே வகுப்பறையில் போதிப்பதற்குத் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டார்.

அத்துடன் சந்ததி சந்ததியாக ஓலைச்சுவடிகளைப் பயன்படுத்திக் கற்ற பாரம்பரியத்துக்குப் பதிலாகத் தான் வெஸ்லியன்ஸ் களிடம் கற்ற நவீன கற்பித்தல் முறைகளை நாவலர் அறிமுகப் படுத்தினார்.

(தொடரும்)

> “திருச்சபை மிஷனரிச் சங்கத்தைச் சேர்ந்த வண.நைற் இலண்டனில் உள்ள திருச்சபை மிஷனரிச் சங்கத்தின் செயலாளருக்கு எழுதிய கடிதத்தில், சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்கான வாய்ப்புக்கள் மெல்ல உருவாகின்றன. உண்மையில் நாம் நிறுவும் பாடசாலைகள் எல்லாவற்றிலும் இதையே எமது பிரதான குறிக்கோளாக நாம் கொள்ள விரும்புகின்றோம். பிள்ளைகளின் ஊடாக அடிக்கடி நாம் அவர்களது பெற்றோரைச் சந்திக்கின்றோம். அதன் வழி சிறிது சிறிதாக அவர்களுக்கு எமது நற்செய்தியைச் சொல்லும் வாய்ப்புக்கள் கிட்டுகின்றன”

## தமிழரின் விழிப்புணர்வும் எழுச்சியும்
## சமயம், பண்பாடு, மொழி
## சமூகம், பொருளாதாரம்
## (கி.பி. 1850-கி.பி. 1900)

# பான்டா, சாமுராய் பிணை முறிகள் மூலம் ஒரு பில்லியன் டொலர் திரட்ட நடவடிக்கை

(கொழும்பு)

அமைச்சரவையில் அனுமதி பெறப்பட்டதையடுத்து, சீனாவின் பான்டா, ஜப்பானின் சாமுராய் பிணைமுறிகளின் மூலம், ஒரு பில்லியன் டொலர் நிதியைத் திரட்டும் நடவடிக்கையில் இலங்கை மத்திய வங்கி மற்றும் திறைசேரி அதிகாரிகள் இறங்கியுள்ளனர்.

தற்போதைய பொருளாதார நெருக்கடியைத் தளர்த்தும் நோக்கில், இந்த நிதியைத் திரட்டுவதற்காக ஜப்பான் மற்றும் சீனாவுக்கு, திறைசேரி, மத்திய வங்கி அதிகாரிகள் விரைவில் பயணம் மேற்கொள்ளவுள்ளனர்.

பான்டா, சாமுராய் பிணை முறிகளின் மூலம் தலா 500 மில்லியன் டொலர் நிதியை திரட்டுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக, திறைசேரி சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அத்துடன், டொலர் நெருக்கடியைச் சமாளிக்க யூரோ பிணை முறி மூலம் நிதி திரட்டவும் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# அரச வைத்தியசாலைகளை கணனிமயப்படுத்தத் திட்டம்

(கொழும்பு)

அரச வைத்தியசாலைகள் அனைத்தையும் கணனிமயப்படுத்துவதற்கான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

சுகாதார அமைச்சின் தகவல் தொழில்நுட்பப் பிரிவின் பணிப்பாளர் இந்திக ஜாகொட இதனைத் தெரிவித்துள்ளார்.

அதன்படி இதுவரையில் 100 அரச வைத்தியசாலைகள் கணனிமயமாக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அத்தோடு நாட்டிலுள்ள ஏனைய அரச வைத்தியசாலைகளையும் கணனிமயப்படுத்துவதற்கான வேலைத் திட்டங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# கடற்படையினர்-பொதுமக்கள் மோதல்; சந்தேகநபர் 21 வரை விளக்கமறியலில்

(கிண்ணியா)

திருகோணமலை - கிண்ணியா - கண்டல்காடு பகுதியில் இடம்பெற்ற சட்ட விரோத மணல் அகழ்வின் போது, கடற்படையினருக்கும் மக்களுக்கும் இடையில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தை அடுத்து கைது செய்யப்பட்ட ஒருவர் எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேக நபர் நேற்று திருகோணமலை பதில் நீதவான் சுபாஷினி சித்திரவேலு முன்னிலையில், முற்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் 29 ஆம் திகதி கிண்ணியா, கண்டல்காடு, கீரைத்தோட்டப் பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்டவர்களை கடற்படையினர் கைது செய்ய முற்பட்ட போது கடற்படையினருக்கும், பொதுமக்களுக்குமிடையில் மோதல் ஏற்பட்டது.

இதன்போது கடற்படையினர் மீது தாக்குதல் நடத்தியதாகவும் கைகலப்பு ஏற்படுவதற்கு காரணமாக இருந்தவர்களை காணொலி காட்சிகள் மூலம் கைது செய்ய நடவடிக்கை எடுப்பதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (7)

# ஹற்றன் வனப்பகுதியில் தீ



(ஹற்றன்)

ஹற்றன் வன இலாகாவின் கட்டுப்பாட்டிலுள்ள வட்டவளை, மேல் வட்டவளை பிரதேசத்தில் காணப்படும் பைனஸ் வனப்பகுதியில் 20 ஏக்கர் தீயினால் சேதமடைந்துள்ளதாக ஹற்றன் வன இலாகா அதிகாரி தெரிவித்தார்.

இப்பகுதியில் தீ பரவியுள்ளதை கேள்விபட்ட ஹற்றன் வனத் துறையினர் சம்பவ இடத்திற்குச் சென்று குறித்த பகுதியைச் சுற்றிவளைத்து தீ பரவாமல் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்துள்ளனர்.

இந்நிலையில் ஒரு சில விசமிகளால் குறித்த தீ பரவலை ஏற்படுத்தியிருக்கலாம் எனவும் இதற்காக இப்பகுதி மக்களும் தீயை அணைக்க உதவி செய்ததாக வன இலக்காவின் உயர் அதிகாரி தெரிவித்தார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை 5 மணிக்கு இடம்பெற்றதாகவும் அதனைத் தொடர்ந்து இரவு 8.30 மணியளவில் குறித்த தீயைக் கட்டுக்குள் கொண்டு வந்ததாகவும் குறித்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (7)

# புகையிரதத்துடன் மோதி ஒருவர் உயிரிழப்பு

(அங்குலான)

அங்குலான, மோதரவத்த பகுதியில் புகையிரதத்துடன் மோதி நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பிலிருந்து ஹிக்கடுவை நோக்கி பயணித்த புகையிரதத்துடன் மோதியே குறித்த நபர் உயிரிழந்துள்ளார்.

கல்தமுல்ல பகுதியைச் சேர்ந்த 69 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் அங்குலான பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (7)

# போதைப்பொருளுடன் கைதான 17 பேருக்கும் பொலிஸ் பிணை

(ஹற்றன்)

சிவனொளிபாத மலைக்கு யாத்திரை மேற்கொண்டபோது, போதைப் பொருள்களுடன் கைதான 17 பேரும் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதுடன், இவர்களை எதிர்வரும் 23 ஆம் திகதி பொலிஸ் நிலையம் வருமாறு ஹற்றன் பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.


ஹற்றன் - கொழும்பு பிரதான வீதி, தியகல சோதனைச் சாவடியில் வைத்து, கடந்த 16 ஆம் திகதி குற்றத்தடுப்புப் பொலிஸார் மேற்கொண்ட திடீர் சோதனையின் போது, இந்த 17 பேரும் கைதுசெய்யப்பட்டனர்.

ஹற்றன் பொலிஸ் வலயத்துக்குப் பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகர் ரவிந்திர அம்பேபிட்டியவின் பணிப்புரைக்கமைவாக, ஹற்றன் குற்றத்தடுப்புப் பொலிஸார், திடீர் சோதனையை மேற்கொண்டுள்ளதுடன், இந்த 17 பேரையும் கைது செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1648

### விஷ்ணு

உலகத்திலேயே சிறந்த ஜோடி செருப்புதான். ஒன்றை பிரிந்தால் மற்றொன்று வாழவே வாழாது



### சாகீர்

எத்தனை முறை கோபம் கொண்டாலும் வெறுக்கும்படி பேசினாலும் விட்டு விலகாமல் எதையும் எதிர்பார்க்காமல் வருடங்கள் கடந்தும் உடனிருக்கும் உறவுகள் கிடைப்பது வரம்



### உமா

எதிரிகளின் அவமானங்களைக் காட்டிலும் நெருங்கியவர்களின் அன்புக்காகவே சுயமரியாதையை அதிகம் இழக்கிறோம்



### இனியா

இமைகள் திறந்து நேசிப்பதை விட இதயம் திறந்து நேசித்துப் பாருங்கள்... உயிர் பிரிந்தாலும் உறவுகள் நீடிக்கும்



### பகீரதன்

அதிக பட்ச அன்பை வெளிப்படுத்தினால் இறுதியில் தொல்லை என்ற பெயர் மட்டுமே மிச்சம்



### மேகா

உண்மையாக நேசிக்கும் ஒவ்வொரு இதயத்திற்குப் பின்னாலும் ஒரு பெரிய வலி இருக்கும்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

## தீவிரவாத செயற்பாடுகளுக்கு நிதி

# ஐரோப்பிய ஒன்றியம் விரைவில் இலங்கையை நீக்கும் என நம்பிக்கை



(கொழும்பு)

பணச்சலவை மற்றும் தீவிரவாதச் செயற்பாடுகளுக்கான நிதி வழங்கல் அச்சுறுத்தல் அதிகம் உள்ள நாடுகளின் பட்டியலில் இருந்து ஐரோப்பிய ஒன்றியம் விரைவில் இலங்கையை நீக்கும் என்று அரசாங்கம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது. அமைச்சர் ஹர்ச டி சில்வா இதனைத் தெரிவித்துள்ளார்.

குறித்த பட்டியலில் கடந்த ஆண்டு ஐரோப்பிய ஒன்றியம் இலங்கையை இணைத்து, இந்த ஆண்டும் பேணி வருகிறது.

இதுதொடர்பான தகவல் வெளியாகியுள்ள நிலையில், அடுத்த மீளாய்வின் போது ஐரோப்பிய ஒன்றியம் இந்தப் பட்டியலில் இருந்து இலங்கையை நீக்க நடவடிக்கை எடுக்கும் என்று நம்புவதாக அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# மொட்டு ஆட்சியில் தமிழர்களுக்கு தீர்வு; போலியான வெற்றுக்கதை-யோகேஸ்வரன்

(மட்டக்களப்பு)

தனது மொட்டுக்கட்சி ஆட்சியமைத்தால் தமிழர்களுக்கு தீர்வு என மகிந்த கூறுவது போலியான வெற்றுக்கதை என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தனது ஆட்சிக்காலம் தொட்டு இன்றுவரை எந்தவொரு நியாயமான தீர்வையும் வழங்காத மகிந்த இனியும் தமிழ் மக்களை ஏமாற்ற முடியாது என அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு, பார் வீதியில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான மொட்டுக் கட்சி எதிர்காலத்தில் தாங்களே ஆட்சியமைக்கப் போவதாகவும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஆதரவைப் பெற்று தமிழ் மக்களுக்கான ஒரு தீர்வினை வழங்குவோம் எனவும் கூறுகின்றனர்.

உண்மையில் இவர்கள் நினைத்திருந்தால் 2009 ஆம் ஆண்டு யுத்தம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுகின்ற நடவடிக்கையை மேற்கொண்டிருக்கலாம்.

ஏனென்றால் யுத்தத்தை நடத்தியவர் மகிந்த ராஜபக்ஷவே. அவரோடு இணைந்து செயற்பட்டவர்கள் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் மகிந்த ராஜபக்ஷவின் சகோதரர்களே.

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்துவிட்டதாக மார்தட்டிக்கொண்ட இவர்கள் நினைத்திருந்தால் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய நியாயமான தீர்வினை வழங்கி தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்த்திருக்கலாம்.

உண்மையில் இங்கு நடந்த யுத்தத்தை மற்றொரு நாட்டின் மீது தனது படையை அனுப்பி மேற்கொள்ளப்பட்ட ஒரு போராகவே மகிந்த கருதினார்.

ஒரு நாட்டிற்குள்ளேயே அந்த நாட்டின் தேசிய இனங்கள் உரிமைக்காக போராடுகின்ற சந்தர்ப்பத்தை கிளர்ச்சியாகவே கொள்ளமுடியும். அதனை போராகக் கொள்ளமுடியாது. ஆனால் மகிந்த ராஜபக்ஷ அவ்வாறு கருதவில்லை.

மாறாக சர்வதேச நாடுகளின் உதவியுடன் பாரிய இனவழிப்பை மேற்கொண்டு விட்டு தனது ஆட்சிக்காலம் தொட்டு இன்றுவரை எந்தவொரு நியாயமான தீர்வையும் வழங்கவில்லை.



இப்போது மகிந்த ராஜபக்ஷவும் அவரது சகோதரர்களும் தமிழர்களுக்குத் தீர்வை வழங்குவோம் என்று கூறுவது போலியான சந்தர்ப்பவாத நடவடிக்கையாகவே கருதமுடியும்" என்று அவர் மேலும் தெரிவித்தார். (7)

# சமுர்த்தி கொடுப்பனவை பெற்றுக்கொடுக்க த.மு.கூ.அரசிற்கு அழுத்தம் கொடுக்கும்



(ஹற்றன்)

சம்பள உயர்வு விடயத்தில் அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்து 50 ரூபாய் பெற்றுக் கொடுத்தது போல் எதிர்காலத்தில் எங்களுடைய தொழிலாளர்களுக்கும் அரசாங்கம் ஏனையவர்களுக்கு வழங்குகின்ற மானியத்தையும் சமுர்த்தி கொடுப்பனவையும் பெற்றுக்கொடுக்க தமிழ் முற்போக்கு கூட்டணி அழுத்தம் கொடுக்கும் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித்தலைவருமான விசேட பிரதேசங்களுக்கான அபிவிருத்தி அமைச்சர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

தமிழ் முற்போக்கு கூட்டணியில் அங்கம் வகிக்கின்ற தொழிற்சங்கங்கள் இணைந்து ஏற்பாடு செய்த வரவு-செலவுத் திட்டத்தின் மூலமாக அரசாங்கத்தினால் வழங்கப்படவுள்ள ஐம்பது ரூபாய் சம்பள அதிகரிப்பு தொடர்பாக விளக்கமளிக்கும் கூட்டம் நேற்று முன்தினம் ஹற்றன் டி.கே.டபிள்யூ மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசாங்கம் தொழிலாளர்களின் சம்பள விடயம் தொடர்பாக முதல் முறையாக வரவு-செலவுத் திட்டத்தில் ஒரு தொகையை அதிகரிப்பதற்கு தீர்மானித்திருக்கின்றது.

அதற்குக் காரணம் தமிழ் முற்போக்கு கூட்டணி அரசாங்கத்திற்குக் கொடுத்த அழுத்தம் என்பதை யாரும் மறுக்க முடியாது. இது ஒரு சிறிய தொகையாக இருந்தாலும் கூட எதிர்காலத்தில் இந்த விடயத்தில் அதாவது அரசாங்கம் ஏனையவர்களுக்கு வழங்குகின்ற சமுர்த்தி கொடுப்பனவுகள், மானியங்கள் என்பவற்றை பெற்றுக் கொள்வதற்கு இது ஒரு ஆரம்பமாகவே இருக்கும்.

இதுவரை காலமும் தொழிலாளர்களின் கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்பு அது தொடர்பாக எந்தவிதமான எதிர்ப்புக்களும் அல்லது அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தையோ நடைபெறுவது இல்லை. ஆனால் இந்த முறை அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுத்து மேலதிகமாக 50 ரூபாயை தமிழ் முற்போக்கு கூட்டணி பெற்றுக் கொடுத்திருக்கிறது. இது எங்களுக்கு கிடைத்த வெற்றியாக நாங்கள் கருதவில்லை.

ஆனால் இதன் ஊடாக எதிர்காலத்தில் அரசாங்கத்துக்கு அழுத்தங்களை கொடுத்து ஏனையவர்களுக்கு அரசாங்கம் வழங்குகின்ற அனைத்து சலுகைகளையும் எங்களுடைய மக்களும் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது.

அதற்கான அழுத்தத்தையும் நாங்கள் கொடுப்பதற்கு தயாராக இருக்கின்றோம்

நாங்கள் முற்போக்கு கூட்டணி என்ற வகையில் அரசாங்கத்தோடு இருக்கின்றோம் என்பதற்காக எல்லாவற்றையும் நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம். எங்கள் மக்களுக்கும் எது தேவையோ எது சரி என்றுபடுகின்றதோ அதற்காக நாங்கள் எப்பொழுதும் குரல் கொடுக்கத் தயங்க மாட்டோம்.

அதனை கடந்த காலங்களில் தமிழ் முற் போக்கு கூட்டணி செய்து காட்டி இருக்கின்றது.

எதிர்காலத்தில் கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் தொழிற்சங்கங்கள் தாங்கள் தன்னிச்சையாக எந்த முடிவையும் எடுக்க முடியாது என்பதை நாம் இந்த முறை அவர்களுக்கு உணர்த்தி இருக்கின்றோம். எனவே எங்களுடைய மக்கள் தொடர்பான பிரச்சினைகளை மக்களோடு பேசி அல்லது மலையகத்தில் பிரதிநிதித்துவம் செய்கின்ற அனைத்து தொழிற்சங்கங்களும் இணைந்து பேச்சுவார்த்தை நடத்தி ஒரு தீர்மானத்திற்கு வர வேண்டும் என்பதை இந்த முறை கூட்டு ஒப்பந்தத்தின் மூலமாக கொடுக்கப்பட்ட அழுத்தத்தில் தெளிவாக தெரிகின்றது.

எனவே எதிர்காலத்திலும் அந்த அழுத்தங்களை கொடுப்பதற்கு தமிழ் முற்போக்குக் கூட்டணி என்றும் பின்னிற்காதெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# செய்தித்துளிகள்

## அதிர்ஷ்டவசமாக தப்பிய பயணிகள்

(கொழும்பு)

சென்னை விமான நிலையத்தில் தரையிறங்கும் போது ஸ்ரீலங்கன் விமானம் ஒன்று பாரிய ஆபத்தில் இருந்து அதிர்ஷ்டவசமாக தப்பியுள்ளது.

நேற்று முன்தினம் காலை சென்னை விமான நிலையத்தில் தறையிறங்கும் போது விமானத்தின் ரயர் வெடித்துள்ளதாக தெரிய வருகிறது,

ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்திற்குச் சொந்தமான UL 121 விமானம் ஒன்றிற்கே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து பயணித்த விமானம் ஒன்று நேற்று முன்தினம் காலை 8.40 மணியளவில் சென்னையைச் சென்றடைந்துள்ளது.

142 பயணிகளுடன் சென்ற விமானம் தரையிறக்கும் போது விமானத்தின் ரயர் வெடித்துள்ளது. எனினும் பயணிகள் காயமின்றி தப்பியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)



**அதுல்கோட்டே ஸ்ரீ ம ஹிந்தாராம விகாரையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள மூன்று மாடிக் கட்டடத்தை மகா சங்கத்தினரிடம் கையளிக்கும் நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. (இ-7)**

# வாகன இறக்குமதி 90 வீதமாக வீழ்ச்சி

(கொழும்பு)

வாகன இறக்குமதி மற்றும் விற்பனை நடவடிக்கை துரிதமாக வீழ்ச்சியடைந்துள்ளதாக இலங்கை வாகன இறக்குமதியாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

வாகன இறக்குமதி 90 சதவீதம் வீழ்ச்சியடைந்துள்ளதுடன் வாகன விற்பனை 70 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளதென அச்சங்கத்தின் தலைவர் இந்திக சம்பத் தெரிவித்துள்ளார்.

வாகன இறக்குமதி தொடர்பில், அரசாங்கத்தால் பல சந்தர்ப்பங்களில் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளே இந்த வீழ்ச்சிக்கான காரணமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் வாகன விற்பனைக்கான சந்தையின் நிலையற்ற தன்மையால் வாகன விற்பனை வெகுவாகப் பாதித்துள்ளதாகவும் இந்த நிலையைக் குறைப்பதற்கு எதிர்வரும் வரவு-செலவுத் திட்டத்திலாவது அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் இலங்கை வாகன இறக்குமதியாளர் சங்கத்தின் தலைவர் இந்திக சம்பத் வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 60 | 70 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 75 | 100 |
| பச்சைமிளகாய் | 150 | 180 | 150 | 160 |
| தக்காளி | 50 | 50 | 50 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 80 | 40 | 80 |
| கோவா | 50 | 50 | 50 | 50 |
| கரட் | 100 | 100 | 70 | 120 |
| பூசணி | 40 | 30 | 30 | 40 |
| புடோல் | 50 | 40 | 30 | 60 |
| வாழைக்காய் | 60 | 100 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 100 | 120 | 100 | 100 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 70 | 80 |
| பாகற்காய் | 80 | 120 | 80 | 120 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 40 | 120 |
| கருணைக் கிழங்கு | 50 | 50 | 40 | 100 |
| பயற்றங்காய் | 140 | 100 | 80 | 120 |
| லீக்ஸ் | 80 | 120 | 70 | 120 |
| பீற்றூட் | 60 | 50 | 40 | 40 |
| கறிமிளகாய் | 100 | 100 | 80 | 120 |
| முருங்கைக்காய் | 400 | 300 | 400 | 800 |
| போஞ்சி | 50 | 80 | 70 | 120 |
| கத்தரிதம்புள்ள | 80 | — | 50 | 60 |
| கீரை - 1பிடி | 30 | 30 | 15 | 30 |
| தேசிக்காய் | 50 | 80 | 60 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 40 | 30-35 | 30-50 |
| இராசவள்ளி | 120 | 120 | 90 | 130 |
| வெங்காயப்பூ | 50 | 60 | 60 | 120 |
| முள்ளங்கி | 30 | 60 | 30 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 15 | 50 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 30 |
| ஈரப்பலா | — | 50 | 100 | 80 |

# மாசி மாத இராசி பலன்கள்



## 03.02.2019-14.03.2019




## பணியில் இருக்கும் தொய்வு அகலும்!

விளம்பி வருடம் மாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சனி லாப ஸ்தானத்தில் சுக்கிரனோடு இணைந்து சஞ்சரிக்கிறார். எனவே பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். புகழ்மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து நல்ல வாய்ப்புகளை வரவழைத்துக் கொடுப்பர். சூரியன் உங்கள் இராசியிலேயே இருப்பதால், கோபம் அதிகரிக்கலாம். கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொள்வதன் மூலம் குறிப்பிட்ட இலக்கை அடைய முடியும். பொதுவாக சென்ற மாதத்தைக் காட்டிலும் இந்தமாதம் சிறப்பாகவே இருக்கும்.

இம்மாதம் தொடக்க நாளிலேயே ராகு-கேதுக்களின் பெயர்ச்சி நிகழவிருக்கிறது. உங்கள் இராசிக்கு 6இல் சஞ்சரித்து வந்த ராகு 5இல் சஞ்சரிக்கப் போகிறார். 12இல் சஞ்சரித்த கேது இப்பொழுது 11ஆம் இடமான இலாப ஸ்தானத்திற்கு வரப்போகிறார். இந்த மாற்றங்கள் நல்ல மாற்றங்கள் தான்.

பஞ்சம ஸ்தானத்தில் ராகு சஞ்சரிப்பதால் பூர்வீகச் சொத்துத் தகராறுகள் அகலும். இதுவரை வழக்கு நடந்தும் கைக்குக் கிடைக்காத சொத்துக்கள், இப்பொழுது பஞ்சாயத்துக்கள் மூலம் தானாக வந்து சேரும். மேல்படிப்பிற்காக பிள்ளைகளை வெளிநாட்டிற்கு அனுப்பும் வாய்ப்பு கைகூடும்.

'இலாப ஸ்தானத்தில்கேது இருப்பது நன்மை தருமா?' என்று நீங்கள் நினைக்க வேண்டாம். நிச்சயமாகத் தொழிலில் இலாபத்தையே கொடுக்கும். கேது பெயர்ச்சியாகி வந்திருக்கும் இடம் குரு வீடாகும். எனவே தோஷங்கள் நிவர்த்தியாகும். யோகத்தை வழங்கும் பாம்புக் கிரகங்களின் பெயர்ச்சி பணவரவைப் பெருக்கும். தேம்பும் உள்ளத்தை மாற்றி தெளிவு தரும். திடீர் திருப்பங்கள் பலவற்றையும் உருவாக்கும். குறிப்பாக சுபவிரயங்களை அதிகரிக்கச் செய்யும். வீடு கட்டும் முயற்சி அல்லது கட்டிய வீடாக விலைக்கு வாங்கும் முயற்சியில் கவனம் செலுத்துவீர்கள்.

ராகு- கேதுக்களுக்குப் பிரீதியாக யோக பலம் பெற்ற நாளில் சர்ப்ப சாந்திப் பரிகாரங்களை செய்துகொள்ள வேண்டும். அதுமட்டுமல்லாமல் உங்கள் இராசியில் சஞ் சரிக்கும் சூரியன், புதனுக்கும் பரிகாரம் செய்து கொள்வது நல்லது. சிவராத்திரியன்று முழுமையாக விரதமிருந்து ஆறுகால பூஜையிலும் கலந்து கொள்வதோடு, சிவபுராணம் மற்றும் சிவ பதிகங்களைப் பாடி மகிழ்வதால் ஜெயம் கிடைக்கும். பயம் விலகும். மாசி பௌர்ணமியில் கிரிவலம் வந்தால் மகிழ்ச்சியான வாழ்க்கையை அமைத்துக்கொள்ள இயலும்.

### மகர சுக்கிரன் சஞ்சாரம்

பெப்ரவரி 25ஆம் திகதி மகர இராசிக்குச் சுக்கிரன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 4, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதி சுக்கிரன். அவர் விரய ஸ்தானத்திற்கு வரும்பொழுது, விரயங்கள் அதிகரிக்கும். சுகக் கேடுகள் வரலாம். ஆரோக்கியத் தொல்லை அகல ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை. தாயின் உடல்நலத்தில் கவனம் தேவை. உற்றார், உறவினர்களின் பகை வளராமல் பார்த்துக்கொள்வது நல்லது.

தங்கம் வெள்ளி வாங்கும் யோகம் உண்டு. விரயங்களைச் சுப விரயமாக்கிக் கொள்ளுங்கள். ஒருசிலருக்கு வீடு மாற்றங்கள் அல்லது இடமாற்றங்கள் வரலாம்.

### அதிசார குருவின் பலன்

மார்ச் 13ஆம் திகதி குரு பகவான் தனுசு இராசிக்கு அதிசாரகதியில் வருகிறார். உங்கள் இராசிக்கு தன லாபாதிபதியாக விளங்குபவர் குரு பகவான். அவர் தனது சொந்தவீடான லாப ஸ்தானத்திற்கு வரும்பொழுது, தொழில் வளர்ச்சி மிகச் சிறப்பாக இருக்கும். தொல்லை தந்தவர்கள் விலகுவர். நல்ல தகவல்கள் இல்லம் தேடி வரலாம். இலாப நோக்கத்தோடு தொழில் தொடங்க முன்வரும் பொழுது மாற்றினத்தவர்கள் கூட உங்களுக்கு ஒத்துழைப்பு செய்வர்.

குருவின் பார்வை 3, 5, 7 ஆகிய இடங்களில் பதிவதால், அந்த இடங்கள் புனிதம் அடைகின்றன. எனவே வழக்குகளில் வெற்றி கிடைக்கும். வாய்தாக்கள் ஓயும். இழப்புகளை ஈடு செய்ய நல்ல சந்தர்ப்பங்கள் கூடிவரும். அரசு வழி ஆதரவுடன் புதிய திருப்பங்களைக் காண்பீர்கள். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி நீங்கள் எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். அவர்கள் வெளிநாடு செல்ல விரும்பினாலும், வேலைக்கு செல்ல விரும்பினாலும் அதை நிறைவேற்றிக் கொடுக்கும் ஆற்றல் உங்களுக்கு உண்டு. சவாலான வேலைகளைக் கூடச் சாதாரணமாக செய்து முடிப்பீர்கள். சகோதர வகையிலும் உதவி கிடைக்கும். இளைய சகோதரத்தோடு இணக்கம் ஏற்படும். லாப குருவைப் பலப்படுத்த குருபீடங்களுக்குச்சென்று வழிபட்டு வருவது நல்லது. சொந்தபந்தங்கள் கூட உங்கள் முன்னேற்றத்தைக் கண்டு ஆச்சரியப்படும் நேரம் இது. இம்மாதம் வியாழன் தோறும் குரு பகவானை வழிபட்டு வாருங்கள் மேலும் சிவராத்திரி அன்று. ஆறுகால பூஜையிலும் கலந்து கொண்டு, சிவபெருமான் வழிபாட்டை மேற்கொள்வதன் மூலம் செல்வவளம் பெருகும்.



### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரும். செய்யும் காரியங்களில் வெற்றி கிடைக்கும். கொடிகட்டிப் பறந்த குடும்ப பிரச்சினைகள் படிப்படியாக தீரும். அடிப்படை வசதிகளைப் பெருக்கிக் கொள்வீர்கள். கணவன் - மனைவி உறவில் பிரியம் கூடும். பிள்ளைகளால் பெருமை வந்து சேரும். தாய், தந்தையரின் ஆதரவோடு தடைகளை முறியடிப்பீர்கள். கேட்ட உதவிகளைச் செய்ய உடன்பிறப்புகள் முன்வருவர். பணி புரியும் பெண்களுக்கு வேலைப்பளு கூடினாலும், அதற்கேற்ப ஊதியம் கிடைக்கும். புதிய வேலைக்கு விண்ணப்பித்தவர்களுக்கு அது கிடைக்கக் கூடும். வருமானம் பெருகும். குலதெய்வ வழிபாடும், பௌர்ணமியன்று கிரிவலம் வந்து தெய்வங்களை தரிசிப்பதும் நற்பலன்களை வழங்கும்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**






## பதவி மாற்றங்கள் வரும் நேரம்!

விளம்பி வருடம் மாசி மாதக் கிரக நிலை களை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் குரு பகவான், உங்கள் இராசியைப் பார்க்கிறார். மேலும் குரு பகவான் உங்கள் ராசிக்கும், தொழில் ஸ்தானத்திற்கும் அதிபதி என்பதால், தொழில் வளர்ச்சி மிகச் சிறப்பாக இருக்கும். துணிந்து எடுத்த முடிவுகளால் நல்ல மாற்றங்களைக் காண்பீர்கள். தனாதிபதி செவ்வாய் தன ஸ்தானத்தில் இருப்பது யோகம் தான். பொருளாதார பற்றாக்குறை அகலும். புதிய நண்பர்களின் அறிமுகத்தால் வளர்ச்சி கூடும். வாய்ப்புகள் வாசல் கதவைத் தட்டும்.

இம்மாதம் தொடக்க நாளிலேயே ராகு-கேதுக்களின் பெயர்ச்சி நடைபெற இருக்கிறது. இந்தப் பாம்புக் கிரகங்களின் பெயர்ச்சி தான் உங்களுக்குப் பலவித மாற்றங்களை வழங்கப் போகிறது. சுக ஸ்தானத்திற்கு ராகு வருகிறார். தொழில் ஸ்தானத்திற்கு கேது வருகிறார்.

10இல் கேது வரும் பொழுது புதிய தொழில் தொடங்கும் வாய்ப்புகள் கைகூடி வரும். மாற்றினத்தவர்கள் கூட மனம் உவந்து ஒத்துழைப்புச் செய்வர். வேற்று மொழிக்காரரும் உங்கள் ஆற்றலைக் கண்டு ஆச்சரியப்படுவர். உங்கள் தொழிலில் கூட்டாளியாக சேர பலர் முன் வருவர். உத்தியோகத்தில் உள்ளவர்கள், 'சம்பாதித்ததில் கொஞ்சம் கூட சேமிக்க முடியவில்லையே. சிறு தொழில் ஏதாவது தொடங்கலாமா?' என்று யோசிப்பீர்கள். சுயஜாதகம் பலம் பெற்றிருப்பவர்கள், விருப்ப ஓய்வில் வெளி வந்து, விரும்பிய தொழிலைத் தொடங்க இது நல்ல நேரம்.

4ஆம் இடத்திற்கு வரும் ராகுவால், இடம், வீடு வாங்கும் யோகம் கிடைக்கும். கடன்கள் கேட்ட இடத்தில் கிடைக்கும். மாதம் தோறும் வட்டி கட்டுவதாகச் சொல்லி வங்கி களின் மூலமாகவோ, வள்ளல்களின் மூலமாகவோ உதவிகளைப் பெறுவீர்கள். குடும்பச்சுமை கூடும். இருப்பினும் அதைச் சமாளிக்கும் ஆற்றல் உங்களுக்கு உண்டு. தாயின் உடல் நலத்தில் கவனம் தேவை. மருத்துவச் செலவு ஏற்படும். அரசியல் மற்றும் பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு இக்காலம் ஓர் இனிய காலமாகும். புதிய பொறுப்புகளும், பதவிகளும் கிடைக்கலாம். தசாபுத்தி பலம் பெற்றவர்களுக்கு தானாக தலைமைப் பதவிகள் வந்துசேரும்.

பதவி வாய்ப்பைத் தரும் கேதுவையும், பக்கபலமாக இருக்கும் ராகுவையும் முறையாக வழிபட்டு யோகம் தரும் நாளில் பரிகாரங்களைச் செய்து கொள்ளுங்கள். மேலும் சிவராத்திரி அன்று விரதமிருந்து சிவனையும், உமையவளையும், நந்தியம் பெருமானையும் வழிபட்டால் அதிக நன்மைகளைப் பெற முடியும்.

### மகர சுக்கிரன் சஞ்சாரம்

பெப்ரவரி 25ஆம் திகதி மகர இராசிக்கு சுக்ரன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 3, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் இலாப ஸ்தானத் திற்கு வரும்பொழுது உடன்பிறப்புகளின்வழியே ஒருதொகை உங்களுக்கு கிடைக்கலாம். குறிப்பாக பூர்வீகச் சொத்துக்களை அவர்களுக்கு கொடுத்துவிட்டு, அதற்கு இணையான தொகையை பெற்றுக்கொள்ள முன் வருவீர்கள். பங்காளிப் பகை மாறும். தங்கம், வெள்ளி போன்றவற்றில் முதலீடு செய்யும் எண்ணம் உருவாகும்.

### அதிசார குருவின் பலன்

மார்ச் 13ஆம் திகதி குரு பகவான் தனுசு இராசிக்கு அதிசார கதியில் வருகிறார். உங்கள் இராசிக்கு 10ஆம் இடமான தொழில் ஸ்தானத் திற்கு அதிபதியான குரு பகவான், தொழில் ஸ்தானத்திலேயே, அதுவும் அதிசார கதியில் சஞ்சரிக்க வரும்பொழுது தொழில் வளம் சிறப்பாக இருக்கும். வியாபாரம் சூடு பிடிக்கும். ஒரு தொழில் செய்வோர் பல தொழில் செய்யும் வாய்ப்பு உருவாகும். அதே நேரம் 10இல் வரும் குரு மாற்றத்தை உருவாக்கும் என்பார்கள். எனவே உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு திடீரெனப் பொறுப்புகள் மாற்றப்படலாம். மேலதிகாரிகளின் ஆதரவு குறையும். பொதுநலத்திலும், அரசியலிலும் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் தானாக வந்துசேரும். எதிர்பார்க்கும் பொறுப்புகள் ஒரு சிலருக்கு கிடைக்காது. அவர்கள் குரு வழிபாட்டை முறையாக மேற்கொள்வது நல்லது. குரு இருக்கும் இடத்தைக் காட்டிலும் பார்க்கும் இடத்திற்கு பலன் அதிகம். அந்த அடிப்படையில் குருவின் பார்வை 2, 4, 6 ஆகிய இடங்களில் பதிகிறது. எனவே குடும்ப முன்னேற்றம் கூடுதலாக இருக்கும். குலதெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். இல்லத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான அறிகுறி தென்படும். எதிரிகள் உதிரிகளாவர். ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். வாழ்க்கைத் துணையால் வந்த பிரச்சினைகள் அகலும்.

இம்மாதம் ராகு-கேதுக்களை முறையாக வழிபடுவதோடு, வியாழக்கிழமை தோறும் நவக்கிரகத்தில் உள்ள குருவையும், தட்சிணாமூர்த்தியையும் வழிபட்டு வருவது நல்லது.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் தனாதிபதி செவ்வாய், தன ஸ்தானத்தில் பலம் பெற்றிருப்பதால் பணத் தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். மக்கள் செல்வங்கள் மகிழ்ச்சிக்குரிய தகவலைக் கொண்டுவந்து சேர்ப்பர். கணவன் - மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். மனம் விட்டுப் பேசி பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வீர்கள்.

குரு பார்வை இருப்பதால் இல்லத்தில் காதுக்குத்து விழா, கல்யாணம், சஷ்டியப்த பூர்த்தி என்று சுபநிகழ்வுகள் நடைபெற வாய்ப்பு உண்டு. தாய்வழி ஆதரவு திருப்தி தரும். சகோதரர்களின் ஒத்துழைப்பு உங்கள் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும். பணிபுரியும் பெண்களுக்கு, எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கும். 10இல் வரும் குருவால் நினைக்க இயலாத மாற்றங்கள் வரலாம். குல தெய்வ வழிபாடும், பௌர்ணமி வழிபாடும் பலன்களை அதிகரிக்கும்.

(முற்றும்)

மகத்தான சாதனைகள் அனைத்தும் முடியும், நடக்கும் என்ற முதலடியில்தான் ஆரம்பமாகின்றன.

~ ஓர் அறிஞர்

T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## போர்க்குற்ற விசாரணையை ஒன்றாக வலியுறுத்துங்கள்

இலங்கை மண்ணின் ஆட்சி சிங்களத் தரப்புக்கு சென்றதிலிருந்து தமிழ் மக்கள் படும் துன்பம் கொஞ்சமல்ல.

இருந்தும் தமிழனுக்கு என்றொரு நாடு இல்லாத காரணத்தால் ஈழத் தமிழினத்தின் அவலத்தை சர்வதேச அரங்கில் எடுத்துரைக்க எவரும் இல்லாமல் போயிற்று.

எனினும் காலத்தின் மாற்றம் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் போர்க்குற்றவாளிகளை நிறுத்தக்கூடிய நிலைமையைத் தந்துள்ளது.

தமிழனுக்கு என்றொரு நாடு இல்லை என்றொரு குறை இருந்தாலும் ஈழப் போருக்குப் பின்பாக ஈழத் தமிழன் இல்லாத நாடு இல்லை எனும் அளவுக்கு உலகம் முழுவதிலும் நம் தமிழன் பெயர் சொல்லுமளவில் வாழ்கிறான்.

இத்தகைய சூழ்நிலையில் இலங்கையின் தென்பகுதி அரசியல் என்பது முன்னெப்போதும் இல்லாத குழப்பத்தையும் பகைமையையும் கொண்டுள்ளது.

இஃது தமிழ் மக்களுக்கு நல்லதோர் சந்தர்ப்பமாகும்.

அதாவது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் எதிர்பாராத விதமாக ஒன்று சேர்ந்ததன் காரணமாக தென்பகுதி அரசியல் நீறுபூத்த நெருப்பாக இருப்பதைக் காண முடியும்.

இத்தகையதோர் சூழ்நிலையில் போர்க்குற்றம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறிய கருத்துக்கள் மிகவும் முக்கியமானவை.

அதாவது இலங்கையில் போர்க்குற்றம் நடந்துள்ளது. இதுதொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பதுதான் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முன்வைத்த மிக முக்கியமான கருத்தாகும்.

எதிர்வரும் மார்ச் மாதம் ஐ.நா மனித உரிமை பேரவையின் கூட்டத் தொடர் ஆரம்பமாக இருக்கின்ற நேரத்தில், இலங்கையில் போர்க்குற்றம் இழைக்கப்பட்டுள்ளதென்றும் போர்க்குற்றம் தொடர்பில் உரிய விசாரணை நடத்தி சம்பந்தப்பட்டவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முன்வைத்த கருத்தை தமிழ் அரசியல் தரப்புகளும் பொது அமைப்புகளும் ஒன்றாகக் கையிலெடுத்துக் கொண்டு சர்வதேச போர்க்குற்ற விசாரணையை வலியுறுத்த வேண்டும்.

இதைச் செய்வது காலத்தின் கட்டாய தேவையாகும்.

வன்னிப் பெருநிலப்பரப்பில் கொடும் போர் நடந்து பத்து ஆண்டுகள் கடந்த நிலையில், போர்க்குற்றம் நடந்தது என்பதை இந்த நாட்டின் முன்னாள் ஜனாதிபதி ஒருவர் கூறியிருப்பது ஆச்சரியம் நிறைந்த ஒரு வித்தியாசமான சூழ்நிலையாகும்.

இதுவரை காலமும் போர்க்குற்றம் நடைபெறவில்லை. இராணுவத்தினரைத் தண்டிக்க விட மாட்டோம் என்ற கோசமே தென்பகுதியின் வழமையாக இருந்த போதிலும் இப்போது அந்த வழமை திசை திரும்பியுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் போர்க்குற்றம் நடந்தது என்று கூற, இந்த நாட்டின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களும் போர்க்குற்றம் நடந்ததை மறைமுகமாக ஏற்றுக் கொண்டுள்ளதை வட புலத்தில் அவர் ஆற்றிய உரை உறுதி செய்துள்ளது.

எனவே அனைத்துத் தமிழ்த் தரப்புகளும் ஒன்றுதிரண்டு ஒற்றுமையாக போர்க்குற்ற விசாரணையை வலியுறுத்துவது மிக மிக அவசியமானதாகும்.

## யாழ்.கொட்டடி பகுதியில் முதியவர் மீது தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

வளர்ப்பு மகன் தாக்கியதில் முதியவர் தனது ஒரு கண் பார்வையை இழந்த பரிதாபச் சம்பவம் யாழ்ப்பாணம் கற்குளம் கொட்டடிப் பகுதியில் நேற்று இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் கனகையா சந்திரராசா (வயது - 72) என்ற முதியவர் தனது ஒரு கண்பார்வையை இழந்துள்ள நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-10)

## ஜனாதிபதியுடன் இணைந்து செயற்படுவது அதிருப்தியளிக்கிறது

### சுஜீவ சேனசிங்க தெரிவிப்பு

அரசியல் நெருக்கடியின் பின்னர் தற்போது தொடர்ந்து வரும் அரசாங்கத்தின் நிர்வாக நடவடிக்கைகளில் ஜனாதிபதியுடன் இணைந்து செயற்படுவது சில சந்தர்ப்பங்களில் திருப்தியளிப்பதாக அமைந்திருந்தாலும் பல்வேறு சந்தர்ப்பங்களில் அதிருப்தியுடனேயே செயற்பட்டு வருகின்றோம் என விஞ்ஞான தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர் சுஜீவ சேனசிங்க தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய அபிவிருத்தி பணிகள் தொடர்பில் விளக்கமளிக்கும் வகையிலான ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று விஞ்ஞான தொழில்நுட்பம் மற்றும் ஆய்வுகள அமைச்சில் இடம்பெற்றது. இதில கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். (ம-3)

## உரிமையைக் கொடுத்துவிட்டு தேசிய உணர்வுடன் பேச முடியாது

### அமைச்சர் மனோ கணேசன் தெரிவிப்பு

(கொழும்பு)

ஒருநாடு என்ற கொள்கையை ஏற்றுக்கொண்டதால் ஒரு மதத்திற்கும் ஒரு இனத்திற்கும் மட்டுமே இங்கு முன்னுரிமை என்பது நாம் ஏற்றுக் கொண்டதாக அர்த்தம் அல்ல. ஒரு மதத்திற்கும், ஒரு இனத்திற்கும் உரிமையை கொடுத்துவிட்டு எம்மால் தேசிய உணர்வுடன் பேச முடியாது என அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

இந்து சமய அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான தேசிய ஆக்கத்திறன் விருது வழங்கும் நிகழ்வு பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

எனது அமைச்சின் கீழ் பல திணைக்களங்கள் உள்ளன. அரச கரும மொழி திணைக்களம், ஆணைக்குழு, அரச சாராத நிறுவனங்களின் தேசிய செயலகம், காணாமல்போனோர் அலுவலகம், தேசிய நல்லிணக்க ஒருமைப்பாட்டு செயலகம் தேசிய கல்வி பயிற்சி மொழி நிறுவனம் உள்ளிட்டவை இருக்கின்றன.

ஆனால் இந்து மத கலாசார திணைக்களம் அவ்வாறு இருக்கவில்லை.

ஆகவே இதனையும் அமைச்சின் கீழ் நிரந்தரமான திணைக்களமாக மாற்றியமைக்க நடவடிக்கை எடுத்து வருகின்றேன் என்றார். (ம-3)

## பாதுகாப்பு உத்தியோகத்தர் மீது யாழ்.போதனாவில் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் பாதுகாப்பு கடமையில் இருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர், மது போதையில் வந்த இனந்தெரியாத நபர்களால் தாக்குதலுக்குள்ளாகிய நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் 22 வயதுடைய லோகநாதன் கீர்த்திகன் என்ற பாதுகாப்பு உத்தியோகஸ்தரே தாக்குதலுக்கு இலக்காகி சிகிச்சை பெற்று வருகிறார்.

இத்தாக்குதல் தொடர்பில் சந்தேகத்தில் ஒருவரை யாழ். பொலிஸார் கைது செய்துள்ளனர். (ம-3,10)

## கூட்டமைப்பின் ஜெனிவா தூதுக்குழு தொடர்பில் நாளை தீர்மானம் – மாவை

(கொழும்பு)

ஜெனிவா மாநாட்டில் பங்கேற்கவுள்ள தமது தூதுக்குழு தொடர்பில் நாளை இடம்பெறவுள்ள தமது பாராளுமன்ற குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்படும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

தற்போது ஜெனிவாவில் புதிய பிரேரணை ஒன்று கொண்டுவரப்படவுள்ள நிலையில், அது குறித்து ஆராய வேண்டியுள்ளதாக கூட்டமைப்பின் பொதுச் செயலாளரான நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

இந்த மாதம் 25ஆம் திகதி ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 40ஆவது மாநாடு ஆரம்பமாகவுள்ளது.

இந்த முறை இலங்கையின் பொறுப்புக்கூறல், மறுசீரமைப்பு மற்றும் மனித உரிமைகளை உறுதிப்படுத்தும் வகையிலான புதிய பிரேரணை ஒன்று முன்வைக்கப்படும் என்று பிரித்தானியா அறிவித்துள்ளது.

இந்த நிலையில், இலங்கை அரசாங்கத்தின் சார்பில் வெளிவிவகார அமைச்சின் பிரதிநிதிகள் அடங்கிய குழு ஒன்று ஜெனிவா நோக்கி பயணிக்கவிருப்பதாக கூறப்படுகிறது.

அதேநேரம், காணாமல் போனோரின் உறவினர்கள் சார்பாகவும் விசேட குழு ஒன்று ஜெனிவா நோக்கி பயணிக்கவிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## இலவச மருத்துவ முகாம்

(யாழ்ப்பாணம்)

அமரர் திரு.திருமதி மு.க.சின்னையா சௌபாக்கியவதி (பாக்கியம்) நினைவாக தமிழ்த்தாய் மன்றமும் செங்குந்த இளைஞர் கழகமும் இணைந்து நடத்தும் இலவச மருத்துவ முகாம் இன்று செவ்வாய்க்கிழமை "மாற்றம் பணிமனை" 31, செங்குந்த வீதி, சட்டநாதர் வீதி ஊடாக யாழ்ப்பாணம் என்ற முகவரியில் காலை 8.00 முதல் 12.00 மணி வரை நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுகளுக்கு பிரதம விருந்தினராக ஓய்வு நிலை கல்விப் பணிப்பாளர், மத்திய அரசின் கல்வி ஆலோசகர் கலாநிதி நா. தணிகாசலம்பிள்ளையும் சிறப்பு விருந்தினராக யாழ். இந்துக் கல்லூரி ஆரம்பப் பிரிவு அதிபர் நா.மகேந்திரராசாவும் கௌரவ விருந்தினராக யாழ்.செங்குந்த இந்துக் கல்லூரி அதிபர் இ.பாலச்சந்திரனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில் இலவச நீரிழிவு பரிசோதனை (blood sugar) (blood pressure) இலவச இரத்த அழுத்த பரிசோதனை (blood pressure) நடைபெறவுள்ளது.

இதில் 100 பேருக்கு இலவசமாக கண் பரிசோதனை செய்யப்பட்டு, இலவச மூக்குக் கண்ணாடிகளையும் வழங்கவுள்ளோம்.

யாழ்.மாநகர சபை ஆயுர்வேத வைத்தியர்கள் இலவசமாக நோயாளிகளைப் பரிசோதனை செய்து மருந்துகள் வழங்கவுள்ளனர்.

கொழும்பில் இருந்து வருகை தரும் டாக்டர் எம். லாசகன் (இயற்கை வைத்தியர்) சகல நோய்களுக்குமான இயற்கை வைத்தியமும் நோய வராமல் எம்மைப் பாதுகாப்பதற்கான ஆலோசனைகளும் வழங்கவுள்ளனர்.

போதைப்பொருள் விழிப்புணர்வு கருத்தரங்கை ஜெ. கோகுலவாசன் செயற்றிட்ட பணிப்பாளர் DASCO அவர்கள் வழங்குவார்கள். (ம)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- தொண்டாற்ற விரும்புபவர்கள் சொந்த விருப்பு வெறுப்புகளை மூட்டை கட்டி கடலில் தூக்கி எறிந்து விட்டு, கடவுளிடம் சரணாகதி அடைந்து விடவேண்டும்.
- தற்பெருமை சிறிதும் வேண்டாம். பொறாமைப்படுவதும் கூடாது. பூமித்தாயைப் போல பொறுமையுடன் பணியாற்றுங்கள். உலகமே உங்கள் காலடியில் கிடக்கும்.
- எந்த வேலையையும் ஒழுங்கு, அமைதியுடன் செய்ய பழகுங்கள். குறிக்கோளை நிர்ணயித்துக் கொண்டு அதைநோக்கிய பயணமாக வாழ்வை அமைத்துக் கொள்ளுங்கள்.
- செல்வம், புகழ், சுகபோக வாழ்வு இவையெல்லாம் சில காலம் மட்டுமே. உலக ஆசையில் மூழ்கி விடாதீர்கள்.
- முயற்சியுடன் உழைத்தால் நம்மிடம் பெருஞ்சக்தி உண்டாவதை உணரமுடியும். பிறருக்காகச் செய்யும் சிறு முயற்சி கூட, சிங்கத்தின் பலத்தை தந்து விடும்.
- மனத்தளர்ச்சி சிறிதும் கூடாது. எப்போதும் இனிமையோடும், மனஉறுதியோடும் இருக்கப் பழகுங்கள். இது பிரார்த்தனையை விட முக்கியமானது.

# நல்லூர் பிரதேச செயலக கூடைப்பந்தாட்டம் நீராவியடி நண்பர்கள் அணி சம்பியன்



நல்லூர் பிரதேச செயலகங்களுக்கிடையிலான இல்ல மெய்வல்லுநர் போட்டியின் ஓர் அங்கமாக நடைபெற்ற கூடைப்பந்தாட்டத் தொடரில் ஜே/101 கிராம சேவகர் பிரிவின் நீராவியடி நண்பர்கள் அணி சம்பியன் பட்டத்தை வென்றது. நேற்று முன்தினம் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப் போட்டியில் கொக்குவில் சனசமூக அணியும் நீராவியடி நண்பர்கள் அணியும் பலப்பரீட்சை நடத்தின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் 90:78 என்ற புள்ளிகள் அடிப்படையில் நீராவியடி நண்பர்கள் அணி சம்பியன் பட்டத்தை வென்று அசத்தியுள்ளது. (க)

# வீர சூரி விருது விழா; உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர்கள் கௌரவிப்பு





வடமாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில், விளையாட்டுத் துறையில் தங்களை முழுமையாக ஈடுபடுத்தி பல முன்னேற்றகரமான செயற்பாடுகளில் ஈடுபட்டு சாதனைகளுக்குச் சொந்தமான உடற்கல்வி ஆசிரியர்களை கௌரவிக்கும் "வீர சூரி விருது" வழங்கல் நிகழ்வு கடந்த 17 ஆம் திகதி யாழ்ப்பாணம் இராமநாதன் வீதி சரஸ்வதி மண்டபத்தில் இடம் பெற்றது.

உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கத் தலைவர் ப.தர்மகுமாரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மடு கல்வி வலய கல்விப் பணிப்பாளர் க.சத்தியபாலன் கலந்துகொண்டதுடன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை, வணிக முகாமைத்துவ பீட சிரேஷ்ட விரிவுரையாளர் தேவரஞ்சினி சிவாஸ்கரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த விருது வழங்கல் நிகழ்வில், கு.பகீரதன் (வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்), ந.செந்தூரன் (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி), ப.வசந்தகுமார் (தொண்டைமனாறு வீரகத்தி மகா வித்தியாலயம்), நா.ரவீந்திரன் (மணற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலயம்), பா.பிரதீபன் (அளவெட்டி அருணோதய கல்லூரி), ஜெனிஸ்ரன் இதயகுமார் (இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலயம்), சோ.ஹரிதரன் (கிளிநொச்சி இந்துக் கல்லூரி), ந.மதிவதனன் (பாசையூர் சென். அன்ரனீஸ் மகா வித்தியாலயம்), ப.இராஜமனோகரன் (கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி), யோ. குபேசன் (ஊர்காவற்றுறை சென். அன்ரனீஸ் கல்லூரி) ஆகிய உடற்கல்வி ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட்டனர். (க-26)

# யங்கென்றிசை வீழ்த்தியது குருநகர் பாடும்மீன் அணி



யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் 75 ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தும் மாவட்ட ரீதியான உதைபந்தாட்டத் தொடரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். துரையப்பா மைதானத்தில் மின்னொளியில் நடைபெற்ற போட்டியில் இளவாலை யங்கென்றீஸ் அணியை 2-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது குருநகர்பாடும்மீன் விளையாட்டுக் கழக அணி. பாடும்மீன் சார்பில் சாந்தன், கெயின்ஸ் ஆகியோர் தலா ஒரு கோலைப் போட்டனர். (க)

# கரப்பந்தாட்ட போட்டிக்கு விண்ணப்பங்கள் கோரல்

யாழ்.மாவட்ட கரபந்தாட்ட சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையில் வருடாந்தம் நடத்தும் A,B பிரிவு ஆண்கள் மற்றும் பெண்கள் அணிகளுக்கிடையிலான லீக் முறையிலான சுற்றுப் போட்டிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்பும் அணிகள் எதிர்வரும் 23ஆம் திகதிக்கு முன்னர் யாழ்.மாவட்ட கரபந்தாட்ட சங்க செயலாளர் வ.செந்தூரன் (77) 379 2971 தொடர்பு கொள்ளவும்.

இம் முறை விண்ணப்பம் அனுப்பாத அணிகள் போட்டியில் இணைக்கப்படமாட்டாது என சங்கப் பொதுக்குழு கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# ஆதிசக்தி விளையாட்டுக்கழக உதைபந்தாட்டம்; சம்பியன் பட்டத்தை வென்றது றேஞ்சர்ஸ் அணி




வடமராட்சி ஆதிசக்தி விளையாட்டுக்கழகம் மறைந்த வீரர்கள் ஞாபகார்த்தமாக நடத்திய யாழ். மாவட்ட ரீதியான உதைபந்தாட்ட தொடரின் இறுதிப்போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆதி சக்தி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

இறுதிப் போட்டியில் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகத்தை 1:0 என்ற ரீதியில் வீழ்த்தி இந்த ஆண்டின் முதலாவது மாவட்ட சம்பியன் பட்டத்தை தட்டி சென்றது கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகம்.

போட்டியின் ஆட்டநாயகனாக றேஞ்சர்ஸ் அணியின் ஆர்த்திகன் தெரிவு செய்யப்பட்டார். (க)

# ஊரெழுச்சித் திட்டத்திற்கு 35.9 மில்லியன் ஒதுக்கீடு



பூநகரி பிரதேச அபிவிருத்திக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனின் சிபாரிசின் அடிப்படையில் ஊரெழுச்சி திட்டத்தில் 35.9 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக பூநகரி பிரதேச சபை உபதவிசாளர் சி.சிறிரஞ்சன் தெரிவித்துள்ளார்.

பூநகரி குமுழமுனை சென் அன்ரனிஸ் விளையாட்டுக்கழக வீரர்களை சந்தித்து கலந்துரையாடிய வேளையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவிக்கையில், உங்களது கழக அபிவிருத்திச் செயற்பாட்டுக்கு ஐந்து இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதுடன் பிரதேச சபையினால் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட வீதிகள் மற்றும் ஆலயங்கள், விளையாட்டுக் கழகம் என்பனவற்றுக்கு நிதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன எனக்கூறினார். (க)

## தேர்தல்கள்...

குழுவின் அங்கத்தவர்கள், குறித்து மனுவில் பிரதிவாதிகளாக பெயரிடப் பட்டுள்ளனர்.

மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு உத்தரவிடுமாறு கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எவ்வாறிருப்பினும் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படுவது குறித்து பாராளுமன்றமே தீர்மானிக்க வேண்டும் என சபை முதல்வரான அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார். கண்டியில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (ம-3)

## ரயிலுடன் மோதி...

யளவில் கொடிகாமம் பகுதியில் ரயிலுடன் மோதி, கச்சாய் வீதி கொடிகாமத்தை சேர்ந்த 22 வயதான மகாலிங்கம் ஜெயரூபன் என்பவர் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

அங்கு அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று திங்கட்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். (ம-10)

## மோ.சைக்கிள்...

டைய நவரத்தினம் திரவிய லக்சுமி என்றவயோதிப பெண்ணே உயிரிழந்தவராவார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது நேற்று முன்தினம் காலை 9.00 மணியளவில் மேற்படி வயோதிபப் பெண் தனது வீட்டு வாசலில்,நின்றவேளை மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டு படுகாயங்களுள்ளான நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ள வேளை சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார். (ம-3,10)

## யுத்தக் குற்றச்...

நாங்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார, எனினும் இராணுவ வீரர்களால் குற்றங்கள் இடம் பெற்றிருந்தால் அதனை எமது நாட்டு சட்டத்தின் பிரகாரம் விசாரணை மேற்கொள்ளலாம் என்றார்.

ஜெனிவா மனித உரிமை பேரவை. கூட்டம் இடம்பெறும் போது தமிழ் அரசியல்வாதிகள் எமது இராணுவத்துக்கு எதிராக குற்றச்சாட்டுக்களை தெரிவிப்பார்கள். பேரவை முடிந்தவுடன் அது தொடர்பில் வாய்திறக்கமாட்டார்கள்.

யுத்தத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்ற தேவை இவர்களுக்கு இல்லை. வெறுமனே அரசியல் நோக்கத்திலே இவர்கள் செயற்படுகின்றனர் எனவும் அவர் இதன்போது தெரிவித்தார்.

சோசலிச மக்கள் முன்னணியினர் நேற்று கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். (ம-3)

## ஆலய வழி...

அருகாமையில் உள்ள முருகன் ஆலயத்தின் வாசலில் தரிசனத்தில் ஈடுபட்டிருந்த போது மயங்கி வீழ்ந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட போது அவர் மரணமடைந்தார். (ம-60)

## எதிர்வரும் 25ஆம் திகதி...

தினம், கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், மதத்தலைவர்கள், அரசியற் கட்சிகளின் பிரதிநிதிகள், நிறுவனம் சார்ந்த பிரதிநிதிகள், பொது அமைப்புக்கள் அனைவரும் ஒன்று கூடி இலங்கை அரசுக்கும், ஐக்கிய நாடுகள் சபைக்கும் மற்றும் சர்வதேச சமூகத்திடமும், தமது உறவுகளுக்கான தீர்வை பெற்றுத்தருமாறு கோரி கவனயீர்ப்பு போராட்டத்தை மேற்கொள்ளவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து மாபெரும் பேரணி ஏ - 9 வீதி ஊடாக நகர்ந்து டிப்போ சந்தியை அடைந்து இலங்கைக்கான ஐக்கிய நாடுகளின் பிரதிநிதிகளிடம் மகஜர் கையளிக்கப் படும் எனவும் இந்த மாபெரும் கவனயீர்ப்பு போராட்டத்துக்கு வடபகுதியில் பூரண கதவடைப்புடன் கூடிய ஹர்த்தாலை அனுஷ்டிப்பதற்கு முழுமையான உணர்வுபூர்வமான பங்களிப்பை வழங்குமாறு கிளிநொச்சி மாவட்டத்தின் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சங்கத்தினர் கோரியுள்ளனர். (ம-3)

## இலங்கைக்...

குறித்த மகஜர் பிரித்தானியா, கனடா, ஜேர்மன், அவுஸ்ரேலியா உள்ளிட்ட பல்வேறு நாட்டு பிரதிநிதிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## இறுதி போர் தொடர்பில்...

துங்க தெரிவித்துள்ளார்.

சில தினங்களுக்கு முன் இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டிருந்த சந்திரிகா அம்மையார், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார். இந்தச் சந்திப்பின் பின்னர் இந்திய ஊடகங்கள் சில, சந்திரிகாவிடம் நேர்காணல்செய்தன. இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இலங்கையின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கிளிநொச்சியில் வைத்து, போரின்போது இடம் பெற்ற போர்க்குற்ற சம்பவங்கள் தொடர்பில் உண்மையைக் கூறி மறப்போம் மன்னிப்போம் என்று தெரிவித்துள்ள நிலையிலேயே, சந்திரிகா அம்மையாரின் கருத்தும் வெளியாகியுள்ளது.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, இலங்கை தொடர்பில் போர்க் குற்றங்களை முதன்மையாகக் கொண்டு ஐ.நா. மனித உரிமைகள் சபையில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

அதில் கூறப்பட்ட பொறுப்புக்கூறல் விடயத்தை இலங்கை அரசு நிறைவேற்றவில்லை.

இதற்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் இந்த முறையும் தீர்மானம் கொண்டுவரப்படவுள்ளதாக நான் அறிகின்றேன்.

என்னைப் பொறுத்தவரையில் எவர் போர்க்குற்றம் இழைத்திருந்தாலும் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்.

அவர்கள் உள்நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ தண்டிக்கப்பட வேண்டும். அதனை ஆட்சியில் உள்ளவர்கள்தான் தீர்மானிக்க வேண்டும்.

இலங்கை தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் கொண்டு வரப்படும் தீர்மானத்தை இந்தியா பெரும்பாலும் ஆதரிக்கும்.

கடந்த காலங்களில் இலங்கை தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இந்தியா ஆதரித்திருந்தது.

இலங்கைக்கு எதிராகச் செயற்படவேண்டும் என்று இந்தியா அதனை ஆதரிக்கவில்லை. இலங்கை தொடர்பில் சர்வதேச சமூகத்தின் மத்தியில் நல்ல பெயர் வரவேண்டும் என்பதற்காகவே இந்தியா ஆதரித்தது என்றார். (ம-3)

## சிறு கைத்தொழில் தாழ்ந்த...

கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் முயற்சியாளர்களுக்கும், கைத்தொழில் மற்றும் வர்த்தக பிரதி அமைச்சர் புத்திக பத்திரனவிற்கும் இடையில் மன்னார் மாவட்டச் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன் போது கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் அவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் முயற்சியாளர்களை கடந்த வருடம் செப்டெம்பர் மாதம் தொடங்கி நவம்பர் மாதம் வரை சந்தித்து கலந்துரையாடல்களை மேற்கொள்ள இருந்தோம்.

ஆனால் முடியவில்லை.வரவு செலவு திட்டத்திற்கு முன்பாக உங்களுக்கு இருக்கின்ற பிரச்சினைகளுக்கு விடை கண்டு அவற்றிற்கு தீர்வுகளை காண்பதற்காக நாங்கள் முயற்சிகளை மேற்கொண்ட போதும் ஒக்டோபர் 26 ஆம் திகதி ஏற்பட்ட அரசியல் குழப்ப நிலை காரணமாக அந்த முயற்சி தோல்வியில் முடிவடைந்தது.

இந்த பாரிய சேவைக்காக நாம் முன் வந்தது நமது நாட்டில் உள்ள மிகப்பெரிய அமைச்சு கைத்தொழில் அமைச்சு என்பதற்காக. நமது நாட்டில் இருக்கின்ற கூடுதலான நிறுவனங்களை கொண்ட அமைச்சுக்களை வரிசைப்படுத்தினால் அவற்றில் இரண்டாம் இடத்தை பெறுவது நமது கைத்தொழில் அமைச்சு.

நமது நாட்டில் இருக்கின்ற அனைத்து உத்தியோகஸ்தர்களும் அதிகளவானவர்கள் நமது அமைச்சின் கீழ் உள்ளவர்களாகவே இருக்கின்றனர்.

பாரிய, சிறிய, நடுத்தர கைத் தொழிலாளர்கள் இங்கே இருக்கின்றார்கள். நுகர்வோர் அதிகாரசபை, சதொச போன்ற நிறுவனங்களும் இந்த கைத்தொழில் அமைச்சின் கீழ் இயங்குகின்றது.

இந்த நிலையில் மாவட்ட ரீதியில் கைத்தொழில் முயற்சியலாளர்களின் பிரச்சினைகளை நேரடியாக நாம் கேட்டு அறிந்து வருகின்றறோம்.

எமது நோக்கம் என்னவெனில், குறுகிய கால பிரச்சினைகளுக்கு தீர்வுகாணல், இடைத்தர கால பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பது. நீர், மின்சாரம் தொடர்பான பிரச்சினைகள், காணி தொடர்பான பிரச்சினை இவற்றுக்காக தீர்வு வழங்கும் போது ஒரு குறுகியகாலம் செல்லும்.

வடமாகாணம்தவிர்ந்து ஏனைய மாகாணங்களில் யுத்தம் இடம் பெறவில்லை. ஒரு சில காரணங்களை தவிர ஏனைய மாகாணங்களைச் சேர்ந்தவர்கள் ஒரு முன்னேற்ற பாதையிலே சென்று கொண்டிருந்தார்கள். எனினும் வடமாகாணத்தில் இடம் பெற்ற 30 வருட கால யுத்தம் காரணமாக தமது தொழில் வளர்ச்சி மிகவும் பூச்சியத்தை விட தாழ்ந்த மட்டத்திலே காணப்பட்டது.

இதனால் தங்களின் வளர்ச்சியை அதிகரிப்பதற்காக நாம் இந்த முயற்சியை மேற்கொண்டிருக்கின்றோம். என அவர் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் சி.ஏ.மோகன்ராஸ் தலைமையில் இடம் பெற்ற குறித்த விசேட கலந்துரையாடலில் கைத்தொழில் மற்றும் வர்த்தக பிரதி அமைச்சர் புத்திக பத்திரன, அமைச்சின் மேலதிக செயலாளர் பாலசுப்பிரமணியம், கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் வடமாகாண பணிப்பாளர் திருமதி தவலோஜி, மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.குணபாலன், அமைச்சர் றிஷாட் பதியுதீனின் பிரத்தியேக செயலாளர் றிப்கான் பதியுதீன், மன்னார் பிரதேச சபையின் தலைவர் எம்.முஜாகிர், மாந்தை மேற்கு பிரதேச சபையின் தலைவர் சந்தியோகு ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது பிரதேசச் செயலாளர்கள், திட்டமிடல் அதிகாரி, திணைக்கள அதிகாரிகள் மற்றும் மாவட்டத்தில் உள்ள கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் முயற்சியாளர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது மன்னார் மாவட்டத்தில் உள்ள கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் முயற்சியாளர்கள் எதிர் நோக்குகின்ற பல்வேறு விதமான பிரச்சினைகள் தொடர்பாக தனித்தனியே விரிவாக ஆராயப்பட்டுள்ளதோடு,அமைச்சு ஊடாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக விரிவாக விளக்கமளிக்கப்பட்டதோடு,தொழிற்பயிற்சியை நிறைவு செய்த 10 பயனாளிகளுக்கு சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-285)

## பலாலியிலிருந்து நேரடியாக...

இருக்கும் நாடுகளுக்கான நேரடி விமான சேவைகளை இங்கிருந்த நடத்தமுடியும்எனவும்கூறப்பட்டுள்ளது.

ஏ-320, ஏ-321 விமானங்கள் பயன்படுத்தக் கூடிய வகையில், பலாலி விமான நிலையத்தின் ஓடுபாதை 3 ஆயிரத்து 500 மீற்றராக விரிவாக்கப்படும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்தவாரம் யாழ்ப்பாணத்துக்குப் பயணம் மேற்கொண்டிருந்த போது, பலாலி விமான நிலையத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடியிருந்தார்.

இதன்போது, ஓடுபாதை அபிவிருத்தியை முன்னுரிமை கொடுத்து முதற்கட்டமாக மேற்கொள்ளுமாறு பிரதமர் உத்தரவிட்டுள்ளார்.

அருகில் உள்ள கட்டடங்களை தற்காலிகமாக புறப்படுகை மற்றும் வருகை முனையங்களாகப் பயன்படுத்தலாம் என்றும், அவ்வாறான நடைமுறை பல நாடுகளில் பயன்படுத்தப்படுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

நிரந்தர முனைய கட்டடங்களை இரண்டாவது கட்ட அபிவிருத்திப் பணியின் போது கட்ட முடியும் என்றும், முதலில் விமான நிலையம் கணிசமான விமானப் போக்குவரத்தை ஈர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கின் அபிவிருத்தியில் அரசு உயர் முன்னுரிமை கொடுப்பதாகவும், குடாநாட்டின் சர்வதேச விமான நிலையம் பிராந்தியத்தில் பெரும் பொருளாதார எழுச்சியை ஏற்படுத்தும் என்றும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க நம்பிக்கை வெளியிட்டார்.

இதன்போது விமான நிலையத்துக்கான மின்சாரம், குடி தண்ணீர் வசதிகள், வீதி, எரிபொருள் களஞ்சியப்படுத்தல் வசதிகள் தொடர்பாகவும் நீண்ட கலந்துரையாடல் நடத்தப்பட்டுள்ளது.

இந்த விமான நிலையத்தை அபிவிருத்தி செய்வதன் மூலம், வடக்கிலுள்ள மக்களுக்கு அதிகளவு நன்மைகள் கிடைக்கும் என்றும், வணிக மற்றும் தொழில் வாய்ப்புகள் கிட்டும் என்றும், சுற்றுலாத்துறை அபிவிருத்தி அடையும் என்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்தார். (ம-3)

### சுபிரி வாசனா

| | |
|---|---|
| திகதி | 2019/02/18 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1405 |

| எழுத்து | வெற்றி இலக்கம் | | | | முதல் போனஸ் இலக்கம் | இரண்டாவது போனஸ் இலக்கம் |
|---|---|---|---|---|---|---|
| 26 | 38 | 43 | 44 | 50 | 08 | 34 |

தேசிய லொத்தர் சபை

### மெகா பவர்

| | |
|---|---|
| திகதி | 18/02/2019 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 346 |

| வெற்றி எழுத்து | சுப்பர் இலக்க | வெற்றி இலக்கங்கள் | | | |
|---|---|---|---|---|---|
| W | 03 | 13 | 49 | 75 | 76 |

### மஹஜன சம்பத

| | |
|---|---|
| திகதி | 2019/02/18 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 3858 |

| ஆங்கில எழுத்து | வெல்லப்பட்ட இலக்கங்கள் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| K | 8 | 0 | 6 | 3 | 2 | 9 |

தேசிய லொத்தர் சபை

### கொவிசெத

| | |
|---|---|
| திகதி | 2019.02.18 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2039 |

| ஆங்கில எழுத்து | வெல்லப்பட்ட இலக்கங்கள் | | | |
|---|---|---|---|---|
| J | 12 | 57 | 67 | 80 |

தேசிய லொத்தர் சபை

## மின்சாரம் தாக்கி...

அம்மன் கோயில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டைச் சேர்ந்த 33 வயதுடைய சோமசுந்தரம் சிவலோகன் என்பவரே உயிரிழந்தவராவார். இது தொடர்பில் தெரியவருவதாவது,

சுதுமலை அம்மன் கோயிலில் மின்சார திருத்த வேலைகள் நேற்றைய தினம் இடம்பெற்றது. அங்கு திருத்த வேலையில் ஈடுபட்டிருந்த போதே பிரஸ்தாப நபரை மின்சாரம் தாக்கிய நிலையில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-3-10)

## ஜெனிவாவில் தீர்...

யாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் கூறினார்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த அவர், ஜெனிவா, மனித உரிமைகள் பேரவை பெப்ரவரி 25 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இதன்போது, இலங்கை தொடர்பான விடயங்களும் கலந்துரையாடப்படவுள்ளன.

இதற்கு இலங்கை அரசாங்கமும் தயார் நிலையில் இருப்பதாகத் தெரியவந்துள்ளது. இலங்கை அரசாங்கத்தின் இந்தச் செயற்பாடானது தேச துரோகமானது என்பதே எமது கருத்தாகும்.

2015, 2017 ஆம் ஆண்டுகளில் ஐக்கிய தேசியக் கட்சி, எந்தவொரு பின்விளைவையும் யோசிக்காமல்தான் சர்வதேசத்துக்கு வாக்குறுதிகளை வழங்கியிருந்தது.

ஆனால், இதனை நிறைவேற்றிக்கொள்ள இன்னும் அரசாங்கத்தால் முடியாதுள்ளது. இவ்வாறு அரசாங்கத்தினால் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட இந்தப் பிரச்சினையால் இராணுவத்துக்குத்தான் தற்போது ஆபத்து ஏற்பட்டுள்ளது.

அதன் ஓர் அங்கமாக இராணுவத்துக்கு எதிராக வழக்குகளைத் தொடுக்கவும் அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறது.

இந்த செயற்பாடுகளில் பின்னணியில் புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் இருக்குமோ எனும் சந்தேகமும் எமக்கு ஏற்பட்டுள்ளது. மேலும், உண்மையை கண்டறியும் ஆணைக்குழுவொன்றை ஸ்தாபிக்கவும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இவ்வாறான செயற்பாடுகள் எல்லாம் எமது நாட்டுக்குப் பொருந்தாத ஒன்றாகும். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த வருட ஜெனிவாக் கூட்டத்தொடரின்போது சர்வதேச விசாரணைக்கு ஒருபோதும் அனுமதியளிக்கப் போவதில்லை என்றுத் தெரிவித்திருந்தார்.

அந்தவகையில், இவ்வருட இறுதிக்குள் நிச்சயமாக ஸ்தாபிக்கப்பட்டவுள்ள மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தின் ஊடாக, புதிய ஜெனிவாத் தீர்மானமொன்றைக் கொண்டுவர நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

இது இந்த அரசாங்கத்தில் நிறைவேற்றப்பட்ட ஜெனிவா பிரேரணையை விட முற்றிலும் மாறப்பட்டதாகும். தேசியம் மற்றும் இராணுவத்தினரின் சுயகௌரவம் மற்றும் உரிமைகளை பாதுகாக்கும் வகையிலேயே இந்த புதிய பிரேரணை அமையும்.

இதன் ஊடாக நாம் நல்லிணக்கத்துக்கு எதிராக செயற்படுகிறோம் என்று அர்த்தமில்லை. ஆனால், புலம்பெயர் தமிழ் அமைப்பினரின் தேவைக்கு இணங்க எம்மால் செயற்பட முடியாது. இதற்காகவே இந்த செயற்றிட்டத்தை நாம் கொண்டுவரவுள்ளோம் என கூறினார். (ம-3)


## பதவி வெற்றிடங்கள்

- அலுவலகச் செய்தியாளர்கள் (இருபாலாரும் - வெளிக்களம்)
  தகைமை - க.பொ.த (உயர் தரம்)
- முகாமைத்துவ உதவியாளர்கள் (பெண்கள்)
  தகைமை - க.பொ.த (சாதாரண தரம்)

தகைமையும் ஆர்வமும் உடையவர்கள் நாளை (20.02.2019) புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சுயவிபரக் கோவை கொண்ட விண்ணப்பத்துடன் நேரில் வரவும்.

**வலம்புரி, பொது முகாமையாளர்,**
**இல.3, 2-ம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.**

FLC FRENCH LANGUAGE CENTRE



# பிரெஞ்சு

(C-6495)

Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.

40, பலாலி வீதி, அரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 05.03.2019, செவ்வாய் 2.15 மணி

181, பிரதான வீதி, நெல்லியடி. 0779 789 456 / 0762 669 614 ஆரம்பம் : 06.03.2019, புதன் 3.30 மணி

திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1
IELTS, SPOKEN ENGLISH & இத்தாலி மொழி வகுப்புக்கள்.

## Personal Group Class

இரசாயனவியல் (A/L) 2019, 2020, 2021, Repeat Batch கடந்த கால Past Papers கற்பிக்கப்படும். சி.அங்கதன் B.Sc (Chem. Spl)

(7571)

தொடர்பு: 0771901245

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## அரியதோர் வேலைவாய்ப்பு

எமது DNMC நிறுவனமானது இயங்கி வரும் கிளைகள் மற்றும் புதிதாக ஆரம்பிக்கப்படும் கிளைகளுக்கான ஆட்சேர்ப்புத் திட்டத்தை ஏற்றுக் கொள்கிறது. O/L, A/L படித்த இளைஞர், யுவதிகள் தொடர்பு கொள்ளவும்.

- EPF, ETF வசதி வாய்ப்புக்கள் உண்டு.
- சம்பள அளவுத்திட்டம் 18,000/= - 38,000/=

(7587)

தொடர்பு: 077 123 7692, 021 567 9001

## வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கும் முன்னணி Hotel ஆன Tilko Jaffna City Hotel ற்கு பின்வரும் பணியாளர்கள் தேவைப்படுகின்றார்கள்.

- காசாளர் - (Restaurant Cashier)
- இரவு ஒழற்றர் - (Night Auditor)
- அறைபராமரிப்பு உதவியாளர் - Housekeeping assistant (Trainee)

அனுபவம் மற்றும் வயதிற்கேற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும்.
உணவு மற்றும் தங்குமிட வசதிகள் செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு:
077 769 6443 / 077 769 6553
tilko.tilak@gmail.com

(7585)

## காண்டம் பார்த்தல்

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் துல்லியமாக கணித்துத் தருகின்றோம்.

தொடர்பு: 076 835 1932, 021 223 2222 (உரும்பிராய்)

(7575)

## வீடு விற்பனைக்கு

பிரதான வீதி, மாதகலில் அமைந்துள்ள 1 1/2 பரப்பு காணியுடன் சகல வசதிகளுடனும் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. வாடகைக்கும் விடப்படும். உடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 0774940523

(7574)

## வேலைவாய்ப்பு

**Sun Travels and Holiday (Pvt) Ltd**

- Accountant - HND or A/L 3Passes (Jaffna)
- Office Staff - கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, பருத்தித்துறை, நெல்லியடி (இதனை அண்டிய பகுதியில் வசிப்பவர் விரும்பத்தக்கது)

சம்பளம் - 16,500/= + EPF

அனைத்து நாடுகளுக்குமான விமானப் பயணச் சீட்டுக்களும், Visit and Long stay visa Application Empassy Appoinment செய்து கொடுக்கப்படும். இலங்கைக்கான visa கால நீடிப்பு செய்து கொடுக்கப்படும். அனுபவம் உள்ளவர்கள் மற்றும் பழக விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 077 936 1427

(7581)

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி



- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY யின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம். www.ambafrance-lk.org

021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்

## விரைவு பொதிகள் சேவை

**விசேட விலை குறைப்பு**



(C-6439)

UK - 550 /=Kg
கனடா - 900 /=Kg
ஜேர்மனி - 700 /=Kg
நெதர்லாந்து - 700 /=Kg

DELIVERY IN 3-5 DAYS

0768226240

- மானிப்பாய்
- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி
- நெல்லியடி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை

V2 TRAVELS


## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



அமரர்
**கந்தசாமி கிருஸ்ணலிங்கம்**

20.01.2019 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவரின் மரணச் சடங்கில் கலந்து கொண்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கு நன்றி தெரிவிக்கின்றோம். அன்னாரின் அந்தியேட்டி கிரியைகள் கடந்த 17.02.2019 ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் கீரிமலை புனிததீர்த்தக் கரையில் நடைபெற்றது. வீட்டுக் கிருத்திய கிரியைகள் இன்று (19.02.2019) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்தி பிராத்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.*

ஆசிரியர்மணி ஆறுமுகம் வீதி,
கந்தரோடை,
சுன்னாகம்

தகவல்:
குடும்பத்தினர்.
021 224 0408

(4573)



பிரதேச அபிவிருத்தி வங்கி கிளிநொச்சி கிளை முகாமைத்துவ உதவியாளர்

அமரர் **தெய்வேந்திரன் பக்சன்** அவர்களின்

**3ம் ஆண்டு நினைவாக மாபெரும் சிரமதானப் பணி**

காலம் - 20.02.2019 காலை 8.00 மணி
இடம் - வல்லை இந்து மயானம்

மேற்படி சிரமதானப் பணியில் கரவெட்டி தெற்கு, மேற்கு பிரதேச சபை உறுப்பினர்கள் திரு.க.இரத்தினம், திரு.சி.ரூபாதரன் ஆகியோர் தலைமையில் நடைபெறும். இச்சிரமதானப் பணிக்கு அனுசரணையாளர் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம். அத்துடன் அன்றைய தினம் ஸ்ரீபரமானந்த சிறுவர், முதியோர் இல்ல மாணவர்களுக்கு மதியபோசன விருந்தளித்தலும் கற்றல் உபகரணங்கள் வழங்கலும் இடம் பெறும்

(7567)

குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.02.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.